விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 26 ஞாயிற்றுக்கிழமை (10.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 081

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவைகளைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-5686)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## சித்திரவதைகளை தடுப்பதற்காக
# ஐ.நா. உபகுழு ஒன்று இலங்கை வருகின்றது

(ஜெனிவா)

சித்திரவதைகளை தடுப்பதற்கான ஐ.நாவின் உபகுழு ஒன்று இலங்கைக்கு . பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. ஏப்ரல் மாத தொடக்கத்தில் இந்தக்குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளது. சித்திரவதைகளை தடுப்பதற்கான ஐ.நாவின் உபகுழுவின் இரகசியக் கூட்டத்திலேயே இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கான பயணம் குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது. (விரிவான செய்தி 03ஆம் பக்கம்)

## வெகுவிரைவில் ஆட்சி மாற்றம்
மீண்டும் மகிந்த



16

## ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக – கரு ஜயசூரிய

(கொழும்பு)

ஐ.தே.கவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக கரு ஜெயசூரிய போட்டியிடவுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவா அல்லது 15

## புலிகளை விட புகையிலை பயங்கரமானது
அமைச்சர் புத்திக

(கொழும்பு)

புகையிலை பொருட்களால் நாளொன்றுக்கு 55 பேர் மரணிக்கின்றனர். 15

## இலங்கை விவகாரங்களில் பிரித்தானியா தலையிடமுடியாது
ஜெனிவாவில் வலியுறுத்துவோம் – சரத் வீரசேகர




(கொழும்பு)

எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு பிரித்தானியாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறவுள்ளோம் என இராணுவத்தினரின் உரிமை 16

## ஜெனிவாவுக்கு படையெடுக்கும் கூட்டமைப்பு எம்.பிக்கள்
ஜனாதிபதி, பிரதமர் தரப்பும் தனித்தனியே பயணம்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் முதன்முறையாக இலங்கையிலிருந்து பெரும் அணிகள் சென்று கலந்து கொள்கிறார்கள். ஜனாதிபதி தரப்பு, பிரதமர் தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்தரப்பிலிருந்தே இந்த அணிகள் களமிறங்குகின்றன. இது தவிர வழக்கம் போல முன்னாள் படையதிகாரிகளை கொண்ட மகிந்த சார்பு அணியும் களமிறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 16

## துப்பாக்கிச் சூட்டில் இராணுவ வீரர் உயிரிழப்பு
முல்லையில் நேற்றிரவு சம்பவம்?

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.

துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த இராணுவ வீரன் யாழ் போதனா 15

## ஜெனிவாவில் சமர்ப்பிக்க வேண்டிய மக்களின் கோரிக்கை அடங்கிய கடிதம்
ஆளுநர் செயலகத்தில் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் சமர்ப்பிக்க வேண்டிய தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை. வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் அனந்தி சசிதரன் உள்ளிட்டோர் வட மாகாண 16



## காலஅவகாசத்தால் கூட்டமைப்பு சாதிப்பது என்ன? சுரேஷ் கேள்வி



(யாழ்ப்பாணம்)

சர்வதேச கண்காணிப்பு எனக்கூறி ஜெனிவாவில் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசத்தை வழங்குவதன் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனைச் சாதிக்க முனைகிறது என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச் 16

## ஐ.நா அறிக்கையை கூட்டமைப்பு வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள்மனித உரிமைகள்ஆணைக் குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் 16

## வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பிள்ளைகளை கேட்டு தாய்மார் அழுகின்றனர் – ஜனாதிபதி



(கொழும்பு)

பெண்கள் தினத்தில் தமது பிள்ளைகளை கேட்டு அழும் தாய்மார் நிலைமை வடக்கில் 16

## வடக்கு மக்கள் சார்பாக எதனையும் ஆளுநர் ஜெனிவாவில் பேச முடியாது
மீறினால் உடனடியாக நடவடிக்கை சுமந்திரன் எம்.பி எச்சரிக்கை



(கொழும்பு)

ஜெனிவா செல்லும் வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் ஜனாதிபதியின் முகவராக மட்டுமே உரையாற்ற வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரி 16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




### ஏன் நாங்கள் சிறப்பானவர்கள்

- இலங்கையின் அதிநவீன மற்றும் அதற்குறிய IVF வசதி.
- உங்களின் பாதுகாப்பு மற்றும் ஆதரவுடன் பணியாற்றுவதற்காக எங்களின் சிறந்த பயிற்சியளிக்கப்பட்ட நிபுனர்கள்.
- மிகவும் நம்பகமான மருத்துவமனையின் முன்முயற்சி "ஹேமாஸ் மருத்துவமனை".

### எங்களுடைய சிறப்பு சேவைகள்

- IVF செயற்கை முறை கருத்தரிப்பு
- ICSI இக்சி முறை கருத்தரிப்பு
- சிறப்பு லேப்ராஸ்கேப்பி சிகிச்சை முறை
- IUI கருப்பையில் விந்தனு உட்செலுத்துதல்
- விந்து உறைநிலைப்படுத்தல் மற்றும் விந்து வங்கி (Sperm banking)
- இனப்பெருக்கம் கண்டறிதல் (முப்பரிமாண அல்ட்ராசவுண்ட், HSG, மற்றும் பல...)
- கருவுருவாக்கல் சோதனை

செயற்கை முறை கருத்தரிப்பு ஆலோசகரின் இலவச ஆலோசனைகளைப் பெற்றுகொள்ளுவதற்கு 0763 147 663 / 0777 865 027 என்ற இலக்கத்திற்கு அழைத்து பதிவு செய்துகொள்ளவும்.

@ medicare 2019
வீரசிங்கம் மண்டபம் – யாழ்ப்பாணம்
மார்ச் 15ம்,16ம் மற்றும் 17ம் திகதிகளில்
ஹேமாஸ் மருத்துவமனை கருத்தரிப்பு நிலயம்

ஹேமாஸ் மருத்துவமனை - 389, நீர்கொழும்பு வீதி, வத்தளை, இலங்கை.
தொலைபேசி: 0117888888 தொலைநகல்: 0117888765
மின்னஞ்சல்: info@hemashospitals.com
இணையதளம்: www.hemashospitals.com

HEMAS HOSPITALS Fertility Centre

(7798)



## மணமக்கள் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் சூரியன், செவ்வாய் உள்ள மணமகளுக்கு என்சினியர், IT படித்த மணமகன் தேவை. மற்றும் படித்த மண மகன், மணமகள் தேவை.

**0094767250144, 0779924415**

(7918)



## வைத்திய சேவையும் பராமரிப்பும்

உங்கள் வயது முதிர்ந்த நோயாளர்களை வீடுகளில் வைத்து பராமரிப்பதில் கஷ்டப்படுகிறீர்களா? எங்கள் இடத்தில் வைத்து பராமரிக்கப்படுவர். Physio-therapy வசதியும் உண்டு.

அழையுங்கள்

**077 873 0129**

(7919)



## வாகனம் விற்பனைக்கு

TATA Super ACE அலுமினிய Body அடித்த வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**077 248 7617**

(C-5732)



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பொன்னையா கந்தசாமி


(ஓய்வுபெற்ற சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மருத்துவ பீடம்)



அன்னாரின் பிரிவினால் நாங்கள் மிகவும் வேதனையில் தவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரை இழந்து சோகத்தில் மூழ்கியுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம் (7992)

## 3ம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 17 . 07 . 1957

உதிர்வு 09 . 02 . 2019

### அமரர் எம்.ஐ.றமீன் (கிறிஸ்ரி)

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர், உரிமையாளர்: தனு எலக்றிக்கல்ஸ் அன் ஹாட்வெயார், பிரதான வீதி - சுயந்தன் மரக்காலை, கொழும்புத்துறை)

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்கு திடீரென அணைந்த துயரத்தை பகிர்ந்து கொள்ள எமது இல்லம் நாடி வந்து ஆறுதல் அளித்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசியூடாகவும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள், பிரசுரங்கள், பத்திரிகை வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்கள், இதர உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை (11.03.2019) முற்பகல் 11.15 மணிக்கு இடம்பெறும் இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

28/2, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. (7912) - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லையா சரஸ்வதி



தோற்றம் - 05.07.1936
மறைவு - 09.03.2019

புத்தூர் கிழக்கு, வாதரவத்தையை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா சரஸ்வதி அவர்கள் நேற்று (09.03.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான, நமசிவாயம் - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையா அவர்களின் பாசமிகு மனைவியும், நாகம்மா, சிவராணி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, குலசிங்கம், நவரத்தினம், பொன்னுச்சாமி, கனகம்மா மற்றும் நாகபூரணம் ஆகியோரின் மைத்துனியும், கணேசநாதன் (வேலை மேற்பார்வையாளர் - நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனியா), கணேசராசா (அலுவலக உதவியாளர்- யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), யோகேஸ்வரி, கணேசமூர்த்தி (லண்டன்), கணேசகுமார் (உதவி அத்தியட்சகர்- இல. துறைமுக அதிகார சபை, திருகோணமலை), கணேசவிநாயகம் (காசாளர்- வலி.கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், ஆவரங்கால், புத்தூர்), கிருஸ்ணரூபன் (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்புத் தாயாரும், நகுலேஸ்வரி, பத்மராணி (ஆசிரியர் - யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), அமிர்தகுலசிங்கம் (வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), சிவகுமாரினி (லண்டன்), ஸ்ரீகலைவாணி, புஸ்பலோஜினி, ஜெயப்பிரியா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜித் (இலங்கை வங்கி, மாங்குளம்), பிரியங்கா (யாழ் பல்கலைக்கழக விவசாய பீட மாணவி), அரவிந்தன் (கிராம சேவையாளர்- ஏழாலை தெற்கு ஜே/203), நிரோசன், ஜனகன், அம்சினி, ஆசினி, யர்சிகன், சஜீபன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோவில் வாசல்,
இனுவில் மேற்கு, இனுவில். (7920)

தகவல்: குடும்பத்தினர்
077 229 9735, 077 430 4891

"உச்சரிப்புப் பிழையால் ஹாவா ஆவா ஆனது"

# இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்கக்கிடைத்தமை வரப்பிரசாதம்

## சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு





(சாவகச்சேரி)

இரண்டாவது மொழியாக ஆங்கில மொழி கற்கக் கிடைத்தமை மிகப்பெரிய வரப்பிரசாதம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி. சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற மாணவர் நிழற்குடை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய மாணவர்களுக்கு இணையம் மூலம் கற்கக்கூடிய வசதி வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆங்கிலத்தை இணையத்தின் மூலம் கற்பதனால் இலகுவாகக் கற்க முடிவதுடன் உச்சரிப்பு முறைகளையும் தெளிவாகப்படிக்க முடியும்.

உச்சரிப்பு பிழை தான் ஹாவா என்ற சொல் ஆவா என மாறக் காரணம்.

இணையத்தில் ஆங்கிலத்தைக் கற்பதன் ஊடாக தமிழில் இல்லாத உச்சரிப்புக்களைக் கூட இலகுவாக கற்க முடியும். ஆசிரியர்கள் தவறாகக் கற்பித்தாலும் மாணவர்கள் இணையத்தின் உதவியுடன் அதனைச் சரிப்படுத்திக் கொள்ள முடியும்.

மாணவர்கள் கட்டாயம் இணையத்தில் பயில வேண்டும். தமிழ் சிறப்புக்குரியது தான். ஆனால் வெளி உலகிற்கு செல்லும் போது தமிழில் பேச முடியாது. சர்வதேச மொழிகளில் முதலிடம் பெற்றுள்ள ஆங்கிலத்தில் சரியாக உரையாடக் கற்றுக் கொண்டால் எங்கும் எதையும் சாதிக்க முடியும்.

எங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்கக் கிடைத்தமை. ஆங்கிலத்தை சரியாகப் படிப்பிக்கின்ற ஆசிரியர்கள் இருந்த காலம் போய் விட்டது. இப்போது ஆங்கிலம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு சரியாக ஆங்கிலம் தெரியாது.

மாணவர்கள் தொழில்நுட்ப வளர்ச்சி ஊடாக ஆசிரியர்கள் விடும் தவறை சரிப்படுத்திக்கொள்ள முடியும்.

எதிர்கால வாழ்வினை சுபீட்சப்படுத்திக்கொள்ள ஆங்கில அறிவு அத்தியாவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-30)

# ஹெரோயினுடன் ரயில் ஊழியர் கைது

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில்ஒருவர்நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹப்புத்தளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து விரைந்த பொலிஸார் ஹப்புத்தளை புகையிரத நிலையத்தின் ஊழியராக இருந்து வரும் 32 வயதுடைய நபரை பரிசோதனை செய்த போது அவரிடமிருந்து ஹெரோயின் போதை வஸ்துவை கைப்பற்றியதுடன் அந் நபரையும் கைது செய்தனர்.

குறித்த நபர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது புகையிரதப் பயணிகளுக்கும் இந்நபர் பகுதி நேரத்தில் ஆட்டோவொன்றைச் செலுத்துவதால் ஆட்டோவில் பயணிக்கும் வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளுக்கும்நீண்டகாலமாக ஹெரோயின் போதை வஸ்துக்களை விற்பனை செய்து வருவதும் தெரிய வந்துள்ளது.(இ)

# பொலிஸார் மீது கத்தி குத்து மீன் கடைக்காரர் கைது!

(பள்ளக்கட்டு)

சட்டவிரோத மீன் கடையொன்றை அகற்றுமாறு பொலிஸார் கூறி நடவடிக்கை எடுத்த போது மீன் கடைக்காரருக்கும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறியுள்ளது.

மீன்கடைக்காரர் மீன் வெட்டும் கத்தியால் பொலிஸாரை தாக்கியுள்ளார். பலத்த வெட்டுக் காயங்களுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஆபத்தான நிலையில் தியத்தலாவை அரசினர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலையடுத்து பொலிஸார் மீன் கடைக்காரரை கைது செய்ததோடு பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கிய மீன் வெட்டும் கத்தியையும் பறிமுதல் செய்தனர். இத்தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் மாலை பதுளைப் பகுதியின் பள்ளக்கட்டுவை நகரில் இடம்பெற்றுள்ளது.

பள்ளக்கட்டுவை நகரின் விஸ்தரிப்பு வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் எல்ல பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட போது சட்டவிரோத மீன் கடையை அகற்ற முற்பட்ட போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# விமானங்களைத் தாக்கி அழிக்கக்கூடிய துப்பாக்கிகள் மற்றும் 273 ரவைகள் மீட்பு

## இராணுவ உயர் அதிகாரி கைதாகி மறியலில்

(பதுளை)

விமானங்களைத் தாக்கி அழிக்கப் பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள் மற்றும் அதற்குரிய 73 சன்னங்கள் உள்ளிட்ட 5.81 மில்லி மீற்றர்களைக் கொண்ட 273 ரவைகள் ஆகியவற்றை கைப்பற்றிய பொலிஸார், இராணுவ உயர் அதிகாரி ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பதுளை - ரிதிமாலியத்தைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து பொலிஸார் நேற்று முன்தினம் ரிதிமாலியத்தை பொலிஸ் பிரிவைச்சேர்ந்த குருவிதென்னை என்ற இடத்தில் இராணுவ உயர் அதிகாரியொருவரது வீட்டைச் சுற்றி வளைத்து தேடுதல்களை மேற்கொண்டிருந்தனர்.

இத் தேடுதலின் போது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பொதியொன்றை பரிசோதனை செய்த போதே மேற்கண்ட வெடிப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருட்களின் உரிமையாளரென்று கருதப்படும் இராணுவ உயர் அதிகாரியையும் பொலிஸார் கைது செய்தனர். இவரை உடனடியாக மகியங்கனை மாவட்ட நீதிபதி ஏ.ஏ.லக்சான் முன்னிலையில் ஆஜர் செய்ததும், நீதிபதி அந்த இராணுவ உயர் அதிகாரியை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இராணுவ உயர் அதிகாரி, மன்னார் பகுதியின் பெரியமடு இராணுவ முகாமில் சேவையாற்றுபவர் எனத் தெரியவந்துள்ளது.

இவர் விடுமுறையில் வீடு சென்று தங்கியிருந்தவரென்று ஆரம்ப விசாரணையின் போது தெரிய வந்துள்ளதாக ரிதிமாலியத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரொசான் எஸ்.பந்துசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# விபத்தில் சிக்கிய இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(சாவகச்சேரி)



கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி மோதிய விபத்தில் காயமடைந்த இளைஞரொருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். அத்தோடு விபத்தில் காயமடைந்த மற்றையவர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்.

கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்துக்குள்ளாகி இரத்த வெள்ளத்தில் கிடந்த இருவரையும் யாரும் உடனடியாக மீட்க முன்வரவில்லை. இதனால் கொளுத்தும் வெயிலில் நீண்ட நேரம் விபத்துக்குள்ளானவர்கள் கிடந்துள்ளனர்.

பின்னர் ஆட்டோ ஒன்றில் ஏற்றப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந் நிலையில் சிகிச்சை பயனளிக்காததால் வைத்தியசாலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த குலேந்திரராஜா பிரியந்தன் (வயது-19) என்பவராவார். விபத்து இடம்பெற்று சில மணி நேரங்களின் பின்னரே பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை விபத்து இடம்பெற்று பொலிஸார் சம்பவ இடத்திற்கு செல்லும் முன், விபத்துக்கு காரணமான மோட்டார் சைக்கிளை ஒரு கும்பல் அங்கிருந்து எடுத்துச் சென்று விட்டது எனத் தெரியவருகிறது.

இந்நிலையில் இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.(இ-10-30-89)

# பொருத்தமற்றவர்களுடன் கைகோர்த்ததை மிகத் தாமதமாகவே உணர்ந்தார் மைத்திரி

## மக்கள் சந்திப்பில் மகிந்த வெளிப்படுத்தல்





(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொருத்தமற்றவர்களுடன் கூட்டணியமைத்தமையின் விளைவை மிகத் தாமதித்தே உணர்ந்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக பொதுஜன பெரமுனவினர் கண்டி நகரில் நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பை முன்னெடுத்திருந்தனர். இச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மகிந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தின் வல்லரசாகும் பொருளாதாரத் திட்டங்களுக்கு இடைக்கால அரசாங்கத்தின் 51 நாட்கள் தடைகளை ஏற்படுத்தியுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுவது அரசாங்கத்தின் இயலாமைத் தன்மையை மூடிமறைப்பதாகும் எனவும் மகிந்த தெரிவித்தார். (இ)

# சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐ.நா.உபகுழு இலங்கை பயணம்

சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐ.நாவின் உபகுழு இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. ஏப்ரல் மாத தொடக்கத்தில் இந்தக் குழு இலங்கைக்குப் பயணம்மேற்கொள்ளவுள்ளது.

இக் குழுவின் பயண நாட்கள் தொடர்பான விபரங்கள், மேலதிக விபரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. ஜெனிவாவில் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடந்த சித்திரவதையைத் தடுப்பதற்கான ஐ.நாவின் உபகுழுவின் இரகசியக் கூட்டத்திலேயே இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கானபயணம்குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக பிரித்தானியா, காபோன், செனகல், கானா, பல்கேரியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்யவுள்ளதாக அறிவித்திருந்த இந்தக் குழு தற்போது இலங்கை, ஆஜென்டீனா, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.(இ-7)

# வடக்கின் பெரும் போர் சமனிலையில் நிறைவு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வடக்கின் போரின் 113ஆவது அத்தியாயம் சமனிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக் கிழமை ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, சென். ஜோன்ஸ் கல்லூரியை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

டினோசன் 98, அபினாஸ் 24 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் இயலரசன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 195 ஓட்டங்களைப் பெற்றது.




இதன் மூலம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை விட, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 14 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

14 ஓட்டங்கள் பின்னிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்று முன்தினம் 2ஆம் நாளாட்டத்தில் விக்கெட் இழப்பின்றி 121 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய மூன்றாவதும் இறுதியுமான நாளாட்டத்தில் 2ஆவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை தொடர்ந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரரர்களான தனுயன 66, சௌமியன் 50 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் வி.விஜஸ்காந்த் 38 ஓவர்களில் 88 ஓட்டங்களை கொடுத்து 4, செ.மதுசன் 22 ஓவர்களில் 51 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

232 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி,

> போட்டியின் ஆட்டநாயகனாக விஜஸ்காந்த் (யாழ்.மத்தி), சிறந்த விக்கெட் காப்பாளராக சபேசன் (சென்.ஜோன்ஸ்), சிறந்த துடுப்பாட்ட வீரராக டினோசன் (சென்.ஜோன்ஸ்), சிறந்த பந்துவீச்சாளராக விஜஸ்காந்த் (யாழ்.மத்தி), சிறந்த களத்தடுப்பாளராக வினோஜன் (சென்.ஜோன்ஸ்), சிறந்த சகலதுறை வீரராக இயலரசன் (யாழ்.மத்தி)

ஆரம்ப இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்கள் வரை நிலைத்தது.

எனினும் அதன் பின்னர் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் சரிந்தன. இதனால் மத்திய கல்லூரி அணியின் ஓட்டக்குவிப்பு கட்டுப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை பெற்றிருந்தபோது ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் மத்திய வரிசை வீரர் மதுசன் 65 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் அபினாஸ் 11 ஓவர்களை வீசி 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (26)

*படங்கள் : ஐ.சிவசாந்தன்*


## துயர் பகிர்கின்றோம்



(7916)

### அப்புக்குட்டி நடராஜசுந்தரம்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பிரதி அதிபர் திரு.ரகுநாத் அவர்களுடைய அன்புத் தந்தை அப்புக்குட்டி நடராஜசுந்தரம் அவர்கள் மறைந்ததையிட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.குடாநாடு கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகி சிறுவர்களது போஷாக்கு நிலையில் ஏற்பட்ட ஆபத்தான நிலையை உணர்ந்து போஷாக்கு புனர்வாழ்வு நிலையத்தை உருவாக்கி சமூக மருத்துவபீட மாணவர்களை தீவிரமாகச் செயல்பட வைத்து பலநூறு இளம் தளிர்களது வாழ்வுக்கு வழிகாட்டிய

**வைத்திய கலாநிதி**

### நடராஜா சிவராஜா



(7911)

தோற்றம்: 12.04.1938 மறைவு: 06.03.2019

அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். சமூகத்துக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நிர்வாகமும் பணியாளர்களும்**
***சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்***
***254, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.***

## மரண அறிவித்தல்

பிறப்பு 2000 - 09 - 27



இறப்பு 2019 - 03 - 09

### குலேந்திரநாதன் பிரியந்தன்

யாழ்.கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலேந்திரநாதன் பிரியந்தன் அவர்கள் நேற்று (09.03.2019) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் குலேந்திரநாதன் (குலம்) - இராஜேஸ்வரி (இராசு) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் துஷ்யந்தன் (ரதன்), நிஷ்யந்தன் (நிசி), தவப்பிரியன் (ஜெனோ), தேனுஜா (தேனு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5734)

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

தகவல்:- கு.நிஷ்யந்தன்
077 263 8592

St John
Sri Lanka

## கண்ணீர் அஞ்சலி



(7921)

சென்.ஜோன் அம்புலன்ஸ்
யாழ்.மாவட்ட உதவி
ஆணையாளர்
திரு.**செ.ஸ்ரீலோகநாதன்**
அவர்களின் அன்பு மனைவி

**திருமதி**

### S. வசந்தகுலமணி

அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தினைத் தெரிவித்துக்
கொள்கிறோம்.

**மாவட்ட ஆணையாளர்,**
**உதவி மாவட்ட ஆணையாளர்கள்,**
**உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள்**
***சென்.ஜோன் அம்புலன்ஸ்***
***யாழ்.மாவட்டம்***

# பொதுமுகாமையாளர் முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், புதுக்குடியிருப்பு

# திரு.சின்னத்துரை வேதவனம் அவர்களின்

# மணிவிழா சிறப்பு மலர் - 10.03.2019



**ஆசியுரை**

மணிவிழா சிறக்க தான் தோன்றீஸ்வரனை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**அருட்திருசிவஸ்ரீ. றஞ்சித கீர்த்தி வாசக் குருக்கள்**
**பிரதம குரு, தான்தோன்றீஸ்வரர் தேவஸ்தானம், ஒட்டுசுட்டான்.**



**ஆசியுரை**

மணிவிழா நாயகனின் விழா சிறக்க ஆண்டவன் அருள் தர இறைஞ்சுகின்றேன்.

**அருட்திரு நிக்சன் கொலின் அடிகளார்**
**பங்குத்தந்தை, கூழாமுறிப்பு.**



**ஆசியுரை**

திரு.சி. வேதவனம்அவர்களின் மணிவிழா சிறப்புற ஆசிக்கின்றேன்.

**அருட்திரு.மௌலவி கே.எம்பி.முகைதீன்,தலைவர், முத்துஐயன் கட்டு இடதுகரை, ஒட்டுசுட்டான்.**



இன்று இடம்பெறும் மணிவிழா சிறப்படைய நாகம்மாளின் பாதங்கள் வேண்டி ஆசிக்கின்றேன்.

**திரு. கந்தையா சிவராசா (JP), தர்மகர்த்தா/பிரதம பூசகர், நாகம்மாள் ஆலயம், கற்சிலைமடு**



**வாழ்த்துரை**

மணிவிழா நாயகனின் மணிவிழா சிறக்க மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு.சி. சிவமோகன் (வைத்திய கலாநிதி), கௌரவ வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**



**வாழ்த்துரை**

திரு.சின்னத்துரை வேதவனம் அவர்கள் மணிவிழா சிறக்கவும் அவர் மேலும் சிறப்படையவும் வாழ்த்துகின்றேன்

**திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, கௌரவ வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**



**வாழ்த்துரை**

மணிவிழா நாயகன் திரு. சின்னத்துரை வேதவனம் அவர்கட்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**திரு.நா.வேதநாயகன், அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம்**

(C-5731)



**வாழ்த்துரை**

அகவை அறுபதில் கால் பதிக்கும் திரு. சின்னதுரை வேதவனம் அவர்களின் மணிவிழா சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு.**



**உயர்திரு சி.வேதவனம் (ஓய்வுநிலை பொதுமுகாமையாளர்)**
**பண்டாரவன்னியன் சிலையடி, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.**

**மணிவிழா நாயகன் பற்றிய தகவல்கள்**

**பெயர்:- திரு.சின்னத்துரை வேதவனம்**

**சேவை விபரம்**

- மேற்பார்வையாளர்-புதுக்குடியிருப்பு ப.தெ.வ.அ.கூ.ச. 01.07.1983-25.03.1985 வரை
- வெளிக்கள முகாமையாளர்-புதுக்குடியிருப்பு ப.தெ.வ.அ.கூ.ச 26.03.1985- 31.12.1987 வரை
- பொது முகாமையாளர்-ஒட்டுசுட்டான்ப.தெ.வ.அ.கூ. சங்கம் கற்சிலைமடு- 01.01.1988 - 14.08.1994 வரை
- பதில் பொது முகாமையாளர் வடமாகாண ப.தெ.வ. அ.கூ. நிறுவனங்களின் பேரிணையம். கிளிநொச்சி 05.02.2004-10.09.2005வரை
- பொது முகாமையாளர்-முல்லைத்தீவு மாவட்ட ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின்சமாசம் 15.08.1994 - 02.07.2018 வரை

**மணிவிழா நாயகன் கல்வி கற்ற விபரம்**


- ஆரம்பக்கல்வி: கற்சிலைமடு அ.த.க.பாடசாலை
- இடைநிலைக்கல்வி: ஒட்டுசுட்டான்கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்
- உயர்தரக்கல்வி:முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி

**மணிவிழா ஏற்பாட்டுக்குழு**



மணிவிழா நாயகன் திரு. சின்னத்துரை வேதவனம் அவர்களின் மணிவிழா சிறப்படையவும் அவர் உடல்.உள ஆரோக்கியத்தோடு குடும்பத்துடன் நலமே நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.நாகேந்திரராசா, அதிபர், மு.ஐ.க.வ.க. ம. வித்தியாலயம், தலைவர் மணிவிழா ஏற்பாட்டுக்குழு**



நண்பன் திரு.சி.வேதவனம் அவர்களின் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**திரு.நா.வன்னியசிங்கம் (சித்த ஆயுள்வேத வைத்தியர்) செயலாளர், மணிவிழா ஏற்பாட்டாளர்)**




மணிவிழா நாயகன் சின்னத்துரை வேதவனம் அவர்களின் விழா சிறக்க வாழ்த்துகின்றேன்

**திரு.சு.நாகராசா (சமூக ஆர்வலர்), பொருளாளர், கற்சிலைமடு.**



திரு.சின்னத்துரை வேதவனம் அவர்களின் மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றேன்.

**திரு.வை.சிவஞானலிங்கம் சமாதான நீதவான், திடீர் மரண விசாரணை அதிகாரி , ஒட்டுசுட்டான்.**



**வாழ்த்துரை**

மணிவிழாக்காணும் திரு. சி.வேதவனம் மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**திரு.சீ.ர.மோகன்றாஸ் அரசாங்க அதிபர், கச்சேரி, மன்னார்.**



**வாழ்த்துரை**

மணிவிழா நாயகனின் மேன்மைகள் மேலும் தொடர என் வாழ்த்துக்கள்

**தி.பொ.வாகீசன் , கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,கூட்டுறவுத் திணைக்களம், வடக்கு மாகாணம்.**



மணிவிழாக் காணும் திரு.சி.வேதவனம் அவர்கள் வாழ்வில் மேலும் உயர்வடைய வாழத்துகின்றேன்.

**திரு. கோ.தனபாலசுந்தரம், மேலதிக அரச அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு.**



**வாழ்த்துரை**

திரு.சி.வேதவனம் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்கவும் விழா சிறப்படையவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**திரு.தி. திரேஸ்குமார் மேலதிக அரச அதிபர் , கச்சேரி, வவுனியா.**



மணிவிழாக் காணும் திரு.சின்னத்துரை வேதவனம் மேலும் மேலும் சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.குணபாலன் மேலதிக அரச அதிபர், கச்சேரி, மன்னார்.**



மணிவிழா நாயகன் மேலும் சிறப்புக்களுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.யேசு றெஜினோல்ட், பிரதம கணக்காளர், கச்சேரி, முல்லைத்தீவு.**



மணிவிழா நாயகன் திரு சின்னத்துரை வேதவனம் அவர்களின் மணிவிழா சிறக்க என்வாழ்த்துக்கள்.

**திரு.சி.சுகீவா, உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ,வடக்கு மாகாணம்.**



என் மாணவன் திரு.சி.வேதவனத்தின் மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றேன்.


**திரு.ச.தில்லையம்பலம், ஓய்வுநிலை அதிபர்/கோட்டக் கல்விப்பணிப்பாளர்,ஒட்டுசுட்டான்**



என் நண்பன் திரு.சி.வேதவனம் அவர்களின் மணிவிழா சிறக்க என் வாழ்த்துக்கள்.

**திரு.அ.சிங்கநாயகம் கூ.அ. உ.ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம். முல்லைத்தீவு மாவட்டம்.**

# கழிவுகள் அகற்றப்படுவதில்லை



(யாழ்ப்பாணம்)

நெல்லியடி நகரப்பகுதியில் அமைந்துள்ள கழிவுகள் கொட்டப்படும் பிளாஸ்ரிக்கூடைகளில் கொட்டப்படும் கழிவுகள் அகற்றப்படாமல் கட்டாக்காலி நாய்களினால் தட்டி வீழுத்தப்பட்டுவதனால் வீதி ஓரங்களினால் செல்லும் பாதசாரிகளுக்கு இடையூறாக உள்ளது. பொதுமக்களும் தங்களுடைய வீடுகளிலுள்ள கழிவுகளைக் கொண்டு வந்து வீசி விட்டுச் செல்கிறார்கள். பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் கழிவுகளைப் போடுபவர்களுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-60)

# பட்டா ரக வாகனம் மோதியதில் சனசமூக நிலைய கட்டடம் சேதம்



(யாழ்ப்பாணம்)

மிருசுவில் தெற்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை பட்டா ரக வாகனம் ஒன்று சனசமூக நிலையக் கட்டடம் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வேகமாக வந்த வாகனம் கட்டுப்பாட்டினை இழந்து சனசமூக நிலையக் கட்டடம் மீது மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

விபத்தின் மூலம் சனசமூக நிலையக் கட்டடம் மற்றும் தளபாடங்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. வழமையாக குறித்த கட்டடத்தில் மாலை நேர வகுப்புகள் இடம்பெறுவதாகவும் வெள்ளிக்கிழமை என்ற காரணத்தால் வகுப்புகள் நடைபெறவில்லை எனவும் இதனால் தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் எவையும் ஏற்படவில்லை என்வும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-30)

# வேலணை பிரதேச சபையில் பல முன்னேற்றத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

சபையில் உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் அனைத்தும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு நிறைவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனாலும் சில பிரேரணைகள் துறைசார் தரப்பினரது கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும் அதற்கான பதில்கள் கிடைக்கப் பெறாமையால் அவற்றை செயற்படுத்துவதில் தாமதங்கள் காணப்படுகின்றன.

ஆனாலும் விரைவில் அதற்கான தீர்வுகளைக் காண முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என வேலணை பிரதேச தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் கடந்த ஆறு மாதகாலத்தில் முன்னெடுக்கப்பட்ட பிரேரணைகள் மற்றும் அவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் வகையில் விசேட கூட்டம் தவிசாளர் கரணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு வழங்கப்படும் குடிநீர் தொடர்பான பிரச்சினை, சாட்டி கடற்கரை படகுச் சவாரி பிரச்சினை, போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு, சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அதற்கான ஆலோசனைகளையும்சபையின்உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்தபின் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், சபையை நாம் பொறுப்பேற்றுக்கொண்ட இதுவரையான ஒருவருட காலப்பகுதியில் 155 பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருந்த நிலையில் அவற்றுள் 146 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குடிநீருக்கான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்பட பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து எமது சபைக்கு இரண்டு குடிநீர் பவுசர்களையும் பெற்றுள்ளோம்.

கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அதிக வளர்ச்சி கண்டுள்ளது என்பது எமது சபையின் ஆளுமைக்குக் கிடைத்த வெற்றியாகும் என தெரிவித்த அவர் பச்சை புகையிலை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பிலும் துறைசார் தரப்புகளுடன் பேசி அதற்கான தீர்வுகளை காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (5-7)

# சஜித்துக்கு புகழாரம் சூட்டினார் சிறீதரன்





(யாழ்ப்பாணம்)

முன்னாள் அமைச்சர் அமரர்ரணசிங்கபிறேமதாஸ வழியில் மகன் சஜித் பிறேமதாஸவும் வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று மூளாயில் இடம்பெற்ற 176 ஆவது மாதிரிக் கிராமமான பொன்னொளி நகர் கிராம வீட்டுத்திட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தினால் தமிழர் அதிகமாக வாழ்கின்ற வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களில் ஒன்றான வீடில்லாதவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சர் சஜித் பிறேமதாஸ முனைப்புடன்செயலாற்றுகின்றமைவரவேற்கத்தக்க விடயமாகும்.

மேலும் தற்போதைய அரசாங்கத்தினர் கட்சி வேறுபாடின்றி மக்களை இனம் கண்டு வீட்டுத் திட்டங்களை வழங்கக் துறைசார் அமைச்சர் என்ற ரீதியில் அவரது சேவைகள் தொடரவேண்டுமெனத் தெரிவித்தார். (5-10)

# அறநெறி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு யாழ்கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் இலவச அறநெறி வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறுகின்றது.

கற்க விரும்பும் மாணவர்கள் 021 320 5775 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஆலய தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளவும். (5-102)

# நெல்லியடியில் கடைகள் ஞாயிறும் திறக்கப்படும்

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட கடைகள் யாவும் இன்று ஞாயிற்றுக்கிழமையும் அடுத்து வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் திறந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாக சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

எதிர்பாராத விடுமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக வர்த்தகர்கள் எதிர்கொண்ட நெருக்கடியினையும் பொதுமக்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களையும்கருத்தில்கொண்டு மேற்கூறப்பட்ட இரண்டு ஞாயிற்றுக்கிழமைகள் மட்டும் திறந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. (ம-60)

# சேவை நயப்பும் மணிவிழாவும்

(யாழ்ப்பாணம்)

வேலணை வடக்கு கிராம உத்தியோகத்தர் காராளசிங்கம் கணேசலிங்கத்தின் சேவைநயப்புவிழாவும்மணிவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் வேலணை மத்திய கல்லூரி அதிபர் கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வு நிலை ஆசிரியர் த.அருணகிரிநாதன் வரவேற்புரையையும் ஆசியுரைகளை நல்லை ஆதீனம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமிஅறக்கட்டளையின்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்குவர். (5)

## இராசி பலன்

**மீனம்** – இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்** – உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்** – சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்** – முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், நீண்ட நாளைய பிணக்குகள் முடிவுக்கு வரலாம், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** – வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்** – பெற்றோர்களின் நலனில் அக்றை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்** – வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமை ஏற்படும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** – நெடுநாளைய கனவுகள் நனவாகும், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** – பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** – சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** – குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, எடுத்த காரியத்தில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**இராசி பலன்** – கிரகநிலை

செவ். சந் | ராகு | சூரி, புத | சுக் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம்: அத்தம், சித்திரை

10.03.2019

மாசி 26, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சதுர்த்தி பின்னிரவு 2.25 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 1.24 மணிவரை

சுபநேரம் 9.23-10.53 மணிவரை

இராகுகாலம் 4.53-6.23 மணிவரை

சதுர்த்தி விரதம்

வளவன்



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2019

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



Study Engineering with The Leader

Apply now for New Intake 2019

EQAA

HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

Duration • 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc DEGREE COMPLETION IN SRI LANKA

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

UGC RECOGNIZED

ice Institution of Civil Engineers

Entry Qualifications
- Higher National Diploma in Civil Engineering

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector



Cardiff Metropolitan University

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna

7th Batch In jaffna

This MBA is aimed at those who are looking to develop their careers and at 'High Flyers' that need and understanding of all the major functions of business.

In addition to enhancing successful student's career prospects. This programme is delivered in Sri Lanka at ICBT Campus and is the identical programme conducted in UK.

Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

• Classes only on Sundays

REGISTRATION NOW ON FOR MARCH INTAKE -2019

Teaching Excellence Framework TEF Silver

Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA | EQAA | National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013

More Information 0770 746 553 merojan@icbtcampus.edu.lk



World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2019

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk

# வாக்குறுதிகள் நிறைவேறியதன் பின்பே தேர்தலுக்கு செல்வோம்-ஐ.தே.க.உறுதி

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் கிடையாது எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சி, நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய பின்பே தேர்தலுக்குச் செல்வோம் எனவும் தெரிவித்துள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிலையான அரசாங்கத்தை அமைக்க வேண்டுமாயின் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளது பொருத்தமற்றதாகும்.

தற்போது நிலையான போட்டித் தன்மையற்ற அரசாங்கமே காணப்படுகின்றது. பாராளுமன்றத் தேர்தலை தற்போது நடத்த வேண்டும் என்று குறிப்பிடுபவர்கள், பாராளுமன்ற கலைப்பிற்கு எதிரான உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும் எனவும் நளின் பண்டார தெரிவித்தார். (இ)

# இலஞ்சம் பெற்ற குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி மறியலில்

(கொழும்பு)

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் அதிகாரியை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் கொழும்பு நீதவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

மாளிகாகந்தை நீதவானுக்கு வழங்குவதற்காக ஒரு இலட்சம் ரூபாய்ப் பணத்தை வர்த்தகர் ஒருவரிடம் இலஞ்சமாகக் கேட்டுள்ளதுடன், அதில் 80 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காசோலை மோசடி தொடர்பில் குறித்த வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்காதிருப்பதற்காகவே பொலிஸ் அதிகாரி இலஞ்சம் கேட்டுள்ளதுடன், முன்னதாக 5 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும் தெரியவருகிறது. (இ)

# ஆளுநரின் குறைகேள் நிகழ்வில் மட்டுவில் மக்களின் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்துதருமாறு அண்மையில் நடந்த வடமாகாண ஆளுநரின் பொதுமக்களுக்கான குறைகேள் நிகழ்வில் கிராமத்தின் சிரேஷ்ட பிரஜைகளால் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த மகஜரில் மட்டுவில் வடக்கில் உள்ள தேவாலய வீதி, பிலிப்ஸ் வீதி, அரசடி வீதி ஆகியன புனரமைக்கப்பட வேண்டும் எனவும் நுணாவில் சந்தி தொடக்கம் கனகம்புளிச் சந்தி வரையான வீதியில் மானாவளைப் பகுதியில் மின்குமிழ்கள் பொருத்தப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்ததாகவும் வீதிகளுக்கான வேலைகளை எதிர்வரும் மே மாதம் ஆரம்பிப்பதாகவும் வீதி விளக்குகள் வெகு விரைவில் போடப்படும் எனத் தமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் கிராமத்தின் சிரேஷ்ட பிரஜைகள் தெரிவித்துள்ளனர். (5-30)

# போதைப்பொருள் கடத்தி வரப்படும் பிரதான கடல் மார்க்கம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குள் போதைப் பொருள் கடத்தி வரப்படும் பிரதான கடல் மார்க்கத்தை கண்டுபிடித்துள்ளதாக முப்படைகளின் அலுவலக பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்தார்.



அத்துடன் கடல் மார்க்கமாக நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டுவரப்படுவதைத் தடுக்க சிறப்புத் திட்டங்கள் கடற்படையினர் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே யுத்தத்தின்போது புலிகளின் படகுகளை நடுக்கடலில் வைத்து அழித்ததைப் போல் போதைப் பொருட்களை கடத்தும் படகுகளையும் அழிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத் தளபதி லெப்டினன்கொமாண்டர் மகேஷ் சேனநாயக்க, கடற்படைத்தளபதிவைஸ் அட்மிரல் பியல் டி சில்வா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். (இ)


பழமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



+ ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
+ பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
+ கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
+ காணி விற்பனையில் பிரச்சினையா?
+ வியாபார முன்னேற்றம்
+ வீட்டில் ஒற்றுமை உண்டாக
+ பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



### வேலை வாய்ப்பு

1. Room Boy/Waiters

N.B இத்துறையில் முன் அனுபவம் அல்லது அடிப் படை படிப்பு அவசியம்.

தொடர்பு: SUBHAS HOTEL (7908)
49,VICTORIA ROAD, JAFFNA
T.P: 077 727 8630,021 222 4923



### மணமகள் தேவை

கைதடி-மானிப்பாய் இந்து கௌரவ குடும்பம் 1990 பூரம் U.K யில் படித்து வந்து கொழும்பில் சொந்தமாக வர்த்தகம் செய்யும் அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை.

**021 221 9538** (7789)


## University of Jaffna, SriLanka
## Faculty of Arts

### Walk- in- interview

Walk in Interview for the appointment to the **Temporary Assistant Lecturer in History** will be held in the **Mini Board Room of the Faculty of Arts**, University of Jaffna, on **15th March 2019, at 9.30 am**

**Minimum requirements/Qualifications for the Post of Temporary Assistant Lecturer/Temporary Demonstrator/ Temporary Instructor**

1.A degree with specialization in the relevant subject with First or Second class (upper division) Honours.

**Or**

2.A degree with specialization in the relevant subject with Second Class (Lower division) Honours.

**Or**

3.(a) A degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours **and**

(b) a recognized postgraduate degree in the relevant subject.

4.Candidates who are awaiting results for the final degree examination may also be present.

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer/ Temporary Instructor | Rs. 40,324/- p.m (fixed) |

Interested candidates with the required qualifications are expected to be present for the interview for the above mentioned posts with educational and any other relevant certificates (originals) along with certified copies, National identity Card and Curriculum Vitae.

**Registrar**
**University of Jaffna**

(C-5724)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 10 ¾
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L, Canada
எதிர்பார்ப்பு:A/L,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9431

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 75 செவ் 7 இல் உயரம்:5'8"
தகைமை/தொழில்:Dip.in Civil Engineering, Technical Officer (அரச)
எதிர்பார்ப்பு: அரச தனியார்தொழில், உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9432

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 33 ¼ செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L, Australia
எதிர்பார்ப்பு: O/L,விவாகரத்து ஏற்கக் கூடிய திருமணமாகாதவர்கள்,உள்நாடு
தொ.இ: B/9433

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 63 செவ் 12 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்:B.Com, Accountant, Australia
எதிர்பார்ப்பு: IT Field, Engineeer, Doctor, Accountant,Nurse,உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9439

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 கிறிஸ்தவம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.Com பட்டதாரி அரச கணக்காளர்
எதிர்பார்ப்பு: கிறிஸ்தவம் முக்கியம் படித்த உத்தியோகத்தர்,உள்நாடு
தொ.இ: G/9446

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3செவ் 2இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L, சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9448

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9451

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூசம் செவ் 8 இல்
உயரம்: 152cm
தகைமை/தொழில்:A/L, சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/9452

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஜனாதிபதி கொலைச் சதி; நாலகவின் மனு நிராகரிப்பு



(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் பிணை கோரிய மீளாய்வு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் படுகொலை சதித்திட்டம் தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முக்கிய பிரமுகர்கள் படுகொலை சதித்திட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஜனநாயக போராட்டங்களை ஒடுக்க சட்டம் இயற்றும் நடவடிக்கையில் அரசு

## பல்கலை.மாணவர்கள் எதிர்ப்பு

(வந்தாறுமூலை)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு - வந்தாறுமூலை வளாகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

புதிதாக கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த காலங்களிலிருந்த பயங்கரவாத தடைச்சட்டத்தைவிட தற்போது கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொடூரமானதென மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தச் சட்டத்தால் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் கோரி ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்த முடியாதநிலை ஏற்படுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

# வரி செலுத்த வேண்டிய பத்து இலட்சம் பேரில் 3 இலட்சம் பேரே முறையாகச் செலுத்துகின்றனர்

## நிதியமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் வரி செலுத்த வேண்டியவர்கள் பத்து இலட்சத்திற்கும் மேலுள்ள போதும் மூன்று இலட்சம் பேரே அதில் கவனம் செலுத்துவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாட்டில் 100 இற்கு 80 வீத மக்கள் மறைமுக வரியைச் செலுத்துவதாகவும் 20% மானோரே நேரடி வரியைச் செலுத்துவதாகவும் குறிப்பிட்ட அமைச்சர் அவ்வாறானோரும் வரி செலுத்துவதில்லை என்றும் தெரிவித்தார்.

வரிகள் தொடர்பில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரலெழுப்புவோரில் பெரும்பாலானோர் வரி செலுத்துவதில்லை. பொருளாதாரம் பற்றிப் பேசுவோர் தாம் பெற்றுக்கொண்டுள்ள வங்கிக் கடனைக்கூட செலுத்தாத நிலையே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வரி செலுத்த வேண்டியது ஒரு சமூகக் கடமையாகும். அனைவரும் வரி செலுத்துவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். நம் மக்களில் பெரும்பாலானோர் எல்லாவற்றையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளவே எதிர்பார்க்கின்றனர்.

அவ்வாறு சகலரும் நினைத்தால் சம்பளம் உட்பட அரசாங்கம் எங்கிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளுமென இவர்கள் யோசிப்பதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ரூ.700 கோடி பெறுமதியான இரத்தினக்கல் அரசுடைமை!



(கொழும்பு)

அண்மையில் கொழும்பின் புறநகர்ப் பகுதியொன்றில் மீட்கப்பட்ட 700 கோடி ரூபாய் பெறுமதியான இரத்தினக்கல்லை அரசுடைமை யாக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாகந்துரே மதூஷ் தலைமையில் செயற்படும் பாதாளக் குழுவிடமிருந்து 700 மற்றும் 200 கோடி ரூபாய் பெறுமதியான இரு இரத்தினக் கற்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இதில் 700 கோடி ரூபாய் பெறுமதியான இரத்தினக்கல், சுங்க.சட்டத்தை மீறி இரகசியமாக சவுதியில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன் உரிமையாளர் யார் என்பதை நிரூபிப்பதற்கு சட்டரீதியான ஆவணங்கள் இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினக்கல் விற்பனையாளரிடமுள்ள ஆவணங்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இரத்தினக்கல் உரிய நிறுவனத்திடம் சமர்ப்பித்து ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளன.


பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் தொடர்பில் துறைசார் நிறுவனத்திடம் சமர்ப்பித்து, மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இரத்தினக் கல்லின் பெறுமதி மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளை 11 ஆம் திகதி முழுமையான விபரங்களை வெளியிடுவதாக இரத்தினக்கல் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# பிசுபிசுத்துப் போன மகிந்தவின் கண்டி பேரணி மைத்திரியும் வரவில்லை கோத்தாவும் தலைகாட்டவில்லை

(கண்டி)

அரசாங்கத்துக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கண்டியில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் நடத்தப்பட்ட பேரணியில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரோ பங்கேற்கவில்லை.



முன்னதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்தே இந்தப் பேரணியை நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அத்துடன் முன்னாள் பாதுகாப்புச் செலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முதல் முறையாக இந்தப் பேரணியில் அரசியல் மேடையில் ஏறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், தமக்கு அழைப்பு வரவில்லை என்றும், தாம் இந்தப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என்றும் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் நடத்தப்பட்ட கூட்டணிப் பேச்சுக்கள் இன்னமும் இறுதி செய்யப்படாத நிலையில், இந்தப் பேரணியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தவிர்த்துக் கொண்டுள்ளது.

தமது கட்சியைச் சேர்ந்த எவரையும் இந்தப் பேரணியில் பங்கேற்கக் கூடாது என்று சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடுத்துள்ளார்.

இதனால் நேற்று முன்தினம் நடந்த பேரணியில் கூட்டு எதிரணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் மாத்திரமே பங்கேற்றிருந்தனர். (இ)

# மேல் மாகாணத்தில் 222 சாரதிகள் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மது போதையில் வாகனம் செலுத்திய 222 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைய இந்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# “சிவனொளிபாதமலை” என்று பெயர்ப்பலகையில் மாற்றம்

(மஸ்கெலியா)

கடந்த 2017 ஆம் ஆண்டு சிவனொளிபாத மலை அடிவாரத்தில் குறிப்பிட்ட சிலரால் சிவனொளி பாத மலையின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந் நிலையில் மஸ்கெலியா பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களும் சபை ஒன்றுகூடலின் போது ஏகமனதாகத் தீர்மானம் மேற்கொண்டு சபை அங்கீகாரத்துடன் கடந்த காலங்களில் இருந்ததைப் போல் சிங்கள மொழியில்




"சிரிபாதய" என்றும், தமிழ் மொழியில் “சிவனொளி பாதமலை" என்றும் ஆங்கில மொழியில் “சிரிபாதய" என்றும் பெயர்களை உள்ளடக்கியதாக பெயர்ப் பலகை ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இனவெறியர்களால் இனவாதம் தூண்டிவிடப்பட்டுள்ள நிலையில் இது விடயமாக மஸ்கெலியா இந்துமாமன்ற செயலாளர் ஜனாதிபதி காரியாலய செயலாளருக்கு தொலைபேசி வாயிலாக அறிவித்ததை தொடர்ந்து அவர் உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும் அவர் தொலைபேசி வாயிலாக கூறுகையில், இன முறுகலை தவிர்க்குமாறும் அவ்வாறான பெயர்ப்பலகை வைப்பதில் தவறில்லை எனத் தெரிவித்ததோடு சகல தரப்பினருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆளுநரால் இந்த பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு

(மாவனல்ல)

மாவனல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனாகம பிரதேசத்தில் வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 37 வயதுடைய ஒருவர் காயமடைந்துள்ளதுடன், அவர் மாவனல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை கைது செய்வதற்காக மாவனல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)

# விசா இன்றி தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் கைது

(இரத்மலானை)

விசா அனுமதியின்றி நாட்டில் தங்கியிருந்த இரண்டு வெளிநாட்டவர்களைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இரத்மலானை காமினி ஒழுங்கை பிரதேசத்தில் இரண்டு வெளிநாட்டவர்கள் தங்கியிருப்பதாக கல்கிஸை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் மாலை தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசா அனுமதியின்றி தங்கியிருந்த வெளிநாட்டவர்களை கைது செய்துள்ளனர்.

21 மற்றும் 35 வயது நைஜீரிய பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# தமிழர்களின் நிலத்தைப் பிரித்தெடுக்க ஹரீஸுக்கு யார் அதிகாரம் கொடுத்தது

## த.தே.கூ.எம்.பி.கோடீஸ்வரன் கேள்வி



(கொழும்பு)

கல்முனை வடக்கு பிரதேச சபையை தரமுயர்த்துவதற்கு பிரதமர் உறுதியளித்துள்ள நிலையில் அதனை தடுக்க ஹரீஸ் எம்.பி. யார்? தமிழர்களின் நிலத்தை, காணிகளைப் பிரித்தெடுப்பதற்கு இவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கூடாது, பிரிக்கக்கூடாது என ஹரிஸ் எம்.பி. முன்வைத்திருந்தார். இது தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்கள் நிர்வாக ரீதியான ஒரு அலகைப் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றனர். 1999ஆம் ஆண்டிலிருந்து இந்த பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது. இதற்குத்தேவையான ஆளணி சேவைகள் வழங்கியுள்ள நிலையில் அதனை தரமுயர்த்தும் நடவடிக்கை தடுக்கப்படக் கூடாது.

இவர்கள் தமது வங்குரோத்து அரசியலை முன்னெடுப்பதற்காக எமது தமிழ் பிரதேசங்களை தரமுயர்த்துவதில் தடையாகவுள்ளனர்.

இது கவலைக்குரியதும் வேதனைக்குரிய விடயமாக உள்ளது. இங்கு 29 தமிழ் பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேச செயலகத்தை தரமுயர்த்தாமல் தடுப்பதற்கு இவருக்கு யார் இந்த அதிகாரங்களை கொடுத்தது. தமிழர்களின் நிலத்தை, காணிகளை பிரித்தெடுப்பதற்கு இவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது எனவும் கோடீஸ்வரன் கேள்வி எழுப்பினார். (இ)



கேலிச்சித்திரம்

# திறமையான பெண் சிறப்பான உலகினைப் படைக்கிறாள்

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல்பிற்பகல்ஒரு மணி வரை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பருத்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம், சிறப்பு விருந்தினராக வட. இந்து மகளிர் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் அன்னபாக்கியம் கனகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# அரச ஊழியர்களுக்கு உள்ளக விமான சேவை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு உள்ளக விமான சேவை வசதியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய அரச ஊழியர்கள் உள்ளக விமானம் மூலம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, சிகிரியா, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களுக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


இலங்கையிலுள்ள அனைத்து அரச ஊழியர்களுக்கும் உள்ளக விமான சேவை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 180 | 200 |
| தக்காளி | 50 | 40 | 35 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 80 | 60 |
| கோவா | 30 | 30 | 60 | 60 |
| கரட் | 80 | 80 | 85 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 75 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 50 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 90 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 90 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 40 | 100 |
| பயற்றங்காய் | 140 | 120 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 80 |
| பீற்றூட் | 80 | 50 | 35 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 300 | 400 |
| போஞ்சி | 100 | 100 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 70 | 70 | 55 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 70 | 60 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 15 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 15 | 30 |
| ஈரப்பலா | — | — | 100 | 80 |

# ஜனாதிபதி தலைமையில் மாணவர் கௌரவிப்பு விழா





(கொழும்பு)

2017 மற்றும் 2018ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள சக்யா உயர் கல்வி நிறுவனத்தின் மாணவ, மாணவியரை பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியெய்திய சக்யா மாணவ, மாணவியருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி, பரீட்சைகளில் வெற்றி பெறுவதைப்போன்று வாழ்க்கையிலும் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டல்களை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டியது தனியார் கல்வி நிறுவனங்களின் பொறுப்பாகுமெனவும் தெரிவித்தார்.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி சான்றிதழ்களை வழங்கினார். (இ)

# நீரிலும் நிலத்திலும் செல்லும் அதிநவீன கப்பலை இயக்கி பெண்கள் சாதனை

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்திலிருந்து சென்னை வரை, நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய அதிநவீன ரோந்து கப்பலை முதன் முறையாக இயக்கி, இரண்டு பெண்கள் சாதனை படைத்துள்ளனர்.

இந்திய கடலோரப்படையின் ஹோவர் கிராஃப்ட் கப்பலில் துணை மாலுமியாக பணிபுரிந்த அனுராதா சுக்லா மற்றும் ஸ்ரீரின் சந்திரன் ஆகிய இருவரும் முதன் முறையாக, இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் இருந்து சென்னைக்கு ஐ.சி.ஜி. ஹோவர் கிராஃப்ட் எனப்படும் நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய அதிநவீன ரோந்து கப்பல் மூலம் புறப்பட்டனர்.

மணிக்கு 300 நாட்டிகல் மைல் வேகத்தில் காரைக்கால் மற்றும் புதுச்சேரி வழியாக இரண்டு நாட்கள் பயணித்து, சர்வதேச பெண்கள் தினமான நேற்றுமுன் தினம் மதியம் 1.21 மணிக்கு சென்னை துறைமுகம் சென்றனர்.



குறித்த பெண்களை இந்திய கடலோரப்படை அதிகாரிகள் வரவேற்றனர்.

இதுகுறித்து அனுராதா சுக்லா தெரிவித்ததாவது,

"கடந்த 6ஆம் திகதி மதியம் ஒரு மணிக்கு நாங்கள் காரைக்கால் சென்று விட்டோம். ஆனால், மோசமான வானிலை காரணமாக மேற்கொண்டு எங்களால் பயணத்தை தொடர முடியவில்லை. அதனால், நேற்றுமுன்தினம் காலை 7 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு, மதியம் 1.21 மணிக்கு சென்னை சென்றடைந்தோம்" என்றார். இது குறித்து கடலோரப் படை அதிகாரி ஒருவர் கூறுகையில்,

"கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஹோவர் கிராஃப்ட்டை இயக்குவதில் பெண்கள் துணை மாலுமியாகவே மட்டுமே செயற்பட்டுள்ளனர். ஆனால், மாலுமி மற்றும் துணை மாலுமியாக இருவரும் பெண்களாக இருந்து இயக்கியது இதுவே முதல் முறை. எதிர்பாராத விதமாக, சர்வதேச பெண்கள் தினத்திலேயே இவர்கள் குறித்த சாதனையை படைத்ததில் பெரும் மகிழ்ச்சி" எனத் தெரிவித்தார். (இ)

# தபால் பரிவர்த்தனை நிலையத்தில் 2002 போதை மாத்திரைகள் மீட்பு

(கொழும்பு)

போதை மாத்திரைகள் அடங்கிய பொதி ஒன்று கொழும்பு தபால் மத்திய பரிவர்த்தனை நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மெட்ரம்பேமடின் என்ற வகையைச் சேர்ந்த 2002 போதை மாத்திரைகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ)

## "தேர்தலுக்காக வெறுப்பைத் தூண்டும் மோடி"

# பாகிஸ்தான் போரை விரும்பவில்லை



## பிரதமர் இம்ரான்கான் தெரிவிப்பு

(லாகூர்)
தனது மண்ணிலோ, உலகின் வேறு எந்த நாடுகளிலும் பயங்கரவாதத்தை பாகிஸ்தான் அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திலுள்ள சாச்ரோ நகரில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் இம்ரான்கான் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் மேலும் உரையாற்றிய அவர்,

தனது மண்ணிலோ, அல்லது உலகின் வேறு எந்த நாடுகளிலும் பயங்கரவாதத்தை பாகிஸ்தான் அரசு ஒருபோதும் அனுமதிக்காது. தற்போது இருப்பது புதிய பாகிஸ்தான். எங்கள் நாட்டில் முதலீட்டையே நாங்கள் விரும்புகின்றோம்.

நமது புதிய பாகிஸ்தான் வளமுடனும் ஸ்திரத்தன்மையுடனும் அமைதியுடனும் திகழ வேண்டும். சர்வதேச சமுதாயத்தில் ஒரு பொறுப்புள்ள நாடாகத் திகழ பாகிஸ்தான் விரும்புகிறது. எனவே இங்கு எந்த ஒரு பயங்கரவாத இயக்கத்தையும் அனுமதிக்க மாட்டோம்.

பாகிஸ்தானிடம் பிடிபட்ட இந்திய விமானி அபிநந்தனை திருப்பி அனுப்பி வைத்தோம். ஏனெனில் நாங்கள் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகின்றோம். எனவே மீண்டும் அந்தத் தகவலை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளோம்.

புல்வாமாவில் நடந்த தாக்குதல் குறித்து நடத்தப்படும் விசாரணைக்கு உதவ நாங்கள் தீர்மானித்து இருக்கிறோம். இது பயத்தால் அல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

புதிதாக வளர்ந்து வரும் பாகிஸ்தானில் வறுமையை ஒழிக்க வேண்டும். கொள்கைகள் அனைத்தும் நமது மக்களுக்காக, அவர்களின் நலனுக்காக எடுக்கப்படுகிறது. தேசிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் தீர்மானித்துள்ளன. எனவே ஆயுதம் ஏந்தும் எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பாகிஸ்தானில் செயற்பட அனுமதிக்க முடியாது.

நான் பிரதமரானதும் இந்தியப் பிரதமர் மோடியுடன் பேசினேன். துணைக் கண்டத்தில் ஏராளமான ஏழை மக்கள் இருக்கிறார்கள்.

நமது பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வோம். சமாதானம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தி வறுமையை அகற்றுவோம் என்றேன்.

ஆனால் பிரதமர் மோடி தேர்தலுக்காக மக்களிடம் வெறுப்பை பரப்புகிறார். அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. பாகிஸ்தானில் சிறுபான்மையினராக வாழும் இந்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள் என பிரதமர் இம்ரான்கான் மேலும் தெரிவித்தார். (இ)

# பேச்சியம்மாள் ஆலய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் தெற்கு அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறும்.

இதனையடுத்து பதினொராம் நாள் பங்குனி உத்தரத்தில் சங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (5)

# புவனேஸ்வரி அம்பாள் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)
மாதகல் பாணாகவெட்டி அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதின்னான்கு நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

இதில் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)

# பெண்கள் எழுச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
உலகப் பெண்கள் எழுச்சி நாள் மார்ச் 8 ஐ முன்னிட்டு பெண்கள் எழுச்சி நிகழ்வு நாளை மறுதினம் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் அமைச்சின் செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.செல்வராணி நிக்கொலஸ்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வர். (5)

# நோர்வே இராஜாங்கச் செயலர் மகிந்தவைச் சந்திக்காதது ஏன்?



(கொழும்பு)
நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க செயலர் மரியன் ஹகென் இறுக்கமான நிகழ்ச்சி நிரல் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவில்லை என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்திருந்த நோர்வேயின் வெளி விவகார இராஜாங்கச் செயலர் மரியன் ஹகென் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவில்லை என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல குற்றம்சாட்டியிருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட நோர்வே தூதரகப் பேச்சாளர்,

"கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான சுமார் 7 மில்லியன் டொலர் நிதியுதவியை அறிவிக்கவும் வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் பகுதிகளைப் பார்வையிடவுமே குறுகிய பயணமாக நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்கச் செயலர் கொழும்பு வந்திருந்தார்.

அவரது வருகை, வடக்கிற்கான பயணத்துடன் தொடர்புடையது. அவரது நிகழ்ச்சி நிரல் மிகவும் இறுக்கமானதாக இருந்தது.

இது பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் தவிர, எதிர்க்கட்சித் தலைவரையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் சந்திக்கத் தடையாக அமைந்தது" என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## படை அதிகாரி என்று பாரபட்சம் பார்க்க முடியாது

# குற்றத்துக்கான தண்டனையை கொடுத்தேயாக வேண்டும்-சரத்



(கொழும்பு)
ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்தி கப்பம்பெற்ற கடற்படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்தி கப்பம் பெற்றதாகக் கூறப்படும் குற்றத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதியின் குற்றச்சாட்டு உண்மையென்றால் அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாம் இராணுவத்தை பழிவாங்கவில்லை. யாரையும் தண்டிக்கவில்லை. எனினும் தனிப்பட்ட குற்றங்களை செய்த இராணுவத்தினரைத் தண்டிக்க வேண்டும். இப்போது 11பேர் கடத்தல் மற்றும் கப்பம் பெற்று குற்றத்தில் முன்னாள் கடற்படை தளபதி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அப்படி செய்துள்ளாரென்றால் அவரையும் தண்டிக்க வேண்டும். அவர் பாதுகாப்பு அதிகாரி என்பதற்காக அவரை பாதுகாக்க முடியாது. குற்றத்துக்கான தண்டனையை கொடுத்தேயாக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வெள்ளப்பெருக்கில் சிக்கி மலாவியில் 30 பேர் பலி!

## ஒரு இலட்சம் மக்கள் பாதிப்பு





(பிளான்டையர்)
மலாவியில் இடைவிடாமல் கனமழை பெய்து வரும் நிலையில், வெள்ளத்தில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவியில் கடந்த சில தினங்களாக பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகள் தண்ணீரில் தத்தளிக்கின்றன.


சுமார் ஒரு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு முக்கிய பாலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து பொதுமக்கள் மீட்கப்பட்டு அரசு அமைத்துள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 11 மாவட்டங்களில் அதிகளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். 11 பேரைக் காணவில்லை. இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் மீட்புப் பணியில் இணைந்துள்ளனர்.

இதற்கிடையே காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதால், அடுத்த வாரம் வரை மழைபெய்யும்என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அகதிகள் 25 பேர் பலி!



(மெக்சிகோ சிட்டி)
மெக்சிகோவில் அகதிகளை ஏற்றிச் சென்ற லொறி கவிழ்ந்த விபத்தில் 25 பேர் பரிதாபமாக பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மெக்சிகோவிலுள்ள கிளபாஸ் மாநிலத்தில் மத்திய அமெரிக்க அகதிகளை ஏற்றிக் கொண்டு லொறி ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் 50 இற்கும் மேற்பட்டோர் இருந்தனர்.

சோயலோ என்ற பகுதியில் செல்லும்போது லொறி சாரதியின் கட்டுப்பாட்டையிழந்தது. இதனால் வீதியில் கவிழ்ந்து விழுந்தது.

இந்த விபத்தில் லொறியில் பயணம் செய்த 25 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு சென்ற மீட்புப் படையினர் போக்குவரத்தை சீர்செய்தனர். காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

லொறி கவிழ்ந்த விபத்தில் 25 பேர் பலியானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவத்தையொட்டி துப்புரவுப் பணிகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் துப்பரவுப்பணிகள் முன்னெடுக்கப்ட்டு வருகின்றன.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 14ம் திகதி வியாழக்கிழமை விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதி இரவு விசேட பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் பல பாகங்களிலிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தரும் இவ்வாலயத்தின் புனித தன்மை கருதியும் பக்தர்களின் நன்மை கருதியும் இந்த புனித பிரதேசத்திற்குள் மதுப்பாவனை மற்றும் பொலித்தீன் பாவனை என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலயத்தின் சூழல் கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொது மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

நேற்று பகல் முரசுமோட்டை ஊரியான், கோரக்கன் கட்டு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களால் துப்புரவுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (2-315)

# மாந்தை மேற்கில் வேலைத்திட்டங்கள் 2.1 மில்லியன் நிதியொதுக்கீட்டில் ஆரம்பம்



(மன்னார்)

கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடாக மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 2.1 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் சன்னார் கற்பக விநாயகர் ஆலய புனரமைப்புப் பணிகள், ஈச்சலவக்கை மீனாட்சி அம்மன் ஆலயம், பெரியமடு கிறிஸ்து அரசர் ஆலயம், விடத்தல்தீவு அடைக்கல மாதா ஆலயம் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுகளில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் இணைப்பாளர் ப.மதன், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் மாந்தை மேற்கு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஆலய நிர்வாகத்தினர் என பலர் கலந்து கொண்டு குறித்த வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர். (2-285)

## நான்கு மீனவர்கள் பிணையில் விடுதலை

# கைப்பற்றப்பட்ட மீன்களின் மாதிரிகைகள் பகுப்பாய்விற்கு அனுப்பி வைப்பு

மன்னார் காட்டாங் பத்தரி இறங்குதுறையில் டைனமற் வெடி பொருள் பாவித்து பிடிக்கப்பட்ட மீன்கள் கொண்டு வரப்படுவதாக கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில் மன்னார் கடற்றொழில் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த கடற்றொழில் திணைக்கள அலுவலர்கள் அங்கு வலைகளோ மற்றும் வேறு மீன்பிடி உபகரணங்கள் எதுவும் அற்ற நிலையில் மீன்கள் படகுகளில் இருப்பதை அவதானித்ததுடன் அலுவலர்கள் மேற்படி மீன்கள் வெடிபொருள் பயன்படுத்திப் பிடிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மீன்கள், படகுகள் வெளி இணைப்பு இயந்திரம், மண்ணெண் ணெய் கான் என்பவற்றை கைப்பற்றியதுடன் அவ்விரு படகுகளுடன் சென்றதாக உரிமை கோரிய மீனவர்கள் நான்கு பேரையும் கைதுசெய்து நேற்று முன்தினம் மன்னார் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தி வழக்குத்தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரணை செய்த நீதவான் கைப்பற்றப்பட்ட மீன்களின் மாதிரிகளை நாரா நிறுவனத்திற்கு பகுப்பாய்வு செய்வதற்கு அனுப்பி வைக்குமாறு மேற்படி திணைக்கள அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்ததுடன் மீன்கள் விற்றுப் பெற்ற பணத்தையும் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்களையும் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு கட்டளையிட்டார். இதேவேளை சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்தார். (2)

# காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் மன்னாரில் விரைவில் திறக்கப்படும்

(மன்னார்)

காணாமல்போனோர் தொடர்பான பணியகத்தின் வடக்குக்கான முதலாவது பிராந்திய அலுவலகம் மன்னாரில் திறக்கப்படவுள்ளது.

இந்த அலுவலகம் எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக பணியகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தெற்கில் மாத்தறை மாவட்டத்தை மையப்படுத்தி கடந்த 2 ஆம் திகதி இந்த அலுவலகம் திறக்கப்பட்டது.


வடக்கு, கிழக்கு, தெற்கு உட்பட நாட்டில் 8 பிராந்திய அலுவலகங்களை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ள காணாமல்போனோர் பணியகம், இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வருடத்துக்குள் இறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே காணாமல்போனோர் பணியகம் அமைக்கப்பட்டது.

பணியகத்துக்கான தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களை 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார்.

கடந்த காலத்தில் காணாமல்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விபரங்களை அறிந்துகொள்ளவும் தகவல்களை உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே இக்குழுவின் நோக்கமாகும். (2-285)

# பேருந்து நிலைய நுழைவு பகுதியிலுள்ள வடிகானின் மேல் மூடி பலத்த சேதம்



(மன்னார் )

மன்னார் நகர் மத்திய சுற்றுவட்ட பகுதியிலுள்ள வடிகான்களின் மூடியானது பராமரிப்பு இன்றி சேதமடைந்த நிலையில் காணப்படுவதனால் பொது மக்கள் மற்றும் வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மன்னார் மத்திய பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள அரச பேருந்து சேவை நிலையத்தின் நுழைவு பகுதியில் உள்ள வடிகானின் மேற்பகுதி சேதமாகி காணப்படுகின்றது

பிரதான பாதைகளை ஒன்றிணைத்து அதன் ஓரத்தில் தொடுக்கப்பட்டுள்ள குறித்த வடிகான் மேல் பகுதியிலுள்ள மூடியானது பாதி உடைந்த நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து அம் மூடிக்கு பொருந்தாத முறையில் சாதாரணமாக அவ் வடிகாலானது தற்காலிகமாக பல நாட்களாக மூடப்பட்டு காணப்படுகின்றது

அதே நேரத்தில் குறித்த வடிகான் மூடிகளே பாதசாரிகள் கடவையாகவும் காணப்படுகின்ற நிலையில் உரிய தரப்பினர் இதுவரை குறித்த கால்வாயை திருத்தம் செய்யவில்லை என்பதை காணக்கூடியதாகவுள்ளது

அதே நேரத்தில் அவ் வடிகானூடாகவே அரச பேருந்துகள் பயணிக்கின்றன. அதே போன்று அவ் உடைந்த வடிகானை அருகிலே ஆட்டோ சாரதிகளுக்கான தரிப்பிடமும் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தபட்ட அதிகாரிகள் உடனடியாக குறித்த வடிகானை உரியமுறையில் அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-285)




# இலங்கை தமிழரசுக் கட்சி மூலக்கிளை தெரிவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - கரைதுறைப் பற்றுப் பிரதேசசபைப் பிரிவுக்குட்பட்ட, குமுழமுனை வட்டாரத்திற்குரிய, இலங்கை தமிழரசுக் கட்சியின் மூலக்கிளை, நேற்றுப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டது.

குமுழமுனை வட்டாரத்தினுள் குமுழமுனை கிழக்கு, குமுழமனை மத்தி, குமுழமுனை மேற்கு, ஆறுமுகத்தான் குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

இதன்போது புதிதாக குமுழமுனை வட்டாரத்திற்குரிய மூலக்கிளைக்கு தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உப செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் எனத் தெரிவுகள் இடம்பெற்றதுடன், இலங்கை தமிழரசுக்கட்சிக்கு புதிதாக அங்கத்தவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டனர். (2-281)

# பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்; சர்வதேச பெண்கள் தினத்தில் ஆராய்வு




(கிளிநொச்சி)


சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பசுமை பூங்காவில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்து கொண்டிருந்தார்.

பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் வெளிப்படுத்தும் பெண்கள் மாநாடாக குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் பெண் மாவீரர்களான மாலதி, அங்கயற்கன்னி ஆகியோரின் படங்களும் தியாகி அன்னை பூபதியின் படமும் வைக்கப்பட்டு உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பெண்களுக்கு பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்களில் ஐம்பது வீதம் பெண்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தி வந்ததாக தெரிவித்தார். இதேவேளை புதிதாக பதவி ஏற்ற கனேடிய பிரதமர் ஐம்பது வீதம் அமைச்சரவையில் பெண்களுக்கு வழங்கி ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தார்.

நடந்து முடிந்த தேர்தலிலும் பெண்களுக்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டமை தொடர்பிலும்- போராட்ட வரலாற்றில் பெண்கள் ஆற்றிய பங்கு தொடர்பிலும் கருத்து தெரிவித்திருந்தார். (2)

# பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரி கணனி அறை திடீரென தீப்பற்றியது



(குருமன்காடு)

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரியில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து சுமார் ஒரு மணிநேர போராட்டத்தின் பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

விபுலானந்த கல்லூரியின் கணனி அறையில் திடீரென் தீ பற்றி எரிந்துள்ளது. அதனையடுத்து பாடசாலை சமூகத்தினர், பண்டாரிக்குளம் பொலிஸார் மற்றும் வவுனியா நகர சபை தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பண்டாரி க்குளம் பொலிஸார் பாடசால மாணவர்களை பாதுகாப்பாக வெளியேற்றினார்கள்.

அதன் பின்னர் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினர் சுமார் ஒரு மணிநேர போராட்டத்தின் பின் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். கணனி அறையில் ஏற்பட்ட மின்னொழுக்கினால் தீவிபத்து நேர்ந்திருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத்தீ விபத்து காரணமாகக் கணனி அறையில் இருந்த கணனிகள், கதிரைகள் என்பன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன. (2-250)

உண்மை ஒருநாள் வெல்லும் இந்த உலகம் உன் பெயர் சொல்லும்.

~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல்வாதிகளை விட அவர்கள் தெளிவாக உள்ளனர்

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழ் இனத்தை அழிக்கும் யுத்தம் நடந்தபோது மௌனம் காத்தவர்கள் இப்போது அரசாங்கத்தின் பக்கம் நின்று தமிழினத்துக்கு துரோகம் செய்கின்றனர்.

இத்தகையவர்களோடு ஒப்பிடுகையில் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் தமிழ் மக்களின் விடயத்தில் மிகத் தெளிவாக உள்ளனர் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் இழைக்கப்பட்ட அக்கிரமத்தை சனல் 4 தொலைக்காட்சி மிகத் துல்லியமாக ஆவணப்படுத்தியிருந்தது.

சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப் படுத்தல் இலங்கையில் போர்க்குற்றம் நடந்ததற்கான சான்றாதாரமாகும்.

எனினும் அதுபற்றிப் பேசுவதற்கும் அதனை மீள்பார்வைக்கு உட்படுத்துவதற்கும் எங்களிடம் எவரும் இல்லை என்பதே இன்றைய நிலைமையாகும்.

தவிர, இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் பன்னாட்டு தொண்டு நிறுவனங்களும் ஐ.நா மனித உரிமை ஆணையம் போன்ற சர்வதேச பொது அமைப்புகளும் அவ்வப்போது தமது அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த அறிக்கைகள் இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடூரத்தின் உச்சத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

இதுபோன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்களாக இருந்தவர்கள் இலங்கை தொடர்பில் விடுத்த அறிக்கைகளை ஆராய்ந்தால், இலங்கையில் மனிதப் பேரவலம் நடந்தமை உறுதிப்படுத்தப்படும்.

இவற்றுக்கு மேலாக 2019ஆம் ஆண்டுக்கான ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் விடுத்த அறிக்கையில், இலங்கை அரசு வழங்கிய உத்தரவாதத்தை நிறைவேற்றவில்லை என்றும் இலங்கை ஏமாற்றுகிறது எனவும் பதிவிடப்பட்டுள்ளதுடன்,

இலங்கை அரசின் நிலைமை இவ்வாறு தொடருமாயின் சர்வதேச சட்ட வரம்புகளுக்கு அமைய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரை செய்துள்ளார்.

ஆக, ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையைக்கூட நமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்ற தன்மையும் நம் அரசியல் தலைமையிடம் இல்லை.

இதனால் தமிழினம் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாமல் இழப்புக்களை மட்டுமே சுமந்து நிற்கின்றது.

ஆம், ஐ.நா மனித உரிமை ஆணையத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இலங்கை அரசு ஏமாற்றுகிறது என்று மனித உரிமை ஆணையாளர் எடுத்துரைக்க,

நம்மவர்கள் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுங்கள் என்று கூறுவார்களாயின் நம் இனத்தின் எதிரிகள் நம் இனத்துக்குள்ளேயேயன்றி வேறெங்குமில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

## படையினருக்குப் பெரும் நிதி

# பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஒன்றுமில்லை

### டக்ளஸ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிய ஆட்சியாளர்களும் இந்த அரசாங்கத்தை தாமே ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்கள் என்றும், தாமே தற்போதும் ஆட்சியை முண்டு கொடுத்து பாதுகாத்துக் கொண்டிருக்கின்றோம் என்றும், தமது ஆலோசனைகளின் அடிப்படையிலேயே அமைச்சரவைத் தீர்மானங்களும், வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளும் தீர்மானிக்கப்படுவதாகக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் 2019 ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் படையினருக்கும், அவர்களின் சேம நலன்களுக்குமே பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் சமூகத்தில் பல துயரங்களைச் சுமந்து வாழும் அனைத்து முன்னாள் தமிழ்ப் போராளிகளுக்கும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் எந்தவிதமான உதவிகளும் முன்மொழியப்படவில்லை.

படையினரின் நலன்களுக்கும் அவர்களின் குழந்தைகளின் எதிர்காலம் என்றெல்லாம் சிந்தித்த அரசாங்கமும், அதற்கு முண்டு கொடுப்பவர்களும் யுத்தப் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வடக்கு, கிழக்கில் வாழும் அங்கவீனமானவர்களையும் அநாதரவானவர்களையும் கைம்பெண்களை சிந்தித்துப் பார்க்கவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களை தோற்கடிக்கப்பட்டவர்களாகவும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் நடத்தும் அரசுகளால் எவ்வாறு இனங்களுக்கிடையே உண்மையான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்?

அரசின் வெற்றுக்கோஷமான தேசிய நல்லிணக்கத்தை ஏற்றுக்கொள்ளவோ, தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்து சுயலாப அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மன்னிப்பதற்கோ தமிழ் மக்கள் இனியும் தயாராக இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஓமந்தையில் புதிதாக திறக்கப்பட்ட

## மதுபானசாலையை மூட கோரி மக்கள் போராட்டம்

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலையை மூடுமாறு அப்பகுதி மக்கள் முற்றுகைப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். இதனால் பதற்றமான நிலை ஏற்பட்டு கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

நேற்று மாலை 4 மணியில் இருந்து இரவு 7 மணி வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி, சைவ வழிபாட்டுத்தலம், அம்மாச்சி உணவகம், வவுனியா தெற்கு பிரதேச சபை உப அலுவலகம் என்பவற்றை அண்மித்து ஓமந்தை ஏ9 வீதியில் புதிதாக மதுபானசாலை ஒன்று நேற்று திறக்கப்பட்டது.

குறித்த மதுபானசாலையை திறப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்ற நிலையில் அப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள், கிராம மக்கள் அதனை எதிர்த்து வந்தனர்.

இருப்பினும் மதுபானசாலையை அமைத்த நபர் தனது அரசியல் மற்றும் பொருளாதார பலத்தை வைத்து ஒரு சிலரின் அனுமதியைப் பெற்று அப்பகுதியில் மதுபானசாலை ஒன்றினை அமைத்துள்ளார். இதனை திறந்து வியாபாரம் செய்ய முற்பட்ட நிலையில் ஒன்று திரண்ட மக்கள் மதுபானசாலையை மூடுமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். மதுபானசாலைக்கு செல்லும் வாயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டமையால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த ஓமந்தைப் பொலிஸார் கலகம் அடக்கும் பொலிஸாரை வரவழைத்து நிலைமையை கட்டுக்குள் வைத்திருந்தனர்.

இந்நிலையில் மக்களின் அழுத்தம் காரணமாக எதிர்வரும் திங்கட்கிழமை அரச அதிபருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கும் வரை மதுபானசாலையை தற்காலிகமாக பூட்டுவதற்கு உரிமையாளர்கள் இணங்கியதுக்கு அமைவாக 7 மணியளவில் மதுபானசாலை பூட்டப்பட்டது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ம-250)

*மனைவியின் 20 பவுண் நகையுடன்*

## 16 வயது சிறுமியுடன் தலைமறைவான 28 வயது இளம் குடும்பஸ்தர்

திருமணமான நபர் ஒருவர் 16 வயதுச் சிறுமியுடன் கடந்த வாரம் தலைமறைவாகியுள்ளார்.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த திருமணமான 28 வயதுடைய ஒருபெண்பிள்ளையின் தந்தையே இவ்வாறு தலைமறைவாகியுள்ளார்.

தனது மனைவியின் 20 பவுண் பெறுமதியான தங்க நகைகளை அடகுவைப்பதாகக் கூறி நபர் குறித்த சிறுமியுடன் தலைமறைவாகியுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மனைவி நெல்லியடிப்பொலிஸில்முறைப்பாடு செய்துள்ளார். (ம-10,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில லக்ஸபானா வீதி, தோணிக்கல் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பெரிய கரைசல் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

## கொள்ளைக் குற்றச்சாட்டில் அரியாலையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்கங்குளப் பகுதியில் நகை திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரால் விற்கப்பட்ட நகைகளில் சுமார் 7 தங்கப் பவுண் உருக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள நகைத் தொழிலகம் ஒன்றில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்பு பொலிஸ் பிரிவினரால் சந்தேகநபர் பூம்புகாரிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"கடந்த டிசம்பர் மாதம் அரியாலை புங்கங்குளப் பகுதியில் உள்ள வீடொன்றின் புகைக்கூடு வழியாக உள்நுழைந்த திருடன், வீட்டிலிருந்த 5 பவுண் நகையினை திருடிக் கொண்டு அயலில் உள்ள வீடொன்றின மதில் பாய்ந்து தப்பித்துள்ளார்.

அயல் வீட்டில் பெண்ணொருவரைக் கண்ட சந்தேகநபர் அந்தப் பெண் அணிந்திருந்த ஒரு பவுண் தங்க சங்கிலியையும் அபகரித்துத் தப்பித்துள்ளார்.


இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலானசிறப்புபொலிஸ் பிரிவு நடத்திய விசாரணையில் சந்தேகநபர் இனங்காணப்பட்டார்.

இதன்படி நேற்று அதிகாலை பூம்புகார் பகுதிக்குச் சென்ற சிறப்பு பொலிஸ் குழு அவரை கைது செய்துள்ளது.

விசாரணையின் பின்னர் அவரை சான்றுப் பொருளுடன் நீதவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(ம-3)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- இறைவன் கூறுகின்றான்: வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்கள் புண்ணியவான்கள் ஆவர்!
- (நபியே!) இம்மக்கள் எவற்றையெல்லாம் (உமக்கு எதிராக) புனைந்துரைக்கின்றார்களோ அவற்றின் மீது பொறுமை கொள்வீராக! மேலும், கண்ணியமான முறையில் அவர்களை விட்டும் விலகி விடுவீராக! பொய்யென வாதிடுபவர்களான இந்த சுகவாசிகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுவீராக!
- நீங்கள் தண்டிக்கக் கருதினால் உங்கள் மீது எந்த அளவுக்கு அக்கிரமம் புரியப்பட்டதோ அதே அளவுக்குத் தண்டியுங்கள். ஆயினும், நீங்கள் பொறுமையாக இருப்பீர்களாயின் திண்ணமாக இதுவே பொறுமையைக் கடைப்பிடிப்பவர்களுக்கு மிகச் சிறந்ததாகும்.
- நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்: சண்டையில் பிறரை வீழ்த்துபவன் அல்லன் வீரன் கோபத்தை அடக்குபவனே வீரன்.

**சிங்கள வகுப்பு**

அரச, தனியார் ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் சிங்கள மொழி இலகுமுறையில் பேச, எழுத கற்றுத்தரப் படும். ஒரு வகுப்புக் கட்டணம் 50/=

**தொடர்பு: 071 015 7709**



**வீடு விற்பனை**

பிரம்படி லேன், கொக்குவிலில் 2 பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**076 702 3565**


# தோல்வியில் இருந்து மீள்வோம் இந்திய அணித்தலைவர் விராட்



அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான மூன்றாவது போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு முதல் பாதியில் சொதப்பியது தான் என்று அணியின் தலைவர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான மூன்றாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் ராஞ்சியில் நடைபெற்றது.

இதில் முதலில் ஆடிய அவுஸ்திரேலியா அணி 313 ஓட்டங்கள் குவித்தது. அதன் பின் ஆடிய இந்திய அணி வெற்றியின் அருகில் 48.2 ஓவரில் 281 ஓட்டங்கள் எடுத்து ஆலவுட்டாகியது.

இந்நிலையில் இப்போட்டியின் தோல்வி குறித்து ஹோலி கூறுகையில், முதல் இன்னிங்ஸின் முதல் பாதியில் சொதப்பிய நாங்கள் கடைசிக்கட்டத்தில் சிறப்பாக விளையாடியது மகிழ்ச்சியாக இருந்தது.

அவுஸ்திரேலியா அணியும் மிக அற்புதமாக விளையாடியது.

அவுஸ்திரேலியா அணி எப்படியும் 350+ ஓட்டங்களை எங்களுக்கு இலக்காக நிர்ணயிக்கும் என்று தான் நினைத்தோம். ஆனால் அதற்கு முன்னதாக அவுஸ்திரேலிய அணியை கட்டுப்படுத்தியது மகிழ்ச்சிதான். அவுஸ்திரேலியா பட்டிங் கில் மட்டுமல்லாமல் பந்து வீச்சிலும் சிறப்பாக செயற்பட்டதே நேற்றைய போட்டியில் அவர்களின் வெற் றிக்கான காரணம்.

இந்த வெற்றிக்கு அவர்கள் நிச்சயம் தகுதியானவர்கள். இந்த தொடர் முடிவடைய இன்னும் இரண்டு போட்டிகள் உள்ளன. நாங்கள் நிச்சயம் முழு பலத்துடன் தோல்வியில் இருந்து மீண்டு வருவோம் என்று கூறியுள்ளார்.(க)


# கண்ணீர் அஞ்சலி



## வைத்திய கலாநிதி ஆறுமுகம் சிவபாதம்

மலர்வு 16.09.1942

உதிர்வு 08.03.2019

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் தர்மகர்த்தா சபைத் தலைவரும் பரம்பரை அறங்காவலரும் இருபது வருடங்களுக்கு மேலாக ஆலய தர்மபரிபாலன சபைத் தலைவராக இருந்து மூன்று மஹா கும்பாபிஷேகங்களைச் செய்வித்து சிறந்த சமய சமூகப் பணிகள் செய்து தன்னலங்கருதாது வைத்திய சேவை புரிந்து மக்களுக்கு தொண்டனாக பணியாற்றிய வைத்திய கலாநிதி ஆறுமுகம் சிவபாதம் அவர்களின் மறைவு எம் எல்லோரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா தங்குசங்களைத் தாய் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் பாத நிழலில் சங்கமமாக அம்பிகையை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சுதுமலை, மானிப்பாய்.

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.



# இதய அஞ்சலி



## அமரர் சிவஸ்ரீ தாணு ஹரிஹரசுப்பிரமண்யகுருக்கள்

தர்ம சாஸ்தா குருகுல ஆசிரியரும், வேத, சிவாகம, ஜோதிட விற்பன்னரும், அதிபர் சிவஸ்ரீ தாணு மஹாதேவக் குருக்களின் தம்பியாருமான அமரர் சிவஸ்ரீ தாணு ஹரிஹரசுப்பிரமண்யக்குருக்களின் மறைவு சைவத் தமிழ் உலகிற்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா கண்ணகா பரமேஸ்வரியின் பாத நிழலில் பிரம்ம மேதாவை அடைய இதய அஞ்சலி செய்கின்றோம்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சுதுமலை, மானிப்பாய்.

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை நவரத்தினம்

### (ஓய்வுநிலை ஆசிரியர்)



வடமராட்சி அல்வாய் கிழக்கு, நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் இல.34, மகாத்மா வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நவரத்தினம் (நவம் மாஸ்டர்) அவர்கள் நேற்று முன்தினம் (08.03.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், கந்தையா, காலஞ்சென்ற கந்த சபேசன், சாந்தி, சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாணிதாசன் (லண்டன்), வாணி, வாணிதரன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்கா (லண்டன்), சிற்பரன் (ஆசிரியர்), பாமா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், கேதீசன், சதீசன், ஜசிந்தா, கீர்த்தனா, காஞ்சனா, அர்ச்சனா ஆகியோரின் பெரிய தந்தையும் பரசுதன், கிரிசுதன், மேனகா, கோபிகா, துஷித்தா, துவாரகன் ஆகியோரின் தாய்மாமனும், சேயோன், லக்ஸ்மன், கண்ணன், மீனாட்சி, அபிலாஷ், அச்சுதன், ஆரணி, மிதுரா, வர்சினி, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10:03.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.34, மகாத்மா வீதி, நெல்லியடி.**

**தகவல் : குடும்பத்தினர் 021 226 3069**

(கி-5733)

# சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

க.மயில்வாகனம் எழுதிய மெய்ப்பொருள் காண்பது அறிவு எனும் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தச்சந்தோப்பு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம் பெறும்.

நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் ச.பவளகுமாரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (ம)

## புலிகளை விட...

ஆனால் யுத்தத்தின்போது நாளொன்றில் சுமார் 40 பேரே மரணித்துள்ளனர். அதனால் விடுதலை புலிகளின் யுத்தத்தைவிட புகையிலை நிறுவனங்களே பயங்கரவாதிகளாகும் என கைத்தொழில் வாணிபம் மற்றும் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் புத்திக பத்திரன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இந்த வருடத்துக்கான வரவுசெலவுத்திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பின் நான்காவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் கலப்படம் இருப்பதை நான் ஆதாரத்துடன் நிரூபிப்பேன். இன்று சுப்பர் மார்க்கட்களில் உள்நாட்டு பால்மாக்களை மறைத்து வைத்து இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களை மாத்திரம் நுகர்வோரின் பார்வைக்கு காட்சிப் படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று சிறுவர்களின் இனிப்புப் பொருட்கள் வைத்திருக்கும் இடத்தில்தான் சிகரெட் பெட்டிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளை நிறுத்த எமது நுகர்வோர் அதிகாரசபையின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## ஜனாதிபதி வேட்ப...

சஜித் பிரேமதாசவா என்ற கேள்விகள் எழுந்து வரும் நிலையில், இவர்கள் இருவரையும் தவிர்த்து கரு ஜயசூரிய ஜனாதிபதி வேட்பாளராக தீர்மானிக்கப்பட்டு விட்டார் என்ற தகவலை. ஐ.தே.கவின் நம்பிக்கையான தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, அந்த விடயம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

சில நாட்களின் முன்னர், ரணில்- மகிந்த சந்திப்பு நடந்தபோது, ஐ.தே.கவின் சார்பில் கரு போட்டியிடுவார் என்ற தகவலை மகிந்த விடம் சொல்லியிருந்தார்கள் என்பதையும், மகிந்த போட்டியிடுவதற்கு வாய்ப்பான சட்டத் திருத்தங்களை செய்ய தயாராக இருப்பதாக ஐ.தே.க கூறியிருந்தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## துப்பாக்கிச் சூட்டி...

வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று இரவு உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

உயிரிழந்த இராணுவ வீரரின் பெயர் விபரம் மற்றும் துப்பாக்கிச் சூட்டு காரணம் என்பன.இச்செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கப் பெறாததோடு இச்செய்தியை சரியான முறையிலும் உறுதிப்படுத்த முடியவில்லை. (ம-3-9-10-101)

# ரயர் வெடித்ததில் கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வான் விபத்து

## இருவர் படுகாயம்

(கரணவாய்)

ரயர் வெடித்ததில் யாழ் நகரில் இருந்து நெல்லியடிக்கு சென்று கொண்டிருந்த ஹயஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள கடையின் கேற்றினை உடைத்து உள்ளே நுழைந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது இரண்டு பேர் படுகாயமடைந்து கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். (ம-60)



# அரியாலை மணல் கடத்தல் முறியடிப்பு சாரதி தப்பியோட்டம் - ஒருவர் கைது

யாழ்.அரியாலை - பூம்புகார் பகுதியில் மணல் கடத்தல் சம்பவம் ஒன்று முறியடிக்கப்பட்டுள்ளதுடன். கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில், உழவு இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் ஆகியவற்றை சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸார் மடக்கிப் பிடித்த நிலையில் சாரதி ஒருவர் தப்பியோடியுள்ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவால் இந்த மணல் கடத்தல் நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு முறியடிக்கப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை, பூம்புகார் பகுதியில் நள்ளிரவு வேளையில் மணல் கொள்ளை இடம்பெறுவதாகவும் அது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மக்களால் குற்றம்சாட்டப்பட்டது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் பூங்புகார் பகுதியில் நள்ளிரவு சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

# பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 80 ஆயிரம் கல்வி டிப்ளோமாப் பட்டதாரிகள் பணிபுரிகின்றனர். இவ்வருட இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 90 ஆயிரமாக அதிகரிக்கப்படுமென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை அலரிமாளிகையில் நடைபெற்ற தேசிய போதனா பீட டிப்ளோமா பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பிரதமர் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், உலகை வெற்றிகொள்ளக்கூடிய நவீன கல்வித் திட்டத்தை ஏற்படுத்தும் பாரியதொரு பொறுப்பை அரசாங்கம் கொண்டுள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நான் கல்வியமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் பாடசாலைகளில் பயிற்சிபெறாத ஆசிரியர்கள் ஒருவர் அல்லது இருவரே காணப்பட்டனர்.

கல்வித்துறையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை அன்று நான் மேற்கொண்டேன். எனது இந்தக்கனவை நனவாக்க முப்பது வருடங்கள் கடந்தது. 15 வருடங்களுக்குள் இதனைச் செய்ய திட்டமிட்டிருந்தேன். ஆனால், அரசியல் மாற்றங்களால் அது சாத்தியப்படாமல் போனது.

எதிர்காலத்தில் பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. எனவே கல்வி டிப்ளோமாப் பயிற்சியைப் பெற்றுக்கொடுத்த பின்னரே நியமனங்கள் வழங்கப்படும்.

நாட்டில் நவீன கல்வித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.

ஒரு இலட்சம் என்ற இலக்கில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். இவ்வருட இறுதிக்குள் 90 ஆயிரம் பேராக அதிகரித்து அடுத்த வருடத்தில் இந்த இலக்கைப் பூர்த்திசெய்வோம்.

சமகால அரசாங்கம் கடந்த நான்கு வருடங்களில் கல்விக்காக பெரும் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. அதனூடாக நவீன கல்வித் திட்டத்தின் பக்கம் எம்மால் நகர முடிந்துள்ளது என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (ம-3)

# பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், பேக்கரி உற்பத்திகளின் விலைகளை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பேக்கரி துறைக்கு எதிர்பார்க்கப்பட்ட சலுகைகள் வழங்கப்படவில்லை என சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன கூறியுள்ளார்.

தமது சங்கத்தின் யோசனைத்திட்டம் குறித்து அரசாங்கம் கவனத்திற்கொள்ளவில்லை எனவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் காலத்தில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் பாண் உள்ளிட்ட அனைத்து பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்கவுள்ளதாக இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.(ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவோம்

## பசில் ராஜபக்ஷ நம்பிக்கை

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ முன்மொழியும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும் என அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் பேசிய அவர்,

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற விடயத்தில் எம்மிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக சிலர் தெரிவிக்கின்றனர். எனினும் எங்களுக்குள் எந்த முரண்பாடும் இல்லை.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ முன்மொழியும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும்.

எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். டிசம்பர் 9ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் களமிறங்கும் வேட்பாளர் இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்பார்.



இதேவேளை வடக்கு, கிழக்கு மக்களையும் இணைத்துக்கொண்டு அவர்களின் அமோக ஆதரவுடன் தேர்தலை சந்திப்போம் என அவர் மேலும் கூறியுள்ளார். (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09-03-2019
சீட்டிழுப்பு இலக்கம் 924
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 5 3 4 2 0 5

சுபிரி வாசனா
திகதி 2019/03/09
சீட்டிழுப்பு இலக்கம் 1410
எழுத்து 26
வெற்றி இலக்கம் 03 26 47 54 10 60

கொவிசெத
திகதி 2019.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 2058
ஆங்கில எழுத்து V
வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 50 60 76

செவன
திகதி 2019/03/09
சீட்டிழுப்பு இலக்கம் 168
ஆங்கில எழுத்து F
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 21 28 52

## வடக்கு மக்கள்...

வித்துள்ளது.

அதனைவிடுத்து வடக்கு மக்களின் சார்பாக எதனையும் பேசக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் வடக்கு மக்கள் சார்பில் பேசினால் அதற்கு உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்க நேரிடும் என கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எச்சரித்துள்ளார்.

யாழில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், வடக்கு ஆளுநர் ஜெனிவா செல்வது குறித்து எமது மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவரல்ல. அவர் ஜனாதிபதியாலே நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் முகவர். ஆகவே அவர் ஜனாதிபதியின் கூற்றுக்கு ஏற்றவாறே நடப்பார்.

இதனால்தான்மாகாண சபைகளுடைய முதலமைச்சர்களும் ஆளுநர்களின் அதிகாரங்களை முழுதாக நீக்கவேண்டும் என பரிந்துரை செய்துள்ளார்கள்.

இதனிடையே ஜனாதிபதியின் முகவர் வடக்கு மக்கள் சார்பிலே எதனையும் ஜெனிவாவில் பேச முடியாது. அப்படி அவர் பேசுவாராக இருந்தால் அதற்கு மாற்று நடவடிக்கையை நாங்கள் எடுக்க நேரிடும் என்று குறிப்பிட்டார். (ம-3)

## ஜெனிவாவில்...

ஆளுநர் அலுவலகத்தில் சமர்ப்பித்தனர். ஆளுநரின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோரிடம் இந்தக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் கடந்த மாதம் ஆரம்பமாகியுள்ளது. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொள்வதற்காக வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இந்தநிலையில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமய தலைவர்கள் ஆகியோர் ஜெனிவாவில் இடம் பெறும் மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் வட மாகாணம் சார்ந்து முன்வைக்க வேண்டியதென கருதும் தமது கோரிக்கைகளை எழுத்துமூலம் சமர்ப்பிக்கலாமென ஆளுநர் அறிவித்திருந்தார்.

இதற்கான கடிதம் மக்கள் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் தமது கோரிக்கைகளினை ஆளுநர் செயலகத்தில் சமர்ப்பிக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுமக்கள் தமது கோரிக்கைகளினை எதிர்வரும் 13ஆம் திகதி கைதடி முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெறும் மக்கள் சந்திப்பில் இதற்கென விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் கையளிக்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கில் மட்...

மட்டுமல்ல தெற்கிலும் பொதுவானது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போரில் சம்பந்தப்படாத லட்சத்திற்கும் அதிகமானவர்கள் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். அவர்களது பிள்ளைகள் அதிகம் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

விஹாரமஹாதேவி பூங்காவில் நேற்று முன்தினம்நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த சர்வதேசபெண்கள்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் மட்டுமல்ல உலகில் அனைத்து நாடுகளிலும் பெண்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். வளர்ச்சியடைந்த நாடுகள் எனக் கூறிக்கொள்ளும் நாடுகளிலும் பெண்களுக்கு பிரச்சினைகள் உள்ளன.

ஐக்கிய நாடுகள் அறிக்கையில் இது உறுதியாகியுள்ளது. எமது நாட்டு பெண்கள் பிரச்சினைகளில் கெடுதியான நிலைமையில் உள்ளனர் எனக் கூறினாலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இலங்கை பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை விட அதிகமான துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

சிறுமிகள், யுவதிகள், தாய்மார் என அனைவரும் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வெகுவிரை...

புலம் பெயர் விடுதலை புலிகளின் நோக்கங்கள் நல்லாட்சி அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியே இன்றும் இடம் பெறுகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக பேரணி நாடு தழுவிய ரீதியில் இடம் பெறவுள்ளது. அதன் முதற்கட்டம் கண்டியில் ஆரம்பிக்கப்பட்டது. வெகு விரைவில் அரசியல் மாற்றம் ஏற்படும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தலதா மாளிகையில் நேற்று மத வழிபாட்டில் ஈடுப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)

## கூட்டமைப்பு...

சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், தமிழர்கள் விடயத்தில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டாலும், அது ஒவ்வொரு காலாண்டுக்கும் எதனை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பதை குறிப்பிட்ட நேர சூசியைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ம-3)

## ஐ.நா அறிக்கை...

பில் அவர் இதனைக் கூறினார்.

இதில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் வரவேற்கிறோம். இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயத்தின் மேற்பார்வையின் கீழ் இறுக்கமான கால வரையறை வழங்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு இணங்கக் கூடிய ரோம் சட்டத்துக்கு இலங்கை இணங்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

பாதுகாப்பு சபையூடாக இந்த விடயங்களை கையாள முடியாது. அவ்வாறு முடியும் என்று கூறுபவர்கள் அதனை செய்யலாம். நாங்களும் அதனை வரவேற்போம்.

இந்த வருடமும் இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். மனித உரிமைகள் ஆணைக் குழு தான் எமக்கு இருக்கின்ற பலமான பொறிமுறை. ஆகவே அந்தப் பொறிமுறையை விலக்கிக் கொள்வது கூடாது.

இலங்கை ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் உள்ளடக்கங்களை நிறைவேற்றுவதில் கால தாமதம் செய்வதன் காரணமாக புதிய தீர்மானத்தில் ஒரு கால அட்டவணை கொடுப்பது பற்றி இந்த நாடுகள் ஆராய வேண்டும் என்பது எமது கோரிக்கை என்று எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். (ம-3)

## ஜெனிவாவுக்கு படையெடுக்கும்...

இலங்கை விவகாரங்களை இலங்கையே கவனித்துக்கொள்ளும் என்ற ஜனாதிபதியின் செய்தியுடன் குழுவொன்று ஜெனிவா பயணிக்கிறது. மகிந்த சமரசிங்க, சரத் அமுனுகம, வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பால் கடுப்பாகிய அரசாங்கம், அன்றைய தினமே பதில் அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில், ஐ.நா பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளதாக அறிவித்தது.

இந்த நிலையில், இப்பொழுது அரசாங்கத் தரப்பிலும் குழுவொன்று ஜெனிவா செல்லவுள்ளது. திலக் மாரப்பன தலைமையிலான குழுவொன்றை அரசாங்கம் அனுப்புகிறது.

ஜனாதிபதியும், பிரதமரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மல்லுக்கட்டப் போகிறார்கள்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் பெரிய பட்டாளமொன்று ஜெனிவா பயணமாகிறது. கால அவகாசம் வழங்க சம்மதித்து விட்டார்கள் என ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் தொடர்புடைய விடயத்தில் தொடங்கி, பல்வேறு விடயங்களில் கூட்டமைப்பின் மீதான விமர்சனம் அதிகரித்துள்ள நிலையில், இதிலிருந்து தப்பிக்க எல்லோரும் ஜெனிவா ஆயுதத்தை கையிலெடுத்துள்ளனர்.

எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், சில உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் என பெரும் அணியொன்று ஜெனிவாவிற்கு செல்கிறது.

வரும் 18, 19, 20ம் திகதிகளிலேயே இந்த குழு ஜெனிவாவில் முகாமிடவுள்ளது.

எனினும் இது ஒருங்கிணைந்த அணியாக பயணிக்கவில்லை. ஒவ்வொரு எம்.பியும் தனது பயணம் குறித்து மற்றைய எம்.பியுடன் தகவல் பரிமாறிக் கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலரை குறிவைத்து, ஆர்ப்பாட்டம் செய்யும் கலாசாரமொன்று புலம்பெயர் சமூகத்தில் தீவிரமாக பரவி வரும் நிலையில், இந்த பயண விவகாரம் முன்னரே வெளியானால் ஆர்ப்பாட்ட பேரணிகளை தமக்கு எதிராக நடத்தி விடலாம் என்பதாலேயே தகவலை காதும் காதும் வைத்தது போல பேணி வருவதாக அறிய முடிந்தது.

எப்படியோ, இம்முறை ஜெனிவாவில் இலங்கையின் உள்நாட்டு குழப்பம் எதிரொலிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைக்கு கால அவகாசம் வழங்கும் முடிவை ரணில் குழுவும், கூட்டமைப்பு குழுவும் கூட்டாக வலியுறுத்த மைத்திரி தரப்பு அதை எதிர்க்க சுவாரஸ்ய மோதல் அரங்கேறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3)

## இலங்கை விவகாரங்களில்...

களைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இம்முறை ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 15ஆம் திகதி ஜெனிவா செல்கின்றோம். அங்கு எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்வதற்கு பிரித்தானியாவிற்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறவுள்ளோம்.

நாங்கள் எம்முடைய தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காகவே போராடினோம். அவ்வாறிருக்க நாட்டிற்காகப் போராடிய இராணுவ வீரர்களை போர்க்குற்றவாளிகள் எனக்குறிப்பிட்டு சர்வதேச விசாரணைக்கு உட்படுத்துவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகளே இத்தகைய நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

மேலும் ஆளுங்கட்சியாக இருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி இவ்வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தினை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்ற விடயங்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டிய அவசியம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளது. அதனாலேயே சர்வதேசத்திடம்எமது இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பதற்கு முயற்சித்து வருகின்றனர் என்றார். (ம-3)


**காணி விற்பனைக்கு**

தொண்டைமானாறு அக்கரை கடற்கரைக்கு அருகில் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு : 076 300 9363 (7722)

**கணித வகுப்பு**

(O/L) தொடக்கம் 6 வரையான கணித பாடவகுப்புக்கள் வீடு வந்து சிறு குழுவாக (or) தனியாக அடிப்படையில் இருந்து ஒவ்வொரு கிழமைப் பரீட்சையுடன் Paper Class ஊடாகவும் பல வருட அனுபவம் உள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 577 6999 (7786)

**காணி விற்பனைக்கு**

இயக்கச்சி ஏ9 வீதிக்கு அருகாமையில்தென்னங்கன்றுகளுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 525 9073, 076 400 6418 (7748)

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

(C-5832)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-5686)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கணகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அண்மை யில்) ஒரு பரப்பு 2 குளி காணியில் புதிதாக வாஸ்து முறைப்படி வடக்கு வாசல் கொண்டு சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு : 0770767114, 0766003303

**காணி விற்பனைக்கு**

ஓமந்தை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 2 வீட்டுடன் கிணறு உட்பட 8 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

(பண்ணை அல்லது விவசாயம் அல்லது சிறு கைத்தொழிலுக்கு உகந்தது)

தொடர்புகளுக்கு : 0777310414 (7909)

**ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்**

ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்

இருபாலை சந்திக்கு அண்மையில் (கிழக்கு வீதி)

திருமணத்தடை, புத்திரபாக்கியம் / புத்திரபாக்கியதடை, தொழில் வியா பாரம் தடைகள், வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம், முற்பிறப்பு தோஷங் கள் விலகல் போன்றவற்றுக்கான பரிகாரங்கள், வவுனியா பண்டாரிக் குளத்திலும்... (புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு – யாழ்ப்பாணம்) (திங்கள், செவ்வாய் – வவுனியா)

தொடர்புகளுக்கும் முன்பதிவுகளுக்கும்:- 076 328 7119 (C-5714)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 208

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 10.03.2019 | தொலைபேசி : 021 222 3378



# சைவம் மீண்டும் வீழ்த்தப்படுகிறது

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர் விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றைய உறுப்பினர்கள் அனைவரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

வைத்திய கலாநிதி என். சிவராஜா அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத் துறையின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய டாக்டர் சிவராஜா வலுவிழந்தோர் சங்கத்தின் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றினார்.

அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

இவ்வாறு அனைவரும் அமர்ந்த நேரத்தில், விதானையார் விசுவலிங்கம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார். என்ன? விதானையார் இண்டைக்குச் சுணக்கமாய்ப் போச்சுது.

கங்காணி கார்த்திகேயன் கேட்க விதானையார் பதிலளித்தார்.

**விதானையார்:** அதையேன் கேட்கிறியள். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில என்ர பேத்தி படிக்கிறாள். பிள்ளையைக் கூட்டிவரப் போனனான். கடவுளே! கொஞ்சப் பெடியள் வேம்படி மகளிர் கல்லூரி வாசலில நிண்டு பாண்ட் அடித்து பைலா ஆட்டம் போட்டு பெரும் களேபரம் செய்து போட்டார்கள்.

**சாத்திரியார்:** படிக்கிற பெடியளோ.

**விதானையார்:** படிக்கிற பெடியளோ அல்லது பள்ளிக்கூடம் போற பெடியளோ ஆருக்குத் தெரியும். முகத்தைத் துணிகளால கட்டியல்லோ இருக்கிறாங்கள். சிலதுகளின்ர காதுகளில கடுக்கண் பூட்டியிருக்குது. இன்னும் சிலர் பச்சை குத்தியிருக்கினம். ஆட்களை அடையாளம் காண்பதே கரைச்சலான விடயம் தான்.

**பண்டிதர்:** யாழ்ப்பாணப் பாடசாலைகளில கிரிக்கெட் போட்டிகள் தொடங்கி விட்டால், இப்படியொரு கூட்டம் வீதிகளில நிண்டு பெரும் மோசம் செய்யினம். இவ்வாறான செயல்கள் எங்கட யாழ்ப்பாணத்தின் கீழ்நிலையைத்தான் காட்டும்.

ஆகையால பாடசாலைகளுக்கு முன்பாகவும் வீதிகளிலும் நிண்டு ஆட்டம் போடுகிறவியள் தொடர்பில உரிய நடவடிக்கை எடுக்கவேணும். இல்லையெண்டால் மிக மோசமான சம்பவங்கள் நடக்கலாம். இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் எச்சரிக்கை செய்தார்.

பண்டிதரின் எச்சரிக்கையோடு சில நிமிடங்கள் ஆலடி மாநாடு நிசப்தமாகியது. அந்த நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:** அது சரி திருக்கேதீஸ்வரத்தில தள்ளி விழுத்தின சிவராத்திரி வளைவு திரும்பவும் நிரந்தரமாக அமைக்கப்படுமோ!

(சாத்திரியார் சதாசிவம் ஒரு தகவலுக்காகக் கேட்க, பண்டிதர் பரமலிங்கம் கடும் கோபவயப்பட்டவராக எழுந்தார்.)

**பண்டிதர்:** மன்னார் திருக்கேதீச்சரத்தில சிவராத்திரி வளைவு கட்டுவதைத் தடுக்க யார் நினைத்தாலும் அது சைவசமயத்திற்கு எதிரான காரியம்தான்.

மடு மாதா தேவாலயத்திற்குப் போகிற பாதையில அவர்கள் வளைவு கட்டலாம், ஆனால் சைவமக்கள் வளைவு கட்டினால் அதை அடித்து விழுத்த வேணும் எண்டால் மத வக்கிரம் எந்த நிலையில இருக்குது.

**விதானையார்:** அது மட்டுமோ சிவராத்திரி வளைவை தள்ளி விழுத்திறதில ஒரு பொம்பிளை நிண்ட நிலையைப் பார்த்தியளோ. அப்ப இதற்குப் பின்னால ஒரு பெரும் திட்டம் இருக்குதுதானே.

**கங்காணியார்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** மன்னார் மாவட்டம் முழுவதிலும் இருந்து சைவ மக்களைத் துரத்துறதும் சைவ ஆலயங்களை அடித்து உடைக்கிறதுமான திட்டமொன்று அங்க இருப்பது தெரிகிறது.

**மூப்பர்:** விதானையார் ஒரு சிலர் செய்த விடயத்தை ஏன் பொதுமைப்படுத்திறியள், பெரிசுபடுத்திறியள்.

**விதானையார்:** மூப்பர் அண்ணே! நீங்கள் இங்க இருக்கிறனீங்கள். உங்களுக்கு அங்க நடக்கிறது தெரியாது.

சிவராத்திரி வளைவை அடித்து நொருக்கியது தவறு என்று ஒரு நீதியான அறிக்கையை யாழ்ப்பாண மறை மாவட்ட முதல்வர் விட்டதற்கே மன்னார் ஆயர் இல்லம் வகுண்டெழுந்த கதை உங்களுக்குத் தெரியவாய்ப்பில்லை.

**கங்காணியார்:** என்ன விதானையார் புதுக்கதை சொல்லுறியள்.

**விதானையார்:** கங்காணியார், சிவராத்திரி வளைவை அடித்து உடைத்த செயல் கண்டு கத்தோலிக்க மத குருமாரும் மக்களும் கவலைப்பட்டது உண்மைதான். ஆனால் அந்தக் கவலை மன்னார் ஆயர் இல்லத்திட்ட இருக்கல்ல.

அவர்கள் சிவராத்திரி வளைவை அடித்து நொருக்கியது சரி எண்ட நிலைப்பாட்டிலதான் இருக்கினம்.

அதால யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் விடுத்த அறிக்கைக்கு மன்னாரில இருந்து கடும் எதிர்ப்பு வந்தது. இதெல்லாம் காதோடு காதாக நடந்த சமாச்சாரங்கள்.

**மூப்பர்:** சிவராத்திரி வளைவை உடைத்த விவகாரம் தொடர்பில சர்வமதப் பேரவை நடவடிக்கை எடுக்குதாமல்லோ.

**பண்டிதர்:** சர்வமதப் பேரவை எடுக்கிற நடவடிக்கையை எடுக்கட்டும். என்னைப் பொறுத்தவரை சர்வமதப் பேரவையில இருந்து இந்து சமயத் தலைவர்கள் உடனடியாக விலக வேணும். அது யாழ்ப்பாணத்திலும் நடக்க வேணும்.

பிற மத நிகழ்வுகளிலும் இந்து மதத் தலைவர்கள் கலந்து கொள்ளக்கூடாது.

எண்டைக்கு சர்வமதப் பேரவையில இந்து மதத் தலைவர்கள் பங்கேற்றினமோ அண்டைக்கு இந்து சமயத்திற்கு ஏற்பட்டதுதான் இந்த நாசம்.

பண்டிதர் கோபாவேசத்துடன் கூற ஆலடி மாநாடு அமைதியானது. நிலைமையை உணர்ந்த மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம், ஆலடி மாநாடு ஒரு முக்கியமான இடம். நாங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேணும் என்றார்.

வாத்தியார் கூறியதுதான் தாமதம் பண்டிதர் மீண்டும் கொதித்தெழுந்தார். வாத்தியார் உங்களைப் போல ஆட்களாலதான் இந்து சமயம் அழியுது. பாடல் பெற்ற சிவத்தலம் அமைந்த இடத்தில ஒரு வளைவைக் கட்டுவதற்குக்கூட உங்களால முடியவில்லை எண்டால், பிறகெதற்கு சைவசமயம்.

திருக்கேதீச்சரத்தின்ர ஆலய நிர்வாகம் கொழும்பில இருந்துகொண்டு மன்னாரில எதுவும் செய்ய முடியாது.

எல்லாவற்றுக்கும் மெஞ்ஞெ மெஞ்ஞு எண்டால் இன்னும் சில வருடங்களில அந்தப் பாதர் திருக்கேதீச்சரச் சிவன் கோயிலையும் உடைப்பிப்பார். இது நடக்குதோ இல்லையோ என்பதை நீங்கள் இருந்து பாருங்கள்.

**விதானையார்:** அப்ப பண்டிதர் என்ன செய்யவேணும் எண்டு சொல்லுங்களன்.

**பண்டிதர்:** விதானையார் முதலில சர்வமதப் பேரவையில இருந்து இந்து சமயத்தவர்கள் முற்றாக விலகவேணும்.


ஏனைய சமய நிகழ்வுகளில இந்து சமயத் தலைவர்கள் பங்கேற்கக்கூடாது.

இயங்காத இந்து சமய அமைப்புக்களும் லெற்றகெற் சங்கங்களும் உடனடியாக கலைக்கப்பட வேணும்.

இந்து இளைஞர்கள் தங்கள் சமயத்தைக் காப்பாற்ற தயாராக வேணும்.

இதுகளைச் செய்தாலன்றி இந்துசமயத்தைப் பாதுகாக்கமுடியாது.

இப்படிக் கூறிய பண்டிதர் கோபத்துடன் எழுந்தபடி; பௌத்த விகாரைக்கு ஒரு வளைவு கட்டினால் அதைச் சிங்களக் கத்தோலிக்கர்கள் தடுப்பினமோ! ஆனால் இங்க மதவெறி கொண்டவியள் சிவராத்திரி வளைவை உடைக்கினம். இவ்வாறு கூறியபடி மாநாட்டைவிட்டு வெளியேற, ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் சோக வயப்பட்டதாக ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



**சர்வமதப் பேரவையில் இருந்து இந்து சமயம் விலக வேண்டும்**

ஆதித்தன்

# இலங்கைக்கு அவகாசம் வேண்டாம்

ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் வேளையில் இலங்கை விவகாரமும் பேசு பொருளாகியுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பித்துவிட்டால் அந்தக் கூட்டத் தொடரில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலும் தப்பித்துக் கொள்வதிலும் இலங்கை அரசு மிகத் தீவிரம் காட்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த மிகப்பெரும் போர் தமிழின அழிப்பு நடவடிக்கை என்ற குற்றச் சாட்டுக்கள் பரவலாக இருக்கின்ற நிலையில், சில நிபந்தனைகளை

அதாவது இலங்கை அரசுக்குக் காலஅவகாசம் கொடுக்காமல் விடப்படுமாயின் இலங்கை மீதான ஐ.நாவின் மேற்பார்வை இல்லாமல் போய்விடும்.

எனவே கால அவகாசம் கொடுத்து ஏலவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளை இலங்கை அரசு மூலமாக நிறைவேற்ற வேண்டும் என்பதாகக் கூட்டமைப்பின் விளக்கம் உள்ளது.

ஆக, கூட்டமைப்பின் விளக்கத்தைப் பார்க்கும் போது கால அவகாசம் கொடுப்பது ஒன்றுதான் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையால் செய்யக்கூடிய விடயம் என்பது போல உள்ளது.









நிறைவேற்றுமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை உத்தரவிட்டது.

பேரவையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்ட இலங்கை அரசு அந்த நிபந்தனைகள் எதனையும் நிறைவேற்றாமல், கால அவகாசம் கேட்பதிலேயே காலத்தைக் கடத்தி வருகிறது.

இதன்படி இரண்டு தடவைகள் கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு இறுதியாக இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கோரி அதனைப் பெற்றுக் கொண்டது.

இருந்தும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகள் எதனையும் நிறைவேற்றவில்லை. நிலைமை இதுவாக இருக்கையில், 2019 ஆம் ஆண்டிலும் கால அவகாசம் கோருவதிலேயே இலங்கை அரசு முனைப்புக்காட்டி நிற்கிறது.

இலங்கை அரசு கேட்கின்ற காலஅவகாசத்தை வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது ஆதரவை தெரிவிக்கும் என்பது உறுதியாயிற்று.

இலங்கை அரசுக்கு கால அவகாசம் கிடைப்பதற்குத் தாம் வழங்குகின்ற ஆதரவை நியாயப் படுத்த கூட்டமைப்புக் கூறுகின்ற காரணத்தைக் கேட்டால், ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை என்ற அமைப்பையே அது அர்த்தமற்றதாக்கும்.

அதேநேரம் இன்னும் சிலர், ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையின் நடவடிக்கை எதுவும் பயன்தராது என்பது போன்ற கருத்துக்களை முன்வைத்து இலங்கை அரசுக்கு உதவுகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

எதுவாயினும் வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை எனவும் எனவே இலங்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஐ.நா. மனிதவுரிமை ஆணையர் மிச்செல் பசெலெட் அவர்கள் தமது அறிக்கையில் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

அதாவது 2019 ஆம் ஆண்டிற் கான ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை வெளிப் படுத்துகின்ற ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் அறிக்கை நேற்று முன்தினம் வெளியாகியிருந்தது. அந்த அறிக்கையானது இலங்கை அரசின் ஏமாற்று நாடகத்தை தெட்டத் தெளிவாகச் சுட்டி நிற்கின்றது.

ஆக, இலங்கை அரசின் நேர்மைத் தன்மையும் மனித உரிமையைப் பாதுகாக்கின்ற இலட்சணமும் எப்படியாக இருக்கிறது என்பதை உலகம் நன்கு அறியும்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கை அரசுக்குக் காலஅவகாசம் கொடுக்கக்கூடாது என்ற கோரிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது. அதாவது இலங்கை அரசுக்கு வழங்கப்படுகின்ற கால அவகாசமானது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் விதித்த நிபந்தனைகள் நீத்துப்போக வழி வகுக்கும் என்றும் எனவே தான் கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்பதுமான கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் வலுவடைந்து வருகிறது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கால அவகாசம் வழங்குவதை ஆதரிக்குமாக இருந்தால், கூட்டமைப்பின் எதிர்காலம் அஸ்தமனமாகிறது என்பதே பொருள்.

எனவே கூட்டமைப்பின் எதிர்காலம் பற்றி அந்தக் கட்சி சார்ந்த யார் சிந்தித்தாலும் அவர்களின் நிலைப்பாடு காலஅவகாசம் வழங்கக்கூ டாது என்பதாகவே இருக்க முடியும்.

எனினும் அரசுடன் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய கூட்டமைப் பின் தலைமை காலஅவகாசம் வழங்குவதை ஒருபோதும் கைவிட மாட்டாதென்பது தெட்டத்தெளிவு.

என்ன செய்வது, ஆகுங்காலத்தே அவை அவை ஆகும், போகுங் காலத்தே அவை அவை போகும் என்பது போல கூட்டமைப்பின் அண்மைக்காலப் போக்குகளைப் பார்க்கும்போது அதன் அரசியல் பாதை படுவான்கரை நோக்கிய தாக இருக்கிறது என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறிக்கொள்ளலாம்.

இவை ஒருபுறமிருக்க, ஜெனிவாக் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி அனுப்பி வைக்கின்ற குழுவில் வடக்கு மாகாண ஆளு நரும் இடம்பெற்றுள்ளார் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜெனிவாவுக்குச் சென்று ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வாராக இருந்தால், அது அவருக்கு இருவகைச் சிக்கலைக் கொடுக்கவே செய்யும்.

அதாவது தமிழ் மக்களின் விருப்பப்படி இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்று ஆளுநர் கோரிக்கை வைத்தால், அவரை இலங்கை அரசு நிச்சயம் ஓரங்கட்ட முற்படும்.

தவிர, இலங்கை அரசின் நிலைப்பாடாக இருக்கக்கூடிய கால அவகாசத்தை வடக்கின் ஆளுநரும் கோருவாராக இருந்தால், அவர் தொடர்பான தமிழ்மக்களின் நம்பிக்கைகள் வலுவிழந்து போகும்.

ஆக, வடக்கு மாகாண ஆளுநரை ஜெனிவாவுக்கு அனுப்புவதன் மூலம் அவருக்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற நடவடிக்கை உருவாகிறது என்பதும் இங்கு கவனிக்கத்தக்க விடயம்.

எது எவ்வாறாயினும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்களை எழுத்து மூலம் தருமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்தக் கோரிக்கை அவரிடம் இருக்கக்கூடிய நியாயத்துவத்தைக் காட்டுகிறது.

தமிழ்மக்களின் கோரிக்கை என்பது இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்பதுதான். எனவே, தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கையை வடக்கின் ஆளுநர் ஒரு தமிழனாக நின்று ஜெனிவாவில் முன்வைக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் பெரு விருப்பமாகும்.

திருநீலகண்டன்

# வாழ்வை மலர வைக்கும் விரதங்கள்

வாழ்வை மலர வைக்க விரதங்கள் மிக முக்கியமாகும். மகரிஷிகளும் அவதார புருஷர்களும் நமது உடல்ஆரோக்கியம்,உணவு, மந்திரங்களின் பிரயோக சக்தி ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள நெருங்கிய நுணுக்கமான தொடர்பை அறிந்திருந்தார்கள். வாழ்க்கையின் சுக, துக்கங்கள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினுள் அடங்கியிருப்பதில்லை. இம் மூன்றையும் சுய கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.



கட்டுப்பாடில்லாத உணவு உடல் தேவைக்கு மேலான சக்தியை கொடுக்கும் சக்தி மேலீட்டால் மனத்தை தவறான வழிகளில் இட்டு செல்லும். மருத்துவ ரீதியிலும் எமது உடல் ஓர் இயந்திரம் போன்றதே.

எனவே அதற்கும் ஓய்வு கொடுக்க வேண்டும். இதற்காகத்தான் விரதங்கள் பற்றி மகரிஷிகள் முன்னரேயே எமக்கு வகைப்படுத்தி வைத்துள்ளனர்.

உபவாசங்கள் உடலுக்கு ஓய்வை அளித்து ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவுவது போல் விரதங்கள் மனத்திற்கு ஓய்வளித்து நமது மன நலத்தைப் பாதுகாக்கின்றன.

மனம் சந்திரனின் கட்டுப்பாட்டில் உள்ளபடியாலும் வான மண்டலத்தில் நவக்கிரகங்களுள் சந்திரனே அதிக வேகத்தை உடைய கிரகமாகும்.

எனவே தான் நமது மனமும் ஒரே நிலையில் இருக்காமல் ஒவ்வொரு விநாடியும் பல விதமான சஞ்சலங்களும் மாறி மாறி வரும் உணர்ச்சிகளுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

விரதங்கள் மூலம் மனம் ஓய்வு, ஒருமையும் அடைந்து இறைவன் மீது மனத்தை முழுமையாக ஈடுபடுத்த உதவுகின்றது.

சிவராத்திரி விரதம் உபவாசம் இருந்து நித்திரை விழித்து பரம்பொருளுடன் பூரண சரணாகதியடைந்து திருமுறை பஞ்சாட்சர மந்திரம் போன்றவற்றை உணர்ந்து ஓதி நல்வாழ்வு வாழலாம்.

எத்தகைய கொடிய துன்பமானாலும் இறைவனது திருவருட்கருணை இருப்பின் நிச்சயமாக இறைவன் அத்துன்பத்தை தீர்த்து வைப்பான்.

"தேனாய் இன் அமுதமுமாய் சித்திக்கும் சிவபெருமான் தானே வந்து என் உளம்புகுந்து அடியேற்கு அருள் செய்தான்"

சிவனடியான்





## நல்லதோர் வீணை

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ, - இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி -. நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன் - நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும் - சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன் - இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?



கபில்ராஜ் சரண்ராஜ்,
இளங்கோ முன்பள்ளி பாடசாலை,
அல்வாய் வடக்கு, அல்வாய்.



கபில்ராஜ் டிலைக்ஷன்,
தரம் 5,
யா/அம்பாள் மகாவித்தியாலயம், அல்வாய் வடக்கு.

## பொது அறிவு

- பாகிஸ்தான் என்ற பெயர் கொடுக்க காரணம் யார்?
  **சௌத்ரி ரஹம்மத் அலி**
- ஏது உலகின் மிகப்பெரிய நன்னீர் தீவு?
  **மாஜூலி**
- எந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், அகழ்வாராய்ச்சியில் பயன்படுத்தப்படும் செயல்முறையை பயன்படுத்துகிறது?
  **ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம்**
- அடால்ஃப் ஹிட்லரின் விமானப்படையின் பெயர் என்ன?
  **லுஃப்ட்வாஃபே (Luftwaffe)**
- இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்க மற்றும் நேச நாடுகள் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பெயர் என்ன?
  **கடன்-குத்தகை (Lend-Lease Agreement) ஒப்பந்தம்**









## சிவராத்திரி தினத்தன்று மதுக்கடைகளுக்கு விடுமுறை இல்லையா?

## சிவலிங்கம் உடைப்பின் பின்புலத்தில் இருப்பவர்கள்?

## திருக்கேதீச்சர வளைவை உடைத்தது ஏற்கக்கூடிய விடயமா?

**இந்து — யாழ்ப்பாணம்**

**திருக்கேதீச்சர வளைவை உடைத்தது ஏற்கக் கூடிய விடயமா?**

மதங்கள் மனிதனை மனிதனாக வாழ வைக்க தோன்றியதே தவிர மதம் பிடித்து அலைவதற்காக அல்ல என்பதை உடைத்தவர்களுக்கு துணை போனவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது போல அவரவருக்கு அவரவர் மதம் உயர்வானதும் அருள் கொண்டதும் தான். அதற்காக இன்னொரு மதத்தை நிந்தனை செய்துதான் தம் மதத்தை உயர்வானதாகக் காட்டமுடியும்என்ற எண்ணத்தை எந்தக் கடவுளும் ஏற்கமாட்டான் என்பதை இவ்விடத்தில் பதிவிடுகின்றோம்.

அத்துடன் நடந்த விடயம் தொடர்பில் மன்னார் ஆயர் இல்லம் விட்ட நீண்ட அறிக்கையைப் பார்க்கும் போது பிறர் பாவங்களுக்காக சிலுவையை ஏற்ற பிதாவே உண்மையை மறந்து பொய்மையை நிலைநாட்ட முற்படுவதை நீர் பார்த்துக் கொண்டிருக்கின்றீரோ என்று நெஞ்சம் அடித்துக் கொண்டது.

**சித்திரா — வட்டுக்கோட்டை**

**பௌத்தத்திற்கு முக்கியம் கொடுப்பவர்களுக்கு பௌத்தத்தைப் பற்றிப் புரியவில்லையே?**

எமது நாட்டில் இருக்கும் பிரச்சினையே இது தான். பௌத்தம் எதைச் சொல்கின்றது, என்னத்தைப் போதிக்கின்றது என்று ஆழமாகச் சிந்தித்தால் தமிழினத்திற்கு என்றைக்கோ அனைத்தும் வழங்கப்பட்டிருக்கும். என்ன செய்ய மாற வேண்டியவர்கள் மாறினாலே தவிர எமக்கான தீர்வு கிடைக்கப் போவதில்லை.

**கௌதம் — அல்வாய்**

**ஆளப் போறான் தமிழன் பாடலை பற்றிச் சொல்லுங்கள்?**

சும்மா பாட்டிலையும் படத்திலையும் தான் அப்படி சொல்லிக் கொண்டிருக்கின்றோம். நிஜத்தில் என்னமோ அடி வாங்கிக் கொண்டே இருக்கின்றோம்.

**தர்மா — மானிப்பாய்**

**என்னடா தம்பி கதைக்கிறாங்கள் சந்தி வழியில்?**

கூட்டமைப்பு கூத்தமைப்பாகி இலங்கைக்கு இன்னும் இரண்டு வருடங்கள் அவகாசம் வழங்குவதாக கதைக்கின்றார்கள். இனி இவையின்ர கதை அவ்வளவு தான். அடுத்த தேர்தலில் பார்ப்பம் என்றார் ஒருவர். சா.... என்ன இருந்தாலும் எவ்வளவு இருந்தாலும் எமது தாய்க் கட்சி எல்லோ. எங்கட ஒற்று மை யினைக் காட்டுவது தானே முறை. இல்லாட்டி நாம் துரோகிகள் ஆகி விடுவோமே என்றார் மற்றவர். நாசமறுத்ததுகள் நீங்கள் திருந்தவேமாட்டீர்கள்டா...

**தமிழ் — மிருசுவில்**

**வியாசரே முடி கொட்டுறது நிக்கவே மாட்டேங்குது என்ன பண்ண?**

முடி இல்லாதவர்களுக்கு மூளை அதிகம் என்பதை நம்பிக் கொண்டு புத்திசாலியாய் வலம் வாருங்களேன். அதைவிட முக்கியமான விடயம் ஒன்று தற்போதைய பெண்களுக்கு முடி இல்லாதவர்களைத் தானாம் ரொம்பப் பிடிக்கின்றது. கவனம் வெளியில் திரியிறதைக் குறைத்துக் கொள்ளும்.

**தரணிகா — கௌந்தில்**

**கூட்டமைப்பு இருக்கும் வரை வரவு- செலவுத் திட்டம் தோற்காதாமே?**

இந்த வரவு–செலவுத் திட்டமல்ல நாட்டில் எந்த வரவு- செலவுத் திட்டமென்றாலும் அதில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் இருக்கின்றதா? என சீர்தூக்கிப் பார்த்து ஆதரவு வழங்கினால் பரவாயில்லை. ஆனால் நடப்பதோ வேறு. எம்மை அடகு வைத்து தம்மை வலிமைப்படுத்தும் சக்திகளுடன் எம்மவர்கள் கூடி நின்று தேநீர் குடித்து கொஞ்சிக் குலாவுவதை நிறுத்தும் வரை வரவு- செலவுத் திட்டம் வெற்றி பெறும்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**ஜீபா — கரவெட்டி**

**ராஜபக்ஷ யுகம் வருமா?**

விட்ட இடத்தைப் பிடிப்பதற்கு அரும்பாடு படுகின்றார் என்பது மட்டும் நன்றாய் புரிகின்றது. மறுபடியும் வந்தால் ஒரு ரவுண்டு வராமல் விடமாட்டார் என்பது மட்டும் உண்மை. என்ன வயிற்றிலை புளி கரையுதோ?

**சுதன் — கரவெட்டி**

**சிவலிங்கம் உடைப்பின் பின்புலத்தில் இருப்பவர்கள்?**

பின்புலத்தில் யார் இருந்தாலும் உடனடியாக அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் மத நல்லிணக்கத்தை உடைத்து பெரும் கலவரமாக வர வாய்ப்புண்டு.

**சுதன் — குப்பிளான்**

**ஐ.நாவுக்கு காலஅவகாசம் வழங்கும் கூட்டமைப்பிற்கு காலஅவகாசம் எப்போது முடியும்?**

என்ன சொன்னாலும் நம்பி ஏமாந்து வாக்களிக்கும் மடைத்தமிழினம் இருக்கும் வரை அதற்கு சந்தர்ப்பமே இல்லை.

செய்யும் பிழையைக் கண்டு கேள்வி கேட்காது சொறணை கெட்டிருப்பதைப் போல கேவலமானது வேறு ஏதும் இல்லை.

ஆனால் அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கின்றோம். மாற்றம் ஒன்றை உருவாக்க நினைத்தால் உடனடியாக அவர்களுக்கு துரோகி என்ற பட்டத்தைச் சுமத்தி விடுகின்றோமே.
இதுதான் கொடுமையின் உச்சம்

**திகழன் — யாக்கரு**

**இந்தியாவின் இடத்தில் பாகிஸ்தான் இருந்திருந்தால் தமிழனின் நிலை எப்படி இருக்கும்?**

எதுவுமே நடந்திருக்காது. கொழுக்கட்டை மோதகங்கள் உருவில் மாறலாமே தவிர உள்ளீடு ஒன்றல்லவா? அது போலத்தான் இதுவும்.

ஈழத்தமிழரின் அழிவுக்கு பாகிஸ்தான் குண்டு கொடுக்காத மாதிரிக் கேட்கிறீர்களே. எல்லாம் கொழுக்கட்டையும் மோதகமும் தான்.

**நேதாஜி — வதிரி**

**சிவராத்திரி தினத்தன்று மதுக்கடைகளுக்கு விடுமுறை இல்லையா?**

விசேட தினங்களில் மதுக்கடைகள் பூட்டௌன்றால் முதல்நாளே நாளை மதுக்கடை கள் பூட்டப்படும் என எழுதி வாசலில் போட்டுவிடுவார்கள்.

நாளை பூட்டு. ஆதலால் குடி மகன்கள் இன்றே வாங்கிச் செல்லவும் என்பது தானே பொருள். விசேட தினங்களில் மதுக்கடைகள் பூட்டு என்று வெறும் மனத் திருப்திக்குத்தான். குடிப்பவன் குடித்துக் கொண்டு தான் இருப்பான் மாற்றமில்லை.

**சிறிராம் — பருத்தித்துறை**

**ஆலயத் திருவிழாக்களில் பட்டாசு கொளுத்தி பணத்தைக் கரியாக்கி சூழலைப் பாதிக்கச் செய்பவர்கள் பற்றி?**

வெளிநாட்டில் உறையும் குளிரில் ஓடி ஓடி உழைத்து இங்கு வந்து அதை பசியில் வாடுபவர்களுக்குக் கொடுக்காமல் பவுசுகாட்டும் இந்தக் கூட்டத்தைப் பிடித்து வெளுவெளுண்டு வெளுத்தால் எல்லாம் சரிவரும்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## தாய்மொழியே

வாய் மொழியும் தாய்மொழியே
யாழ் இசைக்கும் யாழ்மொழியே
வெள்ளிடையில் சொல்லிடையே
வென்றிடுமே பல மொழியிடையே
மும்மொழியும் செம்மொழியே
முந்தி வந்த மூத்தவளே
நாவினிக்கும் தேன்மொழியே
நாவலரின் திருமொழியே
வள்ளுவனின் மறைமொழியே
கவி பொழியும் கவிக்கோன் மொழியே
கல்தோன்றாக் காலத்திலும்
முன்தோன்றினியே
உயர்மொழியே! மெய்மொழியே!
எமது உயிர் மெய்யாய் நின்றனியே
ஞாலத்தின் கருவினியே ஈழத்தின் கனவினியே
யான் இயற்றும் யாழினியே
என்னைப் பெற்ற தாய்மொழியே
நான் பெற்ற தமிழ்மொழியே

**ஸ்ரீயோதா, மண்டைதீவு**



## மனவிரக்தி



உருக்குலைந்த மானிடா– உனக்குள்
ஊனத்தனம் ஏனடா?
உணர்வுகொண்ட மானிடா– உன்
தவறுகளை நீ உணராததும் ஏனடா?
அறிவுரை கூறினாள் அலட்டல் போர்வை
அடிவெட்டு வாளுடன் இளையோர் கோர்வை
ஆறடிக்கிணற்றுப் பற்றையுள் அழகிய சேலை
ஆறாம் அறிவில்லாததுவோ எம் மூளை
மானிடா நீ கற்றது கையளவு
காலத்தின் நீயோ எள்ளளவு
கண்டிடுவாயோ? உன் கை மண்ணளவு
காண்பாய் அன்றே உன் மடமையின் செயலளவு
கைபேசியால் கண் நிமிர மறுக்கின்றாய்
காட்சி நாடகத்தால் கடமை தனை மறக்கின்றாய்
காதல் மோகத்தால் காலத்தை இழக்கின்றாய்
காசிற்காய் ஓடி ஓடி நிம்மதிக்காய் அழைக்கின்றாய்
கரைபுரண்டது போதுமடா
நீ திரைகொண்டு மீளடா
விதை போல் மீண்டெழுடா–உயர்
வரைபோல் வான் தொடடா
மறுபடியும் எனக்குள் ஒரு புரட்சி
எம்மவர் ஏன்? இப்படி எனும் விரக்தி
திரும்பவும் வரும் கோடை வரட்சி
இனியும் திருந்தலையோ –அதுவே
உன் அழிவின் வளர்ச்சி....

**ஞா. கட்டைக்கவிதன்**
**கிளிநொச்சி**

## நன்மை தரும் சமத்துவம்

சமுதாயம் என்னும் கடையில்
சமநீதி என்ன விலையோ?
சட்டம் ஒரு இருட்டறை ஆகிறது
சமத்துவம் இன்னும் முகமூடி போடுகிறது
பெண்மையின் நிலையோ– தண்ணீரில் மீனின்
கண்ணீரைப் போல புரிந்துரைக்கப்படாமல்
பரிதவித்துக் கொண்டிருக்கின்றன
நீதிகள் செத்துவிடுகின்றன
அநீதிகள் தலை தூக்கி ஆடுகின்றன
தற்கொலைகள், கற்பழிப்புக்கள்
கொடுமைகள் என
ஆதி தொட்டு அந்தம் வரை
பெண்ணியத்திற்கு சத்தியத்தின்
சோதனை தான் எத்தனையோ?
எங்கும் போட்டி ! எதிலும் போட்டி !
பாரதி நீக்கிய பெண்ணடிமை எங்கே?
காந்தி பேசிய சமத்துவம் எங்கே?
தொழில் நுட்பம் நிறைந்த –நவீன
யுகமாக மாறிவரும் உலகில்
பெண்களின் பங்களிப்பும் –இன்று
விண்ணைத் தொட்டுச் செல்கின்றது
பெண்ணே! வளைந்து கொடுக்காதே
நிமிர்ந்து நில்! வரும் தடைகள் எல்லாம்
முட்டிமோதி தெறித்து ஓடி
நன்மை தரும் சமத்துவமாக மாறிவிடும்
நாளை அல்ல.. இன்றே...

**ச. அகல்யா**




## அறிவாரோ எம் தலைமை

இழப்புக்களுக்குப்
பழக்கப்பட்ட இனமொன்று
இழந்து கொண்டிருக்கிறது
தன் இருப்பை

அழிவுகளுக்குள் அகப்பட்டு
முடிவுகளின்றி
மூச்செறிந்து கிடக்கிறது

விடிவு வேண்டிப் போராடி
துரோகத்தால் அழிக்கப்பட்டு
துடித்துக் கொண்டிருக்கிறது

அரச மரங்களில் பூத்த
ஆயுதக் குண்டுகள்
அழித்தது எம் நிலத்தை மட்டுமல்ல
ஒற்றுமை என்ற பலத்தையும்தான்

சலுகைகளுக்கு விலைபோய்
சிலிர்க்கிறது தலைமை
உளுத்துப் போகிறது தீர்மானங்கள்
உலுக்கிக் கேட்க ஆளில்லை என்ற
அகங்காரத்தால் சிரிக்கிறது

பட்டினியால் அழும் குழந்தைகளின்
கண்ணீர் வடிந்தோடி
கால்வாய்கள் நிறைகிறது
கருணைகளுக்கு முற்றுப்புள்ளியிட்டு
கடந்து செல்கிறது மனிதம்

நெற்றிப் பொட்டில் சுட்டுவிட்டால்
ஒற்றை நொடியில் செத்துவிடலாம்
தினம் நொந்து நொந்து
சாகும் கொடுமை
அறிவாரோ எம் தலைமை!

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்– 438



## விடுதலை தேடி

விடுதலை நோக்கிய
உனது பயணம்
என்றும் வீணாகிப்
போய்விடாது
விழுப்புண் அடைந்தாலும்
விடிவைத் தேடி
விரையும் உன் கால்கள்
எப்போதும் ஓயாது
வரையப்பட்டிருக்கும்
ஈழத்தில்
வரலாறு படைத்தவள்– நீ
வரையறை அற்ற
தலைவன் வழிநின்று
வென்றெடுப்பாய் ஈழத்தை

**தமிழ்யோகி**
**மடத்துக்கடவை**

## மௌனத்தின் தேடல் –439



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## திடம்

ஈழம் எனும் திருநாடு
செல்வம் மிக வளநாடு
என்பதெல்லாம்
வீண்பேச்சோ
என் வருகை கண்டு
வீதியெங்கும்
அமைதி நிலவும்
காரணம் ஏனோ?
என் உடலில்
தான் ஊனம்
என் மனதில் அல்ல
நெகிழும் உள்ளமே
பொங்கும் சோற்றில்
ஒருபிடி மிதமாய்
என்போல் சிறுவர்கள்
இவ்வுலகில் பலர் உளர்

**த.ஜானிகா**
**உரும்பிராய்**
**யோகபுரம்**

## சபதம் எடு

காலொன்றில்லாப்
போதிலும்
மூன்று கால்கள்
உளவாம்
கருத்திலெடு
நாலாபுறமும்
நாம் நோக்கில்
இருகாலும்
நீத்தார் எத்துணை
கணக்கிலெடு
போரின் வலியை
மறந்துவிடு
புலரும் வாழ்வைக்
கையிலெடு
வாரும் காலம்
உறுதியெடு
வாழ்வோம் என்றே
சபதமெடு

**வைகதன், கொக்குவில்**

## நானும் சாதிப்பேன்

போரில் ஒரு
காலையிழந்த சிறுமி
நான் எல்லோர் முன்பும்
ஒரு நொண்டிதான்
ஆனாலும் என்மனதில்
தன்னம்பிக்கை
நிறையவே உண்டு
உலகில் நானும் சாதித்திட

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## பாதை தெரியட்டும்

உடலெல்லாம்
சன்னச் சிதறல்களின்
உறுத்தல்கள்
வேதனைகள் தாங்கிச்
சடமாய்ப் போன
காலொன்றும்
சின்னாபின்னப்பட்டுச்
சிதறியதா...
கேட்பார் யாருமில்லை
ஜெய்ப்பூர்
காலாதல் கிட்டாதோ
கைத்தடி ஏன் தம்
பாட்டில் முயன்று
உழைத்துத் தமிழ்
பண்பாட்டில் வாழும்
பாதை தெரியட்டும்

**வை.க.தவமணிதாசன்**
**கொக்குவில்**

## விடியலை நோக்கி

ஒற்றைக்கால் இழந்த போதும்
ஓரத்தில் நின்று விடாது

இரட்டைக் கோலூன்றி– நீயும்
எதை நோக்கிச் செல்கின்றாய்?

அகம் காட்டி நின்றுவிடாமல்
புறம்காட்டி செல்வது ஏனம்மா?

ஆயிரம் அர்த்தங்கள்– என்
ஆழ்மனதில் தோன்றுதம்மா– உன்

தன்னம்பிக்கைக்கு எதிரில்
தடைபோட யாரும் இல்லை


இழந்துவிட்ட இறந்தகாலத்தைவிட்டு
வரப்போகும் வருங்காலத்திற்காக

விரைந்து செல் பெண்ணே
விடியல் வெகுதூரமில்லை

புறம் காட்டி செல்வதன் அர்த்தம்
புரிகிறது இப்போ எனக்கு

**மா. சாந்தா, முள்ளியவளை**

# மனிதம்



சிறுகதை

புகையைக் கச்சியபடி உறுமிக் கொண்டு சென்றது அந்த மோட்டார் சைக்கிள். பக்கத்தில் வரும் போதே அதன் சத்தம் வயிற்றில் புளியைக் கரைத்தது போலிருந்தது. ஏன் தான் இப்படி முந்திக் கொண்டு செல்கிறார்களோ தெரியவில்லை. மனதில் எண்ணிக் கொண்டே சைக்கிளை மிதித்தேன்.

அப்போது நேரம் எட்டு மணி இருபதைக் காட்டியது. எப்படியாவது 10 நிமிடத்திற்குள் போயாக வேண்டும். இல்லாட்டி கோடு கீறிடுவார். சைக்கிளை நிறுத்திவிட்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தேன். “ மண்போட்டா மண் விழாது” அவ்வளவு சனம் என்று ஒரு வயது வந்த நர்ஸ் சொல்லிக்கொண்டு போனாள். நானும் ஒரு மாதிரி விலத்திக்கொண்ட போய் அலுவலகத்தில் நுழைந்தேன். நான் தான் அண்டைக்கு கடைசி.

“என்னப்பா இண்டைக்கு பேனையோட” என்று நண்பர் அசடு வழிந்தார்.

“ஓமப்பா இண்டைக்கு கொஞ்சம் வேலை”. அதுதான் என்று சொல்லிவிட்டு மேசையிலிருந்த பையை எடுத்துக்கொண்டு எனது அறைக்குப்போனேன். அன்று அவசரமாக முடிப்பதற்கு சில கருமங்கள் காத்துக்கிடந்தன. நானும் திடசங்கற்பத்தோடு போய் உட்கார்ந்தேன்.

சற்று நேரத்தில் ஒரு அம்புலன்ஸ் வண்டி சைரன் ஒலியோடு ஆர்ப்பாட்டமாய் வந்து நின்றது. எல்லோரும் பதறி அடித்துக்கொண்டு ஓடினார்கள். “இதெல்லாம் பழகிப் போன ஒண்டுதான்” என்று இருந்து விட்டேன். நானும் இந்த அலுவலகத்திற்கு வந்து பல வருடமாகிவிட்டது. அடிக்கடி அவலக் குரல் கேட்டுக் கொண்டிருக்கும்.

“இது களபூமி” என்று என் நண்பர் கூறும் வார்த்தை அப்போதுதான் ஞாபகத்திற்கு வரும். ஒவ்வொரு முறையும் அந்தச் சத்தத்தைக் கேட்கும் போதும் அடிவயிறு கலங்கும். பீதி மேல் நோக்கி எட்டிப் பார்க்கும். யாரோ ஏதோ என்று மனம் கலங்கும். அதற்கு மேல் நானும் இருக்க முடியாமல் இறங்கிச் சென்றேன்.

ஸ்ரெச்சரில் ஒரு பையனை கிடத்தியபடி தள்ளிக்கொண்டு போனார்கள். ஆக மிஞ்சிப் போனால் இருபத்தேழு, இருபத்தெட்டு வயதுதான் இருக்கும். ஆள் அடையாளம் தெரியாதபடி இரத்த வெள்ளத்தில் கிடந்தான். யாரென்று பார்ப்பதற்குள் ஈயூ கொண்டு போனார்கள்.

“ என்னடா என்ன நடந்தது” என்று ஒரு பெடியனை கேட்டேன்.

“அக்ஸிடன்டாம்” என்று கூறிவிட்டு விலகிப் போனான்.

அப்போதுதான் எனக்கு பொறி தட்டியது. நான் றோட்டில விலத்தின பையன் தான். அவன் அணிந்திருந்த வெள்ளை சேட் சிவப்பாக இருந்தது.

“ ஐயோ கடவுளே ஏனப்பா இந்தப் பெடியன் இப்படிப்போய் அடிபட்டது” என்று பக்கத்தில் நின்ற சக ஊழியரிடம் பேச்சுக் கொடுத்தேன்.

“இதுகள் திருந்தாதுகள் சரி கொஞ்ச நேரம் லேட்டாப் போனா என்ன” குடியா முழுகிப் போகுது என்று தன் கருத்தைச் சொன்னார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அந்தப் பெரிய டொக்டர் தன் பரிவாரத்தோடு அந்த அறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ஒரு நம்பிக்கை. உண்மையில் அவர் கைராசிக்காரரானவர். எந்தப் பிரச்சினை எண்டாலும் லேசில கண்டுபிடிச்சு வைத்தியம் செய்யிறதில கெட்டிக்காரர் என்று கேள்விப்பட்டதுண்டு. சாந்த சொரூபமாக இருப்பார். யாரையும் கடிந்து கொள்ள மாட்டார்.

சிலரைப் பார்த்தாலே இருக்கிற வருத்தம் கூடிவிடும். எப்ப பார்த்தாலும் சிடுமூஞ்சியாட்டம் இருப்பார்கள். அன்பாக நாலுவார்த்தை கதைக்க மாட்டாமல் என்ன செயலோ என்று நண்பரிடம் சொல்லி அலுத்துக்கொண்டேன்.

“பேசாம இருப்பா யாராவது கேட்டாலும்” என்று என்னைத் தடுத்து நிறுத்தினார்.

நான் அந்தப் பெரிய டொக்டரைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் போதே ஒரு பெண் அழுது குளறிக் கொண்டு வந்தாள். இடுப்பில் ஒரு சின்னக்குழந்தையும். ஆக மிஞ்சிப் போனால் அதற்கு 2 வயசிருக் கும். அவள் அப்படியே ஈயூக்க நுழைந்தாள்.

“ அம்மா அம்மா இஞ்ச வாங்கோ. பிள்ளையை விட்டுப் போட்டுப் போங்கோ.. பிள்ளை பயந்திடும்” என்று வெளியில நின்ற செக்யூரிட்டி தடுத்தான்.

அவள் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த வள் போல போட்டதைப் போட்டபடி விட்டுட்டு ஓடி வந்திருக்கிறாள். அவள் தோற்றம் அப் படியிருந்தது. அந்த இடமே அவளின் கூக் குரலில் அதிர்ந்தது.

“குறுக்காள போன துக்கு சொன்னன்வேகமா ஓடாத ஓடாத எண்டு. சொல்லுக் கேட்டுதே” என்று திட்டவும் செய்தாள். அவள் நிலத்தில் இருந்தபடியே அழுது கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் அந்தப் பையனை தியேட்டருக்குக் கொண்டு போனார்கள். அந்தப் பெண்ணும் பின்னாலேயே ஓடினாள். அவள் படும்பாட்டை அப் போது கூற வார்த்தைகளை நான் அடையவில்லை. அந்த நொடி அவள் மனம் என்னவெல்லாம் துன்பமடைந்திருக்குமோ?உண்மையில் இப்ப அவன் தன் மனைவியைப் பார்த்தால் இனி எப்பவுமே இப்படிச் செய்யமாட்டான் என்று நினைத்தேன்.

“இதெல்லாம் யோசிச்சா இந்தப் பெடியன் இப்படி செய்யாதுகள்” என்று நண்பர் ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

நானும் எனது நண்பரும் கன்ரீன் போய் ஒரு பிளேன்ரீ குடி த்துவிட்டு வந்தோம் எனக்குவேலை செய்ய முடியாமல் இருந்தது. ஆனாலும் நமக்கு இது ஒண்டும் புதிதில்லை. “ என்னப்பா இந்தப் பெடியனுக்கு ஏதும் நடந்தால் இந்தப் பிள்ளையின்ர வாழ்க்கை” என்று நண்பரைப் பார்த்துக் கூறினேன். “ நீயும் நானும் கதைச்சு என்ன ஆகப்போகுது”. “அதுவுஞ் சரிதான்” என்று தலையசைத்தேன்.

“வெளிநாட்டுக்காரன் கண்டு பிடிக்கிறதெல்லாம் நம்மட ஊரிலதான் சேதாரமாகிறது என்ன” என்று நண்பர் கூறியதும் பொருத்தமாக இருந்தது.

“சரி வாகனம் போனாலும் பரவாயில்லை. உயிர்போனா வீணா வாணாளை அரைவாசியில போக்காட்டுதுகள்” என்று நான் ஆதங்கப்பட்ட போது. “உதெல்லாம் வேணும் றோட்டால போகேலாது. கவுட்டக் கிழிச்சுக் கொண்டு ,வந்து இடிக்கிற மாதிரி தானே ஓடுகள்” என்று ஒரு முதியவர் கூறியபடியே நடந்து சென்றார்.

“ ம்... இண்டைக்கு எத்தனை பேர் மனசில இந்தப் பிரச்சினை இருக்குமோ” என்று நான் கூறும்போதே “ சரி சரி வா போவம். இதில நிண்டால் சேர் வந்தால் பிரச்சினை” என்று நண்பர் என்னை இழுத்தார்.

நாங்கள் நடக்கத் தொடங்கியபோது அந்த டொக்டர் தியேட்டருக்குள் இருந்து வெளியே வந்தார்.

“ ஐயா ஐயா அவருக்கு என்ன” என்று பதறியடித்துக்கொண்டு ஓடினாள் அப்பெண்.

“ அம்மா பிரச்சினை இல்லை, பயப்படாதேயுங்கோ. தலையிலயும் அடிபட்டிருக்கு. ஒருக்கா பெரியாஸ்பத்திரிக்கு அனுப்புவம்” என்று சாவதானமாகச் சொன்னார்.

அவள் கையெடுத்துக் கும்பிட்ட போது “ ஏனம்மா கும்பிடுறியள். போங்க போய் பாருங்க. பிரச்சினை இல்லை” என்று கூறிவிட்டு நடந்தார்.

மனிதனும் தெய்வமாகலாம் சில சமயம். சில வைத்தியர்கள் இப்போதும் அப்படித்தான்.

நாங்கள் நடந்து கொண்டிருந்தோம். எங்களைக் கடந்து சென்ற நர்ஸ் “சேர் டீ போட்டாச்சு எடுத்திட்டுப் போங்கோ” என்றாள்.

இல்ல இல்ல பரவாயில்லை. என்னோட வைவ் இற்கு இண் டைக்கு ஒரு சேர்ஜரி. நான் யாழ்ப்பா ணம் போகோணும். பிறகு குடிக்கலாம்.

“என்ன சேர் மைனர் சேர்ஜரியா இல்ல” என்று நர்ஸ் தடுமாறும் போதே “யெஸ் கொஞ்சம் மேயர் சேர்ஜரி தான்” எமெர்ஜென்சிதானே அதான் இத முடிச்சிட்டுப் போக வேண்டியிருந்தது என்று சொல்லிவிட்டு நடந்தார்.

எனக்கும் நண்பருக்கும் இதைக் கேட்ட மாத்திரத்தில் வாயடைத்துப் போனோம்.

அவர் நடந்து கொண்டிருந்தார். அவருடன் கூடவே மனிதாபிதானமும் கடமையும் சேர்ந்து பயணித்துக் கொண்டிருந்தது...

“

நானும் எனது நண்பரும் கன்ரீன் போய் ஒரு பிளேன்ரீ குடித்துவிட்டு வந்தோம். எனக்கு வேலை செய்ய முடியாமல் இருந்தது. ஆனாலும் நமக்கு இது ஒண்டும் புதிதில்லை. “ என்னப்பா இந்தப் பெடியனுக்கு ஏதும் நடந்தால் இந்தப் பிள்ளையின்ர வாழ்க்கை” என்று நண்பரைப் பார்த்துக் கூறினேன். “ நீயும் நானும் கதைச்சு என்ன ஆகப்போகுது”. “அதுவுஞ் சரி தான்” என்று தலையசைத்தேன்.


**மா.சிவா, கரவெட்டி மேற்கு**

# திருடப்பட்ட தேசம்!

## சாட்டையை சுழற்றிய சாகோஸ் தீர்ப்பு...

சாகோஸ் தீவு மக்களுக்கு, பிரிட்டிஷ் அரசு செய்துவந்த துரோகத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு. இரு நூற்றாண்டுகளுக்கும் மேலாக சகோஸ் தீவுகளை ஆக்கிரமித்துள்ள பிரிட்டன், மீண்டும் அந்தத் தீவை மண்ணின் மைந்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது, அந்தத் தீர்ப்பு. ஆனால், சகோஸ் தீவுகள் அமெரிக்காவின் மிக முக்கியமான ராணுவத்தளமாகியிருப்பதால், இரு நாடுகளும் என்ன செய்யப் போகின்றன என்று உற்றுநோக்கத் தொடங்கியிருக்கிறது சர்வதேச சமூகம்.

இந்தியப் பெருங்கடலில் இந்தியாவுக்கு தென்மேற்காக இருக்கும் மாலைதீவு நாட்டிலிருந்து சுமார் 500 கி.மீ.தூரத்திலும், செஷல்ஸ் தீவுகளிலிருந்து சுமார் 2,000 கி.மீ.தூரத்திலும், மொரீஷியஸ் தீவுகளிலிருந்து 2,500 கி.மீ.தூரத்திலும் இருக்கும் சாகோஸ் தீவுக்கூட்டங்களை, 1814ஆம் ஆண்டு பாரிஸ் ஒப்பந்தம் மூலம் பிரான்ஸிடமிருந்து பிரிட்டன் கைப்பற்றியது. கறுப்பின மக்கள் கப்பல்களில் இறக்குமதி செய்யப்பட்டு, பிரிட்டிஷாரின் பண்ணைகளில் அடிமைகளாக்கப்பட்டார்கள். 1969ஆம் ஆண்டு ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்றது மொரீஷியஸ். ஆனால், சுதந்திரத்துக்கு விலையாக சாகோஸ் தீவுகளைக் கேட்டது பிரிட்டன். வேறுவழியின்றி, டீகோ கார்சியா உள்ளிட்ட சாகோஸ் தீவுக் கூட்டங்களை, பிரிட்டனுக்குத் தாரைவார்த்தது மொரீஷியஸ். ஆனால், இந்த விடயம் சகோஸ் தீவு மக்களுக்குத் தெரியாது. இதற்கு முன்னதாகவே புவி அரசியல்ரீதியாக இந்தியப் பெருங்கடல் பகுதியைக் கண்காணிக்க சாகோஸ் தீவுகளை பிரிட்டனிடம் அமெரிக்கா கேட்டிருந்தது.







அதனால், முன்னாள் பிரிட்டன் பிரதமர் ஹெரால்டு வில்சன், அமெரிக்காவுடன் ஒரு ரகசிய ஒப்பந்தத்தைப் போட்டுக்கொண்டார்.

அதன்படி, 'தீவுகளில் இருக்கும் மக்களைக் காலிசெய்து, ஆளில்லாத கேந்திரமாக அதனை அமெரிக்க இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும்' என்று முடிவானது. தீவைக் காலிசெய்ய, பிரிட்டன் அரசு சாகோஸ் மக்களைப் பலவிதங்களில் துன்புறுத்தத் தொடங்கியது. கப்பல் போக்குவரத்தை மட்டுமே சார்ந்திருந்த மக்களுக்கு, கப்பல் போக்குவரத்தை நிறுத்தி உணவு, மருந்துப் பொருட்கள் தட்டுப்பாட்டை உருவாக்கியது. மீன்பிடி உரிமையைப் பறித்து, வாழ்வாதாரத்தை அழித்தது. பலரை நாடுகடத்தியது. பலர் அகதிகளாகப் பல்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். பட்டினியிலும் நோயிலும் பலர் இறந்து போனார்கள். பலர் தற்கொலை செய்து கொண்டார்கள். தீவைவிட்டு வெளியேறுபவர்களுக்கு வழங்குவதாகக் கூறிய நட்டஈடு தொகையும் முழுமையாக வழங்கவில்லை.

இப்படி மொத்த மக்களையும் சாகோஸ் தீவிலிருந்து வெளியேற்றிய பின்பு 'உலகைக் கண்காணிக்கும் தளம்' என்று பென்டகனால் கொண்டாடப்படும் மிகப்பெரிய இராணுவத் தளத்தை டீகோ கார்சியா தீவில் அமைத்தது அமெரிக்கா. விமான ஓடுதளங்கள், சற்றலைட் உளவு நிலையங்கள், சுமார் 4,000 அமெரிக்கத் துருப்புகள், 30 போர்க்கப்பல்கள் அங்கு நிலைநிறுத்தப்பட்டன. ஈராக், ஆப்கான் போர்களை இங்கிருந்தே வழிநடத்தியது அமெரிக்கா. இடையே தீவின் குத்தகை ஒப்பந்தத்தை 2036ஆம் ஆண்டு வரைக்கும் நீட்டித்துக்கொடுத்தது பிரிட்டன். இதற்குப் பிரதிபலனாக, சில நீர்மூழ்கிக் கப்பல்களைத் தள்ளுபடி விலையில் பிரிட்டனுக்கு அளித்தது அமெரிக்கா.

கடந்த பல ஆண்டுகளாகவே, இரு நாடுகளின் எதேச்சதிகாரத்தை எதிர்த்து, தங்கள் தீவை வழங்கும்படி கேட்டுவந்தது மொரீஷியஸ் அரசு.

இங்கிலாந்தில் வசிக்கும் புலம்பெயர்ந்த சாகோஸ் மக்களும், இதுதொடர்பாக பிரிட்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கைத் தள்ளுபடி செய்தது பிரிட்டன் நீதிமன்றம். இதற்கிடையே, இந்த வழக்கு 2017 ஜூனில் ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றத்துக்கு வந்தது. இதில்தான் கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி, 'சாகோஸ் தீவை மண்ணின் மைந்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியிருக்கிறது சர்வதேச நீதிமன்றம். அந்தத் தீர்ப்பில், 'ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் அநீதிகளை எதிர்ப்பே இல்லாமல் உலக மக்கள் ஏற்றுக் கொண்ட காலம் எப்போதோ மாறிவிட்டது என்பதை பிரிட்டன் உணர வேண்டும்' என்று சாட்டையைச் சுழற்றியிருக்கிறது.

தீர்ப்பை பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, இந்தியா உள்ளிட்ட 31, நாடுகள் வரவேற்றுள்ளன. குறிப்பாக, இந்திய அரசின் வெளியுறவுத் துறை, மொரீஷியஸுக்கு சாதகமாக அளித்த வரலாற்று ஆவணங்களும் இந்தத் தீர்ப்புக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

தீர்ப்பு குறித்துப் பேசியுள்ள மொரீஷியஸின் பிரதமர் பிரவிண்ட் குமார் ஜெக்நாவுத், "மொரீஷியஸ் மற்றும் சாகோஸ் மக்களுக்கு இது ஒரு வரலாற்றுத் தருணம். சொந்த மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டு, அரை நூற்றாண்டாக உலகெங்கும் அகதிகளாக அலைந்து கொண்டிருக்கும் மண்ணின் மைந்தர்கள் விரைவில் சொந்த மண்ணுக்குத் திரும்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், பிரிட்டிஷ் அரசு, 'இந்தத் தீர்ப்பை ஓர் ஆலோசனையாக மட்டுமே எடுத்துக்கொள்வோம்' என்று கூறியிருக்கிறது. அமெரிக்காவோ, இதுவரை வாயே திறக்கவில்லை. ஆனால், இரு நாடுகளையும் சர்வதேச சமூகம் உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறது. இங்கிலாந்தும் அமெரிக்காவும் சொல்லப்போகும் வார்த்தைகளில்தான் அந்த நாடுகளின் மொத்த மாண்பும் அடங்கியிருக்கிறது!

**ஜூனியர் விகடன்**

---

# அக்கா ஊதுபத்தி வாங்குங்கோ என் மனதை உருக்கிய வார்த்தை

"அக்கா! அக்கா!

மூன்று ஊதுபத்தி நூறு ரூபா.

வாங்குங்க! படிக்க எனக்கு உதவி செய்யுங்கோ!" என ஏழ்மையிலும் எளிமையான குரல் ஒன்று.

பயணங்களில் வீதிகளைக் கடந்து செல்லும் போது எல்லோர் கண்களும் பல காட்சிகளை கண்டிருக்கும். அதேபோன்று நானும் என் பயணத்தை ஆரம்பிக்கும் போது என் இரு கண்களும் என்னிடம் அனுமதி கேட்காமலே வீதியின் இரண்டு கரைகளையும் நோக்கி நீண்டு விடுகின்றன.

யாழ்.பேருந்து தரிப்பிடத்தின் அருகாமையிலும் அதனை அண்டிய வீதிகளில் வயிற்றுப்பிழைப்புக்காக பத்து,இருபது என்று ஊதுபத்தி வியாபாரம் செய்யும் சிறுவர்கள் அவ் வீதியால் செல்பவர்களை வழிமறித்து ஊதுபத்திகளை வாங்கச் சொல்லி அடம்பிடிப்பார்கள். அச் சிறுவர்களின் ஏக்கங்களை கூற வார்த்தைகளே இல்லை.

கடந்த காலத்தை இருளில் புதைத்து விட்டு நிகழ்காலத்திலே தம் கைகளிலே புத்தகம் தூக்கிப் பள்ளி செல்ல வேண்டிய வயதினிலே தம் எதிர்காலக் கனவுகளையும் கலைத்து கேள்விக்குறியாக்கி விட்டு , நிறம் குன்றிய பழைய கிழிந்த ஆடையுடன் இரு கைகளிலும் ஊதுபத்தியை ஏந்திக் கொண்டு பெரிய ஏக்கத்துடன் அவ்வழியால் வருபவர்களை ஓடிப்போய் இடைமறித்து ஊதுபத்தி வாங்கச் சொல்லி கெஞ்சலாகக் கேட்பார்கள்.அதனை வாங்கினால் ஆயிரம் ரோஜாக்கள் மலர்ந்தது போல ஆனந்தம் அச்சிறுவர்களின் முகத்தில். வாங்கவில்லையேல் மலர்ந்த மொட்டுக்கள் கருகியது போல வாடிவிடும். இதனை நான் பல தடவைகள் அவதானித்திருக்கிறேன்.அச் சிறுவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வீதியில் அல்லற்படும் நிலையை எப்படி வார்த்தைகளால் கூறுவது....

கடந்த தீபாவளிக்கு முதல்நாள் நானும் என் நண்பியும் யாழ்.பேருந்து தரிப்பிடத்திற்கு அருகாமை உள்ள கடைக்குச் சென்றோம். அப்போது "அக்கா அக்கா..." என அழைக்கும் சத்தம் கேட்டது. நான் சற்றுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு பத்து வயது மதிக்கத்தக்க அழகான சிறுமி கையிலே சொப்பின் பை அதனுள் ஊதுபத்திகள் ஏந்தியபடி நின்றாள். ஓடி வந்த சிறுமி அக்கா எனக்கு படிக்க



காசில்லை. இந்த ஊதுபத்திய வாங்குங்க! என கெஞ்சலாகக் கேட்டாள். அப்பொழுது நேரம்கூட மாலை ஐந்தினை தாண்டி விட்டது. எனக்கு பார்த்ததும் என்ன செய்வதென்று தெரியவில்லை. நானும் நூறு ரூபாய் காசை கையில் கொடுத்து விட்டு, தனியாகவா இவ்விடத்தில் நிற்கிறீர் எனக் கேட்க, சிறுமியும் ஆம் எனத் தலையசைத்தாள்...உடனே வீட்டுக்குப் போங்க எனக் கூறி விட்டு நானும் அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டேன். யாருமே அந்தச் சிறுமியை கண்டிடாமல் கடந்து செல்கிறார்கள். அந்த வேளையில் அச் சிறுமி வீதியிலே வயிற்றுப்பிழைப்புக்காக அல்லாடிய அந்த காட்சி யார் மனதையும் தைக்காமல் விட்டது ஏனோ என எண்ணத் தோன்றியது.

போரின் போது நாம் பட்ட துன்பங்களை விட போருக்குப் பின் தமிழ் சமூகம் ஒரு நாள் வாழ்க்கையை எப்படிப் போக்குவது என அவதியுறுகின்றார்கள். போருக்கு பின்னைய நிலையில் அரசியல் தீர்வு காண மக்களிடம் வாக்குகளை பெற்று தீர்வுகாணச் சென்ற சில தலைமைகள் ஏழை மக்களை கணக்கெடுப்பதே இல்லை.அரசியல் தலைமைகளும் அவர்களை சார்ந்தவர்களும் தம் போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எங்கே ஏழை மக்களின் நிலை புரியப் போகிறது.


ஆனால் ஏழை மக்கள் அன்றும், இன்றும் ஏழைகளாகவே தம் வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாமல், தம் குழந்தைகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வசதிகளின்றி தவிக்கிறார்கள்.

**"கொடிது கொடிது ஏழையாய் பிறப்பது அதனிலும் தாய்,தந்தை,உறவின்றி பிறப்பது வறுமையிலும் கொடிது"**

ந.சர்மியா
யாழ்.பல்கலைக்கழகம்.

**மாற்றி யோசிப்போமா?**

# தென்னை மரத்தூளில் உணவுத் தட்டுக்கள்



கடந்த வருடம் வீசிய கஜா புயலின் தாக்கம் இந்தியாவின் தமிழ்நாட்டின் டெல்டா விவசாய வலையத்தைப் பரட்டிப் போட்டு விட்டது.

விவசாயத்திற்கு பெரும் அழிவை ஏற்படுத்திய கஜா புயலில் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் அடியோடு சரிந்து விட்டன.


இவற்றை அப்புறப்படுத்துவது விவசாயிகளுக்கு பெரும் சுமையாக இருந்தது.

இந்த வேளையில் இந்திய உணவுப் பதனீட்டு தொழில்நுட்பக் கழகத்தில் வீழ்ந்த தென்னைகளை அரிந்து அந்தத் தூளில் இருந்து தட்டுக்களை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு ,வெற்றி கண்டுள்ளனர். இம்முயற்சி விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருப்பதுடன் வருமானம் தரும் வழியாகவும் உள்ளது.

இவை சுற்றுச்சூழலுக்கும் மிகவும் ஏற்றவை. பயன்படுத்திய பிறகு இத்தட்டுக்களை மண்ணில் போட்டால் சில நாட்களிலேயே மக்கி விடும். இந்த்த் தட்டுக்கள் தண்ணீரை உறிஞ்சுவதில்லை என்பதால் ஐஸ்கிறீம் உள்ளிட்ட தின்பண்டங்களையும் இதில் வைத்துச் சாப்பிட முடியும். இத்தட்டுக்கள் பிளாஸ்ரிக் தட்டுக்களுக்கு சிறந்த மாற்றாக இருக்கும்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை புற்றுநோய் அதிகரிப்பு மிக மோசமான நிலையில் உள்ளது. எமது உணவுப் பழக்கம், வாழ்க்கை முறை என்பனவே இவற்றில் செல்வாக்குச் செதுக்கின்றன. எனவே புற்றுநோயை உண்டு பண்ணும் பொலித்தீனை ஒழித்து நாமும் மாற்றியோசிப்போமா?

---



**வேங்கை இரகசியம்**

வேங்கை என்றதும் சீற்றம் தான் நினைவுக்கு வரும். ஆனால், அவை கூச்சச் சுபாவம் கொண்டவை.

ஆசியச் சிறுத்தையே (**Asiatic cheetah)** வேங்கைப்புலி எனப்படுகிறது.

முன்பு இந்தியாவில் பரவலாகக் காணப்பட்ட இவை, வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் அதிகம் வேட்டையாடப்பட்டன.

இப்போது மிக அரிதாகவே உள்ளன. இரானில்தான் ஓரளவு இருக்கின்றன. வேங்கைப் புலியின் காலடித் தடத்தை 'புக்மார்க்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

அதைவைத்து ஒரு வேங்கையின் வயது, எடை, உயரம் போன்ற விடயங்களைக் கணக்கிடுவார்கள்.



**செவ்வாய்க்கிரகத்தில் காற்றின் சத்தம்!**

செவ்வாய்க்கிரகத்துக்கு நாசா அனுப்பிய 'இன்ஸைட் லான்டர்' என்ற செயற்கைக்கோள், அங்குள்ள காற்றின் சத்தத்தை ஒலிப்பதிவு செய்துள்ளது.

விநாடிக்கு 5 முதல் 7 மீற்றர் வேகத்தில் வீசிய காற்று, இன்ஸைட் லான்டரின் சோலர் பேனல்களில் கடந்ததை சென்சார் பதிவுசெய்துள்ளது. 'சிறிய கொடி ஒன்று காற்றில் அசைவது போன்றது' எனப் பரவசமாகச் சொல்கிறார்கள் ஆய்வுக் குழுவினர்.

**இது நம்ம கதைகள்... 41**

# கிராக்கி


ஒரு விடயத்திற்கான தேவை அதிகரிக்கும் போது அதற்கான கிராக்கியும் அதிகரிக்கின்றது. இது பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் பொருந்தும்.

அண்மையில் எம் நாட்டில் புதிய வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. பொதுவாக ஊகங்களின் அடிப்படையில் வரவு - செலவுத்திட்டத்திற்கு முன்னதாகவே சில சேவைகள், பொருட்களுக்கு செயற்கையான அருந்தல் நிலை ஏற்பட்டு அதற்கான கிராக்கி அதிகரித்துவிடுவது வழமை. ஆயினும் இவ்வருட வரவு- செலவுத்திட்டம் பெரிய எதிர்பார்ப்புக்கள் இன்றி வந்துபோயிற்று. அடிமட்ட மக்கள் மகிழ்வுற பெரிதாக ஏதுமில்லையெனவும், மத்தியதட்டு மக்களுக்கே ஒரு சில சகாயங்கள் கிட்டியுள்ளன எனவும் விமர்சனங்கள் எழுவதையும் காணலாம். வருமாண மார்க்கங்களை மிகைப்படுத்தியும், செலவீனங்களைக் குறைத்தும் காட்டி ஆரோக்கியமான வரவு - செலவுத்திட்டமாக இதனைக் காட்டும் மாயாஜாலங்களும் இம்முறை நிகழ்ந்துள்ளதாக நோக்கர்கள் கருதுகின்றனர்.

வரவு- செலவுத்திட்டம் பற்றிய அபிப்பிராயங்கள் ஒருபுறமிருக்க, நாட்டின் வேலைவாய்ப்பு நிலைவரமும் ஆரோக்கியமாகவில்லை என்பதே பலரின் கருத்தாகும். உலகின் தொழிற்சந்தையை நோக்கியதாக எம் கல்விமுறையும், தொழிற்கல்வியும் முனைப்புப் பெறவில்லை என்பதே நிபுணர்களின் ஆதங்கமாகும்.

உலகளாவிய ரீதியில் செயற்றிட்ட முகாமையாளர்கள், தாதிய மற்றும் மருத்துவ சேவையாளர்கள், மென் பொருள் மற்றும் மின் பொறியியலாளர்கள், சந்தைப்படுத்தும் முகாமையாளர்கள் மற்றும் வணிகத்துறை ஆய்வாளர்கள் ஆகிய பதவிகளுக்கே அதிக கிராக்கி நிலவுவதாக புள்ளிவிபரங்கள் சுட்டுகின்றன. ஆயினும் எம்மவர்களோ "வந்தால் ராஜாவாகத்தான் வருவேன்" என்ற பாணியில் உயர் தொழிற்றுறை கற்கை நெறிகளை மட்டுமே இலக்கு வைத்து ஏனைய துறைகளை உதாசீனம் செய்வதால் தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்படுகின்றன. இந்தத் தொழில்வாய்ப்புக்களுக்கு ஏற்பட்ட கிராக்கியை ஈடுசெய்ய அதற்குரிய திறன் தொழிலாளர்களை வேறு பிராந்தியங்களிலிருந்து நாம் பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த சிந்தனைகளை எம் இளைஞர்களுக்குச் சமர்ப்பித்து இவ்வாரக் கதைக்குள் உங்களை அழைத்துச் செல்கின்றேன்....

அதுவொரு பெரிய நிறுவனம். அங்கேயொரு திறன் தொழிலாளி சேவையாற்றினார்.





அவரின் வினைத்திறனில் நிர்வாகம் பெரிதாகத் திருப்தியடையாவிட்டாலும், அத்தகைய திறன் தொழிலாளர்களுக்குக் கிராக்கி நிலவியதால் அவரைத் தக்கவைத்திருந்தது. இதை புரிந்து கொண்ட நம்மாளும் அதையே சாட்டாக வைத்து அடிக்கடி தன் சம்பளத்தை உயர்த்திக் கொண்டேபோனார். அவர் கேட்டபோதெல்லாம் சம்பளத்தை அதிகரித்துக் கொடுத்துவந்த நிர்வாகம் ஒரு கட்டத்திற்குப்பின் அவர் சம்பளத்தை இனி உயர்த்துவதில்லையெனத் தீர்மானித்தது.

நிர்வாகத்தின் திடீர் முடிவு கண்டு ஆடிப்போனார் நம்மாள். எப்படியாவது நிர்வாகத்தை மசியவைத்து தன் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று பெரும் திட்டங்கள் தீட்டினார். முகாமையாளரிடம் சென்றார்." ஐயா மூன்று பெரும் நிறுவனங்கள் எனக்குப் பின்னாலும் ,முன்னாலும் ஓயாமல் திரிகிறார்கள். நீங்கள் என் சம்பளத்தை 10 வீதத்தால் உயர்த்தித்தராவிட்டால் நான் ஒரு முடிவெடுத்தேயாக வேண்டும். என்ன சொல்கிறீர்கள் முடிவாக" என்று திமிராகக் கேட்டார்.

முகாமையாளர் ஒரு கணம் சிந்தித்தார். "இவன் வேலையில் திருப்தியில்லாவிட்டாலும், இவன் துறையில் நிபுணத்துவம் பெற்ற இன்னுமொருவனைத் தேடுவது சிரமம். எனவே இவன் கேட்கும் சம்பள உயர்வைக் கொடுத்துவிடுவோம்" எனத் தீர்மானித்தவராக " சரி நீ கேட்ட சம்பள உயர்வை தருகின்றேன்" என்றார். நம்மாளும் மனமகிழ்வோடு முகாமையாளர் அறையைவிட்டு வெளிக்கிளம்ப ஆயத்தமானான். அந்த வேளையில் முகாமையாளர் அவனைப் பார்த்து "அது சரி மூன்று பெரும் நிறுவனங்கள் உன்னை சதா பின் தொடர்வதாகச் சொன்னாயே அவை எவையென்று நான் அறியலாமா? " என்று கேட்டார்.

இறுமாப்புடன் "மின்சார சபை, நீர் வழங்கல் அதிகாரசபை, தொலைத்தொடர்பு நிறுவனம் " எனப் பதிலுரைத்தான் நம்மாள்.

"இந்தப் பெரிய நிறுவனங்களெல்லாம் உன்னைத் தங்கள் நிறுவனத்தில் இணைத்துத் தொழில்வழங்கப் போட்டிபோட்டு உன் பின்னே திரிந்தார்களா? " என்று வியப்புடன் கேட்டார் முகாமையாளர்.

"எனக்கு வேலை தருவதற்காக அவர்கள் என் பின்னே திரிந்தார்கள் என்று நான் எப்போதாவது சொன்னேனா. அவர்கள் என் பின்னே திரிந்தது நான் செலுத்தவேண்டிய மின்சார, குடிநீர், தொலைபேசிக் கட்டணங்களை அறவிடவே. அதைச் செலுத்துவதற்காகவே 10வீத சம்பள அதிகரிப்பைக் கேட்டேன் " என்றான் நம்மாள் அமைதியாக.

**பரமசிவன் கழுத்திலிருந்து**
**பாம்பு கேட்டது "கருடா சௌக்கியமா"**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# மீண்ட அபிநந்தன் போராட்டத்தின் கதை!



பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாநிலத்திலுள்ள பாலகோட் நகரம், இன்னும் சிறிது நேரத்தில் உலகத் தலைப்புச் செய்திகளில் இடம்பெறப் போவதை அறியாமல் உறங்கிக்கொண்டிருந்தது. இரையை நோக்கி நகரும் புலிகளாக, ரேடாரில் எந்த சத்தமும் எழுப்பாமல், இந்திய விமானப்படையின் மிராஜ் 2000 ரக போர் விமானங்கள் பாகிஸ்தான் வான் எல்லைக்குள் ஊடுருவின.

பாலகோட் அருகேயிருந்த ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தின் தீவிரவாத முகாம்கள்தாம் இலக்கு. இஸ்ரேல் தயாரிப்பான 'ஸ்பைஸ் 2000' ரக ஏவுகணைகளை, கண்ணிமைக்கும் நேரத்துக்குள் செலுத்திய நான்கு மிராஜ் விமானங்கள், தீவிரவாதிகளின் முகாம்களைத் துவம்சம் செய்தன. பேய் வேகத்தில் நடைபெற்ற இத்தாக்குதலால் நிலைகுலைந்துபோன பாகிஸ்தான் விமானப்படை, சுதாரித்து எழுவதற்குள் இந்திய விமானப்படையின் விமானங்கள் நமது வான் எல்லையில் பறந்து கொண்டிருந்தன.

"எல்லைதாண்டிய தாக்குதலை, பாகிஸ்தான் ஒருபோதும் அனுமதிக்காது. தக்க பதிலடி கொடுப்போம்" என்று பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சர் கொக்கரித்த சில மணிநேரத்திலேயே, எல்லைப் பாதுகாப்புப் பகுதியில் துப்பாக்கிச் சண்டை தீவிரமாகிவிட்டது. பெப்ரவரி 27 ஆம் திகதி காலை, இந்திய வான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த பாகிஸ்தானின் எப் - 16 ரக போர் விமானங்களை, இந்திய விமானப்படை துரத்தியது. இந்த ரேஸில், சக்தி வாய்ந்த எப் - 16 போர் விமானத்தை, இந்தியாவின் மிக் 21 ரக விமானம் சுட்டு வீழ்த்தியது. எதிர்பாராத விதமாக மிக் 21 விமானம் விபத்துக்குள்ளாக, அதிலிருந்து பரசூட் உதவியுடன் தப்பிய இந்திய விமானி அபிநந்தன் வர்த்தமான் பாகிஸ்தானியர்களிடம் பிடிபட்டார்.

உள்ளூர் பாகிஸ்தானியர் சிலர் அபிநந்தனைத் தாக்கினர். முகத்தில் இரத்தம் வடிய சிக்கியிருந்தவரை மீட்ட பாகிஸ்தான் இராணுவத்தினர், அவரைப் பாதுகாப்பாக மீட்டு இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

ஒரு கோப்பைத் தேநீருடன் அபிநந்தன் பாகிஸ்தான் வீரர்களுடன் சகஜமாக உரையாடும் வீடியோக்கள் வைரலாகின. அபிநந்தன் சிறைப்படுவது தொடர்பான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாக, ஜெனிவா ஒப்பந்தப்படி அபிநந்தனை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று உலக நாடுகளிடமிருந்து பாகிஸ்தான் அரசுக்கு அழுத்தம் ஏற்பட்டது.

இவ்விவகாரத்தில் மோடி 'ஸ்கோர்' செய்வதற்குள் எதையாவது செய்தாக வேண்டிய நெருக்கடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கும் எழுந்தது. பெப்ரவரி 28 ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பேசிய இம்ரான்கான், சமாதானத்தின் அடிப்படையில் அபிநந்தனை பாகிஸ்தான் அரசு விடுவிப்பதாக அறிவித்தார். இதற்குக் கண்டனக் குரல்களும் பாகிஸ்தானுக்குள் எழுந்தன. அபிநந்தனை விடுவிப்பதை எதிர்த்து பாகிஸ்தான் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கும் தொடரப்பட்டது. மார்ச் முதலாம் திகதி மாலை 4 மணிக்கு வாகா எல்லை வழியாக, இந்தியாவிடம் அபிநந்தன் விடுவிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டவுடன் இரு நாடுகளும் பரபரப்பாகின.

அபிநந்தனை விடுவிப்பதில் பாகிஸ்தான் தரப்பில் வேண்டுமென்றே கால தாமதம் ஏற்படுத்தப்பட்டதாக, இந்திய இராணுவ அதிகாரிகள் கருதுகின்றனர். மாலை 4 மணிக்கு விடுவிக்கப்படுவதாக அறிவித்துவிட்டு, இரவு 9 மணியளவில் தான் இந்தியாவிடம் அபிநந்தனை பாகிஸ்தான் அரசு ஒப்படைத்தது.


வழக்கமாக எதிரி நாட்டில் சிக்கியவர்கள் மீட்கப்படும்போது, அந்நாட்டு அதிகாரிகள் மூளைச்சலவை செய்துள்ளனரா? துன்புறுத்தல் ஏதும் நடந்ததா? என்பது குறித்து விசாரிக்கப்படும். வாகா எல்லையைக் கடந்து வந்த அபிநந்தனை விசாரித்த இராணுவ மற்றும் உளவுத் துறையின் மூத்த அதிகாரிகள், பாகிஸ்தான் அரசிடம் அபிநந்தன் ஏதும் கூறினாரா? என்பதைக் கேட்டறிந்தனர்.


டில்லி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அபிநந்தனுக்கு, நோய்த் தொற்று சோதனை, உளவுக் கருவிகள் உடலில் செலுத்தப்பட்டதா? போன்ற சோதனைகள் செய்யப்பட்டன. மனைவி தன்வி மார்வா, ஏழு வயது மகன் தவிஷ், தங்கை அதிதியுடன் இராணுவ வைத்தியசாலையில் ஓய்வெடுக்கும் அபிநந்தன், இன்னும் சில நாட்களில் தனது வழக்கமான பணிக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அபிநந்தனின் பூர்வீகம் கேரளா என்றாலும், அவர் வளர்ந்தது எல்லாமே திருவண்ணாமலையில் தான். அவர் தந்தை சிம்மக்குட்டி வர்த்தமானும் விமானப்படை அதிகாரியாகப் பணியாற்றியவர் தான். இப்போது அவரது ஹேர்ஸ்டைல், மீசை எல்லாம், இளைஞர்களிடம் 'டிரெண்ட்' ஆகப்பரவுகிறது. அவரை நிஜ நாயகன் என்று கொண்டாடுகிறது இந்தியாவின் இளைய தலைமுறை.

அபிநந்தனை மையமாக வைத்துத் திரைப்படமெடுக்கவும் சிலர் தயாராகி வருகின்றனர். எப்படியோ இந்த ஆண்டின் வைரல்களில் அபிநந்தனுக்கும் முக்கியமான இடமுண்டு.

# மண்ணைச் சாப்பிடும் மக்கள்





ஹவுதி அடுத்த சோமாலியாவாக மாறி வரும் நாடு. இங்கு மக்கள் மண்ணால் உருவான கேக்கைச் சாப்பிடுகிறார்கள். ஹவுதியை வறுமை வாட்டி வதைக்கிறது. ரொட்டி, பால், அரிசி போன்ற எதையும் இவர்களால் வாங்க முடியாது. கடைசியாக எப்போது சாப்பிட்டீர்கள் என்று கேட்டால் இங்கு யாருக்குமே அது நினைவில் இல்லை.

குழந்தைகளுக்கு முதல் நாள் இந்த மண் கேக்கை ஊட்டுகிறார்கள். மறுநாள் குழந்தை வயிற்று வலியால் துடிக்கும். அடுத்தநாள் பட்டினி. அதற்கு அடுத்த நாள் வயிறு காய்ந்து குழந்தை அலறும். அப்போது மீண்டும் மண் கேக். இப்படிக் கொடுத்துக் கொடுத்து மண் கேக் அந்தக் குழந்தைகளுக்குப் பழகி விடும்.

இந்தக் கேக்கில் எந்த ருசியும்இருக்காது. பணம் இருந்தால் கொஞ்சம் உப்பு வாங்கி மண் கேக்கிற்கு தொட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். இந்தக் கேக் ஒருவகை களி மண்ணால் செய்கிறார்கள். விலை வாசி உயர்வு வேறு. எந்த நாட்டையும் விட ஹவுதியை கடுமையாகப் பாதித்திருக்கிறது. வெங்காயம், வெள்ளைப் பூண்டு, மீன், ரொட்டி என அனைத்துக்குமே வெளிநாடுகளைத் தான் நம்பியிருக்கிறார்கள்.

உள்நாட்டில் எந்த உற்பத்தியும் இல்லை. விவசாய நிலங்கள் என்று எதுவும் இல்லை. எல்லாமே பொட்டல் காடுகள் தான். எஞ்சியிருந்த காடுகளையும் விறகிற்காகவும் கரிக்காகவும் அழித்துவிட்டார்கள். நிலைமையை மீட்டெடுக்கின்றோம் என்று 1980 இல் ஹவுதியில் பொருளாதாரக் கதவுகளை அந்நாட்டு அரசு திறந்துவிட்டது.

எதை வேண்டுமானாலும் இறக்குமதி செய்து கொள்ளலாம். அதற்கு வரிகள் கிடையாது. இதன் விளைவாக வேண்டியது அனைத்தும் கிடைத்தன. ஆனால் விலை தான் வாங்க முடியாத உச்சத்தில் இருந்தது. போராடத்தொடங்கிய மக்கள் அதனால் எந்தப் பலனும் கிடைக்காமல் போய் இறுதியில் பிச்சையெடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

பெண்களும் குழந்தைகளும் வயதானவர்களும் மண்கேக் சாப்பிட்டனர். இளைஞர்கள் பணக்காரர்களிடம் கொள்ளையடித்தனர். இப்படியே வளர்ந்து இன்னுமொரு சோமாலியாவாக ஹவுதி மாறி வருவத உலகிற்குத் தெரிய வந்தது.

பொருளாதாரத்தைச் சரிவரக் கையாளும் ஒரு திறன்மிக்க அரசு இல்லாவிட்டால் இதுபோன்ற பிரச்சினைகள் தவிர்க்க முடியாதவையே.


வி.பிரணவன்
யாழ்ப்பாணம்.

# இனி யார் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்ற விவாதத்திற்கு இடமில்லை




சில மாதங் களுக்கு முன்பு வரை விராட் ஹோலி, அவுஸ்திரேலியாவின் ஸ்மித், இங்கிலாந்தின் ரூட், நியூசிலாந்தின் வில்லியம்சன், தென்னாபிரிக்காவின்ஹசிம்ஆம்லா ஆகியோரில் யார் உலகின் தலைசிறந்த துடுப் பாட்டவீரர் என்ற விவாதம் அவ்வப்போது வரும். ஆனால் இப்போது அதைப்பற்றி பேச்சே வருவதில்லை. இதற்கு காரணம் மற்றவர்களைவிட வேறு லெவலுக்கு யாரும் நெருங்க முடியாத அளவிற்கு வெகு தூரம் சென்றுவிட்டார்ஹோலி.

கிரிக்கெட்டில் சாதனைகள் என்பது அரிதாகவே படைக்கப்பட்டு வந்தது. சச்சின், ஹோலி போன்றோர் இதற்கு விதிவிலக்கு. இன்று ஹோலி எடுக்கும் ஒவ்வொரு ரன்னும் ஏதாவது ஒரு விதத்தில் சாதனையாக மாறிவருகிறது. ஹோலி மட்டும் எப்படி பவுலர்களை சாதாரணமாக விளாசுகிறார், என்ற கேள்வி எழுமளவிற்கு அவரின் துடுப்பாட்டம் உள்ளது. டை மிங், பர்ஃபெக்ஷன், ப்ளேஸ் மென்ட் என அனைத்திலும் இன்று கோலிக்கு நிகர் அவரே.



ஒருநாள் போட்டிகளில் ஹோலி படைக்காத சாதனைகளே இல்லை என்றளவிற்கு புள்ளிவிபரங்கள் விரைவில் மாறும் என்று பலர் கருத்து தெரிவித்து வருகின்றனர். அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி எடுத்த ஓட்டங்கள் 250. இதில் கோலியின் பார்ட்னர்ஷிப் ஓட்டங்கள் 248.

இந்தப் போட்டியில் இந்திய அணி எடுத்தட்டங்கள் 46% ஓட்டங்கள்ஹோலி எடுத்தவை. அதிக ரன்களில் மட்டுமல்ல. ஃபினி ஷிங், அதிரடி, வின்னிங் லீடர் என ஹோலி இந்திய அணிக்கு பல வகைகளில் பங்களித்து வருகிறார்.

உள்நாடு, வெளிநாடு, துடுப்பாட்டவீரர், சேசிங், சுழற்பந்து, துடுப்பாட்டம், துடுப்பாட்ட பிட்ச், பநதுவீச்சு பிட்ச் என எந்த வேறுபாடும் இல்லாமல் அனைத்து விதமான சூழ்நிலைகளிலும் தான் நம்பர்-1 என்பதை நிருபித்து வருகிறார். கடைசியாக விளையாடிய 14 தொடர்களில் 13 தொடர்களில் பேட்டிங் சராசரி 50+. இப்படி ஒரு கன்சிஸ்டன்டாக விளையாட விராட் ஹோலியால் மட்டுமே முடியும். 92, 77, 134, 58. இந்த எண்கள் ஓட்டங்கள் இல்லை. கடைசி 4 வருடங்களில் ஹோலியின் பேட்டிங் சராசரி. வேறெந்த துடுப்பாட்டம் ஒருநாள் போட்டிகள் வரலாற்றில் இப்படியொரு சராசரியை வைத்திருக்க இயலாது.

கடைசி 3 வருடங்களில் அதிக ரன்கள் (3481), அதிக நிமிடங்கள் (3363) களத்தில் பட்டிங் செய்தது, அதிக பந்துகள் (3525) சந்தித்தது, அதிக பவுண்டரிகள் (327), அதிக சதங்கள் (15), டாப் 5 பட்ஸ்மேன்களில் அதிக ஸ்ட்ரைக் ரேட் (98.75), அதிக துடுப்பாட்ட சராசரி (89.25), டாப் 5 துடுப்பாட்ட வீரர்களின் அதிக சிக்ஸர் அடித்த வீரர் (43) என ஹோலியின் சாதனை புள்ளிவிபரங்கள் பட்டியல் எல்லையின்றி சென்றுகொண்டே இருக்கும்.

சேசிங் கிங், பெஸ்ட் துடுப்பாட்டம் என அதிகம் அறியப்பட்ட ஹோலி அதிரடி, ஃபினிஷிங், கப்டன் பொறு ப்புகளிலும் அசத்தியுள்ளார். பினிஷர் என்றால் கடைசி சில ஓவர்களில் இறங்கி அடி த்து ஆடி வெற்றிபெற வைப்பது




என்பதுதான் இதுவரை நாம் பார்த்தது.

ஃபினிஷர் என்பதற் கான வரையறையை மாற்றிய வர் கோலிதான். தொடக்கம் முதலே தேவையான ரன் ரேட்டை மெய்ன்டைன் செய்து பல ஓவர்கள் இருக்கும் போதே அணியை வெற்றி பெற செய்வார் ஹோலி. முதல் விக்கெட்டிற்கு களமிறங்கும்ஹோலி கடைசி 3 வருடங்களில் 54 போட்டிகளில் 14 முறை நாட் அவுட் என்பது குறிபிடத்தக்கது.


ஒரு துடுப்பாட்ட கொண்டாடப்பட்ட ஹோலி, ஒரு சிறந்த கேப்டனாக பெரியளவில் கொண்டாடப்படவில்லை. வெளிநாடுகளில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஹோலி தலைமையில் இந்திய அணி பல வரலாற்று வெற்றிகளை பெற்றுள்ளது. புள்ளிவிபரங்களின் அடிப்படையில் ஹோலியின் தலைமையில் இந்திய அணி வென்ற அளவிற்கு வேறெந்த இந்திய கேப்டனின் தலைமையிலும் இந்திய அணி வெற்றி பெற வில்லை.

பட்ஸ்மேன் ஹோலிக்கு கிடைத்த கிரடிட், கப்டன் ஹோலிக்கு கிடைக்கவில்லை. க்ப்டனாக ஹோலி சிறு தவறு செய்யும் போதெல்லாம் அது ஊதி பெரிதாக்கப்படும் ஆனால் அணிவெற்றி பெற்ற போதெல்லாம் அதற்கான கிரடிட் அவருக்கு அளிக்கப்படவில்லை.

கப்டனாக ஹோலி இன்னும் முதிர்ச்சியடைய வேண்டும் என்பது உண்மை. இருப்பினும் வெற்றி பெறும் போதெல்லாம் பெரிய அளவில் அவருக்கு கிடைக்காத கிரடிட், தோல்வி பெறும்போது விமர்சனம் அவர்மீது பாய்கிறது.

டெஸ்ட் போட்டிகளில் வெளி நாடுகளில் பெரிய சீனியர் வீரர்கள் இல்லாமல் கோலி தலைமையில் வெற்றிகளை பெற்றுவருவதையும் கவனிப்பது அவசியம்.

# எனக்கு மட்டும்...



அன்பான சங்குநாத வாசகர்களுக்கு ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கம்! வெயிலும் உச்சம் கொண்டு சுட்டெரிக்குது. சூரியனைத்தானே நிதர்சனத் தெய்வம் எண்டு விவசாயி போற்றிப் புகழுகிறான். அதெண்டால் மெய்தானே. "அஸ்தமிக்கும் சூரியனுக்கும் பஷ்மமாக்கும் உஷ்ணம் உண்டு" என்று ஆரோ ஒரு கவிஞன் சொன்னானாம். மாலைச் சூரியன் தானே எண்டு அலட்சியமா இருக்கக்கூடாதாம். வெப்பம் வெப்பம்தான். ஆரோ முதியவர் வாறனெண்டு சொன்னவர் எண்டு பெரியவர் விறாந்தையிலை வந்து காத்திருக்கிறார். ம்...ம்...பாலாண்ணை கூட்டிக்கொண்டு வாறார். அறுபத்தைஞ்சு வயசு... ஒரு வயசே...கம்பு மாதிரித் திரியினம்...இவர் என்னடா எண்டால் உன்னோடையோ...என்னோடையோ எண்டு சாய்ஞ்சு சாய்ஞ்சு வாறார். சரிசரி பாவம் என்ன பிரச்சினையோ-மனசோ உடம்போ எது களைச்சாலும் அது நோய் தானே. வந்திட்டார். ம்...கதிரையிலை முன்பக்கம் சாய்ஞ்சு குனிஞ்சு இருக்கிறார். பார்வையும் தெளிவா உறுதியா இல்லை. இடைக்கிடை பெருமூச்சு. விரலை நெட்டி முறிச்சுக் கொண்டு ஒரு பரபரப்பா அமைதி இல்லால் இருக்கிறார். ஊகூம்...உடல் மொழிகள் சரியில்லை. ம்...பாவம்... என்ன...நக்கல் சிரிப்புச் சிரிக்கிற மாதிரிக் கிடக்கு. எல்லாம் பெரியவரின்ரை அனுக்கிரகம்தான். வாய் மொழியைவிட உடல் மொழி விசேடமானது பாருங்கோ. சுகமா இருக்கிறன் எண்டு வாய் சொல்லும். ஆனால் பெருமூச்சு ஓராயிரம் கதை சொல்லும். கதைக்கத் தொடங்கினம்.

"என்ன ஆனந்தன் எப்பிடி...கண்டும் கன காலம் ...ஊரோடை வந்திட்டாய் போல" பெரியவர் திறந்த வினாத் தொடுத்திட்டுக் காத்திருக்கிறார்...ஓம் ஓம் அவரும் கதைக்கத் தொடங்கிறார்.

"ஏன் பெரியவர்... எனக்கு மட்டும் ஏன் இப்பிடி? எல்லா இடியும் என்ரை தலையிலைதான் விழவேணுமே...ஒரு சொட்டு நிம்மதி கிடையாது. எல்லா ஜன்னலும் கதவுகளும் இழுத்துப் பூட்டினமாதிரி ஒரே அமுக்கமாகக் கிடக்குது. மனம் விட்டுக் கதைக்க ஒரு நாதி கிடையாது. நெஞ்செரிக்குது. வயிறு காந்துது. பசியே எழும்புதில்லை...சுடச் சுடச் சோறு, கறி திண்டு ஆறு மாசமாச்சுது. சுடலைக்குள்ளை போயிருந்தலென்ன எண்டு கூடச் சில வேளை யோசினை வருது ...எல்லாருமே எதிரியாத் தெரியினம். சீ என்ன வாழ்க்கை..."

இடைவெளி இப்பதான் விட்டு ஆழமான மூச்செடுத்து மடமடவெண்டு ஒரு சொம்பு தண்ணியும் குடிச்சிட்டு வடிவாச் சாய்ஞ்சு ஒழுங்கா இருக்கிறார் பாவம் மனிசன்.

மழை அடிச்சு ஓய்ஞ்சமாதிரி ஒரு இறுக்கம் தளர்ந்து பெரியவர் தலையாட்டு ஒத்துணர்வு குடுக்கிறார். தோளை லேசாத் தட்டி ஆசுவாசப்படுத்திறார். அவ்வளவுதான்... ஆனந்தன் ஐயாவின்ரை கண்ணாலை அருவி கொட்டுது...

"ஓமப்பு...எல்லாம் அறிஞ்சனான். நாங்கள் எல்லாம் ஏன் இருக்கிறம். இழப்பு இழப்புத்தான் ஐயா. உங்கடை அவவை நல்ல வடிவாப் பார்த்து ராசாத்தி மாதிரியெல்லே அனுப்பினனீங்கள். இப்ப இப்பிடி சாப்பிடாமல் அழுது புலம்பிக் கொண்டு திரியேக்கை அவவின்ரை ஆத்துமா தவிக்காதே... நீங்கள் பழைய மாதிரி எழும்பி சமூக சேவைகள் செய்யத் தொடங்கினால் தானே அவவும் சந்தோசப்படுவா...சனசமூக நிலையக்காரப் பெடியள் சொன்னாங்கள்- இப்ப ஒண்டுக்கும் போறேல்லையோ. இளந்தாரிப் பெடியள் அந்தரிச்சு திசை தெரியாமல் நிக்கிறாங்கள். சனி,ஞாயிறு எண்டாலும் போய் வர வேண்டியதுதானே... மனசு சலிக்காமல் இருக்க வேணும் எண்டால் முழுமையா இயங்கிக் கொண்டு இருக்க வேணும். வேலை வேலை வேலை-பிறகு களைச்சுப்போய் பாயிலை படுத்தால் டக்கெண்டு தூக்கம் வரும். மனசிலையும் ஏதோ நல்லது செய்த நிறைவு வரும். நானும் வாறன். இண்டைக்குப் பத்து மணிக்குக் கூட்டம் எண்டு சொன்னவங்கள்..." பெரியவர் மேல் சட்டை போட்டுக் கொண்டு எழும்புறார். ஆனந்தனும் எழும்புறார்.

"ஓம் பெரியவர்...உரப்பை நிறையச்சுமை கொண்டு வந்தனான். இப்ப ரிசுப் பை மாதிரி இலேசாக் கிடக்குது. நான் இல்லாட்டி அங்கை ஒண்டும் நடவாது. பெடியள் பாவம்..." கேட்டியளோ- சுமைகளை சுகமான சுமைகளாக மாத்தினால் அந்தமாதிரி இருக்கும். சரி...சரி எனக்கும் வேலை தானே போட்டு வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சாரதா
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : பி.பி.ஸ்ரீநிவாஸ், பி.சுசிலா



ஒருத்தி ஒருவனை நினைத்து விட்டால் - அந்த
உறவுக்குப் பெயரென்ன? காதல் அந்த
ஒருவன் ஒருத்தியை மணந்து கொண்டால் அந்த
உரிமைக்குப் பெயர் என்ன? குடும்பம்
நினைத்தவன் அவளை மறந்து விட்டால் அந்த
நிலைமையின் முடிவென்ன? துயரம்
பிரிந்தவர் மீண்டும் சேர்ந்து விட்டால் அங்கு
பெண்மையின் நிலை என்ன? மௌனம்

ஒருத்தி ஒருவனை நினைத்து விட்டால் - அந்த
உறவுக்குப் பெயரென்ன? காதல்

இரவும் பகலும் உன்னுருவம் - அதில்
இங்கும் அங்கும் உன் உருவம்
இரவும் பகலும் உன்னுருவம் - அதில்
இங்கும் அங்கும் உன் உருவம்

அடக்கம் என்பது பெண்ணுருவம் - அதை
அறிந்தால் மறையும் என்னுருவம்
அடக்கம் என்பது பெண்ணுருவம் அதை
அறிந்தால் மறையும் என்னுருவம்

மறைக்க முயன்றேன் முடியவில்லை - உன்னை
மறக்க முயன்றேன் நடக்கவில்லை
மறைக்க முயன்றேன் முடியவில்லை - உன்னை
மறக்க முயன்றேன் நடக்கவில்லை

நினைக்கும் நிலையிலும் நான் இல்லை - உன்னை
நெருங்கும் தகுதியும் எனக்கில்லை

ஒருத்தி ஒருவனை நினைத்து விட்டால் - அந்த
உறவுக்குப் பெயரென்ன? காதல்

கேட்டேன் கேட்டது கிடைக்கவில்லை என்னை
கேலி செய்தாய் மனம் பொறுக்கவில்லை
கேட்டேன் கேட்டது கிடைக்கவில்லை என்னை
கேலி செய்தாய் மனம் பொறுக்கவில்லை

வாதம் செய்வது என் கடமை அதில்
வழியைக் காண்பது உன் திறமை
வாதம் செய்வது என் கடமை அதில்
வழியைக் காண்பது உன் திறமை

கண்டேன் கண்டது நல்ல வழி அது
காதலன் உடனே செல்லும் வழி
கண்டேன் கண்டது நல்ல வழி - அது
காதலன் உடனே செல்லும் வழி

சொன்னேன் பல முறை யாசிக்கிறாய் - நீ
சொன்னதை நானும் யோசிக்கிறேன்

ஒருத்தி ஒருவனை நினைத்து விட்டால் - அந்த
உறவுக்குப் பெயரென்ன? காதல்




தமிழ் சினிமாவில் ஒரு சில இயக்குனர்கள் படங்கள் என்றால் நம்பி போகலாம். அப்படி ஒரு இயக்குநர் தான் மகிழ்திருமேணி. ஆனால், அவருக்கான இடம் தமிழ் சினிமாவில் இன்னும் அழுத்தமாக கிடைக்கவில்லை. அவரின் மூலம் அருண் விஜய்க்கு தடையற தாக்கவில் கிடைத்த அங்கிகாரம், இந்த முறை மகிழ்திருமேணிக்கு தடம் படத்தில் கிடைத்ததா? பார்ப்போம்.

அருண் விஜய் எழில், கவின் என்று இரண்டு கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். எழில் ஒரு சிவில் இன்ஜினியர். சொந்தமாக சைட் பார்க்கும் அளவிற்கு வளர்ந்துள்ளார். அதே நேரத்தில் கவின் பல திருட்டுவேலைகளைசெய்து சம்பாதிப்பவர்.

ஒருநாள் எழில் மிகவும் மனவேதனையில் இருக்கின்றார், அதே நேரத்தில் கவினுக்கு ரூபாய் 9 லட்சம் வரை பணத்தேவை ஏற்படுகின்றது. இரண்டு பேருமே ஒரு இரவு தங்களுக்கான ஒருதேவையை நிறைவேற்ற செல்கின்றனர்.

அப்போது ஒரு பணக்கார இளைஞரை அருண் விஜய் கொலை செய்கின்றார். அடுத்தநாள் பொலிஸ் இந்த கேஸை கையில் எடுக்க, இதில் அருண் விஜய் புகைப்படம் அந்த வீட்டில் இருப்பது தெரிகின்றது.

ஆனால், இரண்டு அருண் விஜய் இருப்பதால், இவர்கள் யார், இவர்களில்யார்அந்த கொலையை செய்தார்கள்? என்பதை போலிஸ் துப்பறிய ஆரம்பிக்கின்றது. அதன் பிறகு நடக்கும் விறுவிறுப்பான டுவிஸ்ட் அண்ட் டர்ன்ஸே இந்த தடம்.

அருண் விஜய் இரண்டு கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். தோற்றத்திற்காக பெரிதும் மெனக்கெடவில்லை, கொஞ்சம் வாய்ஸ் மெதுவாக பேசினால் எழில், வேகவேகமாக பேசினால் கவின் அவ்வளவு தான் என்றாலும், எந்த ஒரு இடத்திலுமே குறை சொல்லவே முடியவில்லை.

அதிலும் இரண்டு பேரையும் விசாரிக்கும் போது அவர்கள் மாறி மாறி தங்கள் கதையை சொல்லும் இடம் மிகவும் ஈர்க்கின்றது. படத்தின் அருண் விஜய் தாண்டி நம்மை மிகவும் கவர்வது இவர்கள் கேஸை விசாரிக்கும் பெண் போலிஸாக வித்யா ப்ரதீப் தான்.

இந்த கேஸை முடித்தே ஆகவேண்டும் என்று அவர் அலைவதை கண்டு நமக்கே அட இப்ப கண்டுப்பிடித்துவிட மாட்டாரா? என்று நினைக்கவைக்கின்றது. இந்த புகழ் அனைத்து மகிழ்திருமேணிக்கே சேரும். ஆம், இரண்டாம் பாதியில் எல்லாம் யார் கொலை செய்துள்ளார் என்று அறிய சீட்டின் நுனிக்கு கொண்டு வந்துவிடுகின்றார்.

படத்தின் முதல் பாதி கதைக்குள் செல்லும் வரை கொஞ்சம் மெதுவாக சென்றாலும், கதைக்கள் சென்றவுடன் நம்மையும் திரைக்கதையுடன்அழைத்து செல்கின்றது. அதே வேளையில் இரண்டாம் பாதியில் வரும் சோனியா அகர்வால் அம்மா கதாபாத்திரம் தான் ஏதோ படத்திற்கு செட் ஆகாத பீல். அதிலும் அவர் அழும் காட்சி கொஞ்சமாது டப்பிங்கில் லிப் சிங் பாத்திருக்கலாம், மிகவும் செயற்கை. யோகி பாபு கூட படத்தில் இருக்கின்றார், அவ்வளவுதான் என்பது போல் இருக்கின்றது.

படத்தின் இசை மற்றும் ஒளிப்பதிவு ஒரு கிரைம் படத்திற்கான வேலையை சரியாக கொடுத்துள்ளனர், படத்தின் மிகப்பெரும் பலம் எடிட்டிங் தான். இரண்டு அருண் விஜய், அவர்களையும், அவர்கள் சொல்லும் கதையையும் அனைவருக்கும் புரியும் விதத்தில் கட் செய்து காட்டியுள்ளனர்.

படத்தின் திரைக்கதை, செம்ம விறுவிறுப்பாக செல்கின்றது.

கிளைமேக்ஸ் டுவிஸ்ட், நாம் ஒன்று எதிர்பார்த்து அட இது தானே என்றால் அதிலிருந்து வேறு இடத்திற்கு செல்கின்றது.

டெக்கனிக்கல் விஷயங்கள்.

படம் முடிந்து அந்த டுவிஸ்ட் மனநிலையிலேயே மக்களை செல்ல விடாமல், அதன் பிறகு வைத்த சில காட்சிகள் கொஞ்சம் தேவையில்லையோ என தோன்றுகின்றது.


மொத்தத்தில் அருண் விஜய்யும், மகிழ்திருமேணியும் தமிழ் சினிமாவில் மீண்டும் அழுத்தமான ஒரு தடத்தை பதித்துள்ளனர்.








# புரையோடிக் கிடக்கும் இலஞ்சம்- ஊழல் கரைசேருமா இலங்கை



நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இலஞ்சம், ஊழல் மோசடிகளை முற்றாக ஒழிப்பதற்கானதொரு காத்திரமான வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை எதிர்வரும் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்க விருப்பதாக இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி சரத் ஜயமான்ன தெரிவித்திருக்கின்றார்.

கடந்த காலங்களில் இலஞ்சத்தையும், ஊழல் மோசடிகளையும் ஒழிப்பதற்கான பல்வேறுபட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சட்டத்தின் ஓட்டைகளில் நுழைந்து அவற்றிலிருந்து தப்புவது மட்டுமன்றி இலஞ்சம், ஊழல் மோசடிகள் தொடர்ந்த வண்ணமே காணப்பட்டன. இன்றளவும் கூட ஊழல் மோசடிகளும், இலஞ்சமும் இடம் பெற்றவாறே உள்ளன. சின்னஞ்சிறிய விடயமானாலும் பெரிய விவகாரமானாலும் இலஞ்சமின்றி அவற்றை வெற்றிகொள்ள முடியாத நிலையையே பார்த்து வருகின்றோம். இதனைத் தடுப்பதற்கு எத்தனையோ வழிகளை முன்னெடுத்தாலும் அவை சாத்தியப்படாத போக்கையே காணமுடிகிறது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு நீண்டகாலமாக நாட்டில் இயங்கி வருகின்றது. முறைப்பாடுகளும் குவிந்த வண்ணமே உள்ளன. விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாத இக்கட்டான நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் வேலியே பயிரை மேயும் நிலையையே வெளிப்படையாக காணமுடிகிறது. இந்த விடயத்தில் புதிய உபாயங்கள் கண்டறியப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலை முற்றாக ஒழிப்பதற்கு முறையான கொள்கைத்திட்டமொன்றின் அவசியம் உணரப்பட்ட நிலையிலேயே அரசாங்கம் சரியானதொரு கொள்கைத் திட்டத்தை வகுப்பதற்கு திட்டமிட்டு 2017இல் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்குமாறு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு பொறுப்புச் சாட்டியது. அதனடிப்படையில் தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு வருடங்களை இதற்காக செலவிட்டு நுணுக்கமாக ஆராய்ந்து இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு பொதுநிருவாக அமைச்சுடன் இணைந்து மக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்திருப்பதாக ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்திருக்கின்றார். நாடளாவிய ரீதியில் 50க்கும் மேற்பட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. மக்கள் பிரதிநிதிகளிடம் ஆலோசனைகள், பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டம் கடந்த மாதம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்திடமிருந்தும் காத்திரமான ஆலோசனைகள் பெறப்பட்டதன் பின்னரே திட்டம் முழுமைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய செயற்பாட்டுத்திட்டம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளன. சட்டம் கடுமையாக்கப்படுவதும் செற்பாட்டுத் திட்டம் வகுக்கப்படுவதும் இந்த விடயத்தில் நிரந்தரமான தீர்வைக்கொண்டு வரும் என எதிர்பார்க்க முடியாது. எமது நாட்டில் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பது முதல் பாரிய தொழில் முயற்சிகளை முன்னெடுப்பது வரையிலான சகல விடயங்களிலும் இலஞ்சம் தலை விரித்தாடிக் கொண்டிருக்கின்றது. பல இடங்களிலும் உள்ளக மோசடிகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்தச் சவால்களை வெற்றிகொள்ள வேண்டுமானால் உறுதியான நடவடிக்கை அவசியமானதாகும்.

எந்தக் கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் இலஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க முடியாத சவாலுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையே காணப்பட்டது. ஒவ்வொரு அரசும் ஊழலை ஒழிக்கப் பல்வேறு திட்டங்களையும் வகுத்தது. இதற்கான பிரதான காரணி அரசியல் தலையீடாகும். முதலில் கையாளப்பட வேண்டிய விடயம் அனைத்து விடயங்களிலுமிருந்து அரசியல் தலையீட்டை முற்றாக அப்புறப்படுத்துவதாகும். கட்சி அரசியல் விடயத்தில் ஒரு தரப்பை மட்டும் குற்றம் சுமத்தவில்லை சகல அரசியல் கட்சிகளுக்குள்ளும் இது ஊடுருவிப் போயுள்ளது.

அரசியல் தலையீட்டிலிருந்து விடுபடாத வரை இந்த ஒழுக்கக்கேட்டை இல்லாதொழிக்க முடியாது என்பதை உறுதிபடத் தெரிவிக்கின்றோம். இந்த நாட்டில் வாழும் மக்கள் எந்தக் காரியத்தையும் அரசியல் வாதிகளையும், அரச அதிகாரிகளையும் முறைப்படி கவனித்தால் காரியம் கைகூடிவிடும் என்ற மனோபாவத்துடனேயே காணப்படுகின்றனர்.


பொதுவாக கிராம சபை உறுப்பினர், கிராமசேவை அதிகாரி உட்பட அதி உயர் மட்டத்தில் பதவி வகிப்பவர்கள் அனைவர் மீதும் இந்த சந்தேகம் உள்ளது.

முதலில் இந்த நிலையிலிருந்து நாம் மாற வேண்டும். மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சகல தேவைகளையும், வசதி வாய்ப்புகளையும் அனைத்து மக்களும் சமமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசின் திட்டம் அமையப்பெற்றால் இந்த அவலத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்கக்கூடியதாக இருக்கும்.

இலஞ்சம் ஊழல் ஒழிப்புக்கான நடவடிக்கைகளை வலிமைப்படுத்தும் நோக்கிலேயே இந்த தேசிய செயற்பாட்டுத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. வரவேற்கத்தக்க விடயமே. எதிர்வரும் 18 ஆம் திகதி இதனை வெளியிடும் போது மக்களை அறிவுறுத்தும் நடவடிக்கையும் மிக முக்கியமானதென்பதை மறந்துவிடக்கூடாது. அரச அதிகாரிகள் அரசியல்வாதிகள் மீதான அறிவுறுத்தல்களும் கடுமையாக்கப்பட வேண்டும். தவறிழைக்கும் அதிகாரிகள் அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் காட்டப்படக்கூடாது.

எவரானாலும் பாரபட்சம் பாராது தண்டிக்கப்பட வேண்டும். யாரையும் பாதுகாக்க முற்படக்கூடாது: சட்டங்களை வகுப்பதால் மட்டும் ஆபத்திலிருந்து நாட்டை மீட்க முடியாது. சட்டம் ஒழுங்காகப் பேணப்படுவதில் உறுதியான நிலைப்பாடு பேணப்படவேண்டும். புதிய செயற்பாட்டுத்திட்டமாவது சரியான பயனைக் கொண்டதாக அமையும் விதத்தில் செயற்படுத்துவதே மிக முக்கியமானதாகும்.

# போதைவஸ்து பாவனை களையப்பட வேண்டும்



இன்று இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள மிகப் பெறும் சவாலாக போதைப் பொருள் பாவனை மாறி வருகிறது. போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்கள தரவுகளின்படி 2016 ஆம் ஆண்டு போதைப்பொருள் தொடர்பான குற்றச் செயல்களில் கைதானோர் தொகை சுமார் 80.000 பேர். அவர்களில் 35 வீதத்தினர் ஹெரோயின் வைத்திருந்ததாகவும், 60 வீதம் (சுமார் 48,000) பேர் கஞ்சா தொடர்பாகவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மேல் மாகாணத்தில் 60 வீதத்தினரும் கொழும்பில் 43 வீதத்தினரும் கைதாகியுள்ளனர், சனத்தொகையில் ஒரு இலட்சம் பேருக்கு சுமார் 250 நபர்கள் கைதாகும் நிலையில் அதுபோன்று எத் தனை வீதத்தினர் கைதாகாமல் தப்பித்துக் கொள்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது:

இலங்கையில் பல பாரிய குற்றச் செயல்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டாலும் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது 35 வருடங்களுக்கு முன்னரே நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் அது நிறைவேற்றப்படாமல் ஆயுட்கால சிறைத் தண்டனையாக மாறிவிடுகிறது.

அண்மைக் காலமாக இலங்கையின் சகல பிரதேசங்களிலும் அதிகரித்து வரும் போதைவஸ்து வர்த்தகம் மற்றும் பாவனையை ஒழிப்பதற்கு திடசாங்கற்பம் பூண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போதைவஸ்து ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணியூடாக பல்வேறு தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நாடு முழுவதும் சுற்றிவளைப்புக்களை துரிதப்படுத்தி அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்காது போதைவஸ்து வர்த்தகர்கள் மற்றும் கடத்தல்காரர்கள் கைது செய்யப்படுகின்றனர். பெரும் தொகை போதைப் பொருளும் கைப்பற்றப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2019 பெப்ருவரி வரை சுமார் 5000 கிலோ கிராம் கேரள கஞ்சாவை கைப்பற்றிய பொலிசார் சுமார் 52892 நபர்களை கைது செய்துள்ளனர். அதே காலப் பகுதியில் சுமார் 1000 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளை கைப்பற்றியதோடு 40,000 நபர்களையும் கைது செய்துள்ளனர்.

அண்மையில் டுபாயில் கைதான போதைவஸ்து வர்த்தகத்தின் முக்கிய புள்ளி எனக் கருதப்படும் மாகந்துற மதுஷ் மற்றும் அவரது சகாக்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் பலரை இலங்கை பொலிஸார் கைது செய்து வருகின்றனர். நாளுக்கு நாள் அது குறித்த தகவல்கள் வெளிவந்த வண்ணமிருப்பது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எந்தவொரு வியாபாரத்திற்கும் அதற்குரிய சந்தைகள் கட்டாயமாகும். போதைவஸ்து சந்தைப் படுத்துவோர் குறிப்பாக கட்டிளம் பருவத்தில் உள்ள பதின்ம வயதினரையே இலக்கு வைக்கின்றனர்.

பதின்ம வயதினர் பாடசாலை பருவத்தில் இருப்பவர்கள் ஆதலால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விதவிதமான வழிவகைகளில் போதைப் பழக்கங்களை அறிமுகப்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. மென்பானங்கள், இனிப்பு வகைகள், டொபி, சொக்கலேட், ஸ்டிக்கர் வகைகள், சிகரட் வகைகள் மருந்து மாத்திரைகள் என பல்வேறு வடிவங்களில் மாணவர்கள் போதைப் பழக்கவழக்கங்களிற்கு அடிமைகளாக்கப்படுகின்றனர்.

மதுபானம், புகையிலை மீதான வரிகளினூடாக இலங்கை அரசுக்கு வருடாந்தம் 143,000 கோடி (143 பில்லியன்) ரூபா வருவாய் கிடைக்கின்ற அதேவேள்ள புகைத்தல் மற்றும் மதுபான பாவனைகளால் ஏற்படும் சுகாதார பிரச்சினைகள், நோய்களைக் குணப்படுத்த அரசிற்கு 212,000 கோடி ரூபா (212 பில்லியன் ரூபாய்கள்) செலவாகின்றன.

இலங்கை சனத்தொகையில் சுமார் 40 வீதமானோர் மதுபாவனை பழக்கத்தைக் கொண்டுள்ளனர். அது தொடர்பான நோய்களால் வருடாந்தம் சுமார் 7500 பேர் இறக்கின்றனர். அந்த வகையில் அதே வேளை சனத்தொகையில் சுமார் 30 வீதமானோர் புகைக்கின்றனர். எனவே போதை தரும் பொருட்களின் பாவனையை மக்கள் மத்தியில் இருந்து ஒழிக்க அனைவரும் கடுமையாக பாடுபட வேண்டும்.

**ஷெய்க் மஸிஹுத்தீன் இனாமுல்லாஹ்**

facebook

# திருடனை கண்டுபிடிப்பது எப்படி?



அக்பர் ஒரு நாள் பீர்பாலுடன் தோட்டத்தில் உலவிக் கொண்டு இருந்தார். திடீரென அக்பர் தன் வலது கை மணிக்கட்டை இடது கையால் அழுத்தித் தேய்க்க ஆரம்பித்தார். அவருடைய மணிக்கட்டு வீங்கியிருந்தது. அதைப் பார்த்த பீர்பால் சிரித்தார்.

நான் வலியால் துடிக்கையில் உனக்கு சிரிக்கத் தோன்றுகிறதா? என்று அக்பர்.

மன்னிக்கவும் பிரபு! நான் ஏன் சிரித்தேன் என்று சொல்கிறேன் என்ற பீர்பால் தோட்டத்திலிருந்த எலுமிச்சைச் செடிகளிலிருந்து ஒரு பழம் பறித்து வந்து அதை வெட்டி, அதன் சாறை வீக்கத்தில் தடவித் தேய்த்தார். வலி சற்றுக் குறைந்தாற்போல் போல் தோன்ற, அக்பர் எலுமிச்சைச் சாறை குளவிக் கொட்டின இடத்தில் தடவினால் வலி குறையும் என்பது இன்று தான் புரிந்தது என்றார்.

உங்களுக்கு அந்த உண்மை இன்று புரிந்தது. எனக்கு இன்று மற்றொரு உண்மை புரிந்தது. அதனால்தான் சிரித்தேன் என்றார் பீர்பால். அது என்ன? என்று அக்பர் கேட்டார்.

பிரபு! உங்களைக் கண்டு நாங்கள் அனைவரும் பயபக்தியுடன் மரியாதை செய்கிறோம். ஆனால் ஒரு அற்பக் குளவி தைரியமாக உங்களிடம் பறந்து வந்து உங்களைக் கொட்டிவிட்டு சென்றுவிட்டதே! அதை நினைத்துத் தான் சிரித்தேன் என்றார் பீர்பால்.

நீ சொல்வது உண்மைதான்! என்னுடைய அதிகாரம் மனிதர்களிடம்தான் செல்லும். குளவி, வண்டு, எறும்பு ஆகிய சிறிய ஜீவராசிகள் கூட என்னைக் கண்டு பயப்படுவதில்லை. ஏனெனில் அவை தங்களுக்கு ஏதாவது ஆபத்து என்று தோன்றினால் மட்டுமே தங்கள் தற்காப்புக்காக சண்டையிடுகின்றன. ஆனால் மனிதன் மட்டுமே ஆசை, பொறாமை, கோபம் ஆகிய உணர்ச்சிகளால் தூண்டப்பட்டு, மற்றவர்களைத் துன்புறுத்துகிறான். அவ்வாறு குற்றமிழைப்பர்களை தண்டிப்பதுதான் என் கடமை? என்றார்.

அவ்வாறு உரையாடிக் கொண்டே தோட்டத்தின் சிறிய கதவருகே வந்தனர். பிறகு கதவைத் திறந்து கொண்டு அரண்மனைக்குச் செல்ல நினைக்கையில் கதவருகே ஒரு பொற்கொல்லன் நின்று கொண்டு இருந்தான். அக்பரைக் கண்டதும் பணிவுடன் வணங்கினான்.

யார் நீ? என்றார் அக்பர். நான் பொற்கொல்லன் பஜ்ரிதாஸ்! என்றான் அவன். உனக்கு என்ன வேண்டும்? என்று அக்பர் கேட்டார்.

ஐயா, என் வேலைக்குத் தேவையான அனைத்துத் தங்கத்தையும் ஓர் இரும்பு அலுமாரியில் பத்திரமாக் வைத்திருப்பது என் வழக்கம்! பூட்டியிருக்கும் அந்த அலுமாரியின் சாவி என்னிடம்தான் இருக்கும். நான் வேலையில் மும்முரமாக இருந்தால், என் பணியாளர்கள் நால்வரில் ஒருவனை அனுப்பி, அலுமாரிப் பூட்டைத் திறந்துத் தங்கத்தை எடுத்து வரச் சொல்வேன். என்னுடைய நான்கு பணியாளர்களும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்றான்.

சரிதான் அப்படியிருந்தும் உன்னுடைய அலுமாரியிலிருந்து தங்கம் திருட்டுப் போய்விட்டதாக்கும் உன் பணியாளர்களில் ஒருவன் தான் அதைத் திருடியிருக்க வேண்டும். அப்படித்தானே? என்றார் அக்பர்.

ஆம் பிரபு என்றான் பஜ்ரிதாஸ், திருட்டுப் போனத் தங்கத்தின் மதிப்பு என்ன? என்று அக்பர் கேட்டார். பத்து தங்கக் கட்டிகள் அவற்றின் விலை ஒரு லட்சத்திற்கும் மேல்! என்றான் பஜ்ரிதாஸ்.

கவலைப்படாதே மூன்றே நாளில் உன் தங்கம் உனக்குத் திரும்பிக் கிடைத்து விடும் என்று செல்லிவிட்டு அக்பர் நகர்ந்தார். பிரபு? குற்றவாளியைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை யாரிடம் தரப் போகிறீர்கள்? என்று பீர்பால் கேட்டார்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1666

Search for people, places and things


### கமில்ரன்

தவறை மன்னித்துப் பாருங்கள்... நீங்களும் மன்னிக்கப்படுவீர்கள்... அதையே மறந்து பாருங்கள் வாழும் வரை நினைக்கப்படுவீர்கள்



### சுரேஸ்குமார்

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்திடினும் கட்டியிழுத்து கால் கை முறிந்து அங்கம் பிளந்து இழந்து துடித்திடினும் பொங்கு தமிழை மறப்போனோ



### நிர்மலன்

பணம் முக்கியம்... அதைவிட முக்கியம் அது வரும் வழி... அது வரும் வழியை வைத்துத்தான் அது செல்லும் வழி தீர்மானிக்கப்படுகிறது




### ஆதவன் ஆதி

தூக்கணாங்குருவிக்கூடு, கறையான் புற்று, சிலந்திவலை ஆகியவற்றை எல்லோராலும் செய்ய முடியாது, எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது. எனவே நானே வல்லவன் என்று யாரும் தம்பட்டம் அடித்துக்கொள்ளக்கூடாது



### டிலக்ஷன்

கடன்-பகை-நோய் இந்த மூன்றும் இல்லாமல் குடிசையில் வாழ்ந்தாலும் அவனே கோடீஸ்வரன்



### குருபரன்

துரோகிகளிடம் கோபம் இருக்காது கோபப்படுகிறவர்களிடம் துரோகம் நிச்சயமாக இருக்காது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 173

# நலம் தந்திடுமே நடைப்பயிற்சி



தினமும் தவறாது நடைப் பயிற்சி செய்துவரின் உடல் எடை குறைந்திடும். இதய அடைப்புக்கள் இல்லாது போகும். தசைகள் தாமேவலுப் பெறும். குருதி அழுத்தம் சீராகும். சலரோகம் கட்டுப்பட்டு சாதாரணகுருதி வெல்ல நிலமை ஏற்படும். இவ்வாறாக பல நன்மைகள் எமக்கு நடைப் பயிற்சியினால் ஏற்படு கின்றன என்பதுநாம் அறியாததல்ல.

உடல் இயங்கு நிலை குறைவாகவுள்ள ஒருவரில் குருதிச் சுற்றோட்டம் உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீராககிடைப்பதில்லை. இயங்கு நிலையில் தன் செயற்பாடுகளை உற்சாகமாகமேற்கொள்ளும் ஒருவரில் கால்களில் குருதித்தேக்கம் குறைந்து உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் குருதிபம்பப்படும். அதேசமயம் நுரையீரல்களும் நன்கு விரிந்து அதிகளவு காற்றை உள்ளிளுப்பதனால் குருதியில் அதிகளவு பிராண வாயு கரைந்து உடலின் அனைத்து உறுப்புக்களுக்கும் போதியளவு ஒக்சிசன் கிடைக்கப் பெறும் அதன் காரணமாக செயற்திறன் அவற்றின் ஆரோக்கியமாகவும் சீராகவும் இடம் பெறும் என்பதனையும் நாம் அறிவோம்.

தினமும் காலை இமாலை வேளைகளில் நல்லகாற்றோட்டமுள்ள இடத்தில் குறைந்தது முப்பது நிமிடங்கள் வரை நடைப் பயிற்சிசெய்து வரின். உடலில் சேர்ந்துள்ள கொழுப்பு எரிக்கப் பட்டு. உடல் எடைகுறைந்து ஆரோக்கியமான வசீகரமான கட்டான உடலமைப்பு ஏற்படும். உள்ளத்தில் புத்துணர்ச்சியும் ஆக்கசக்தியும் அதிகரிக்கும். குருதிநாளங்களில் படிந்துள்ள கொழுப்பினளவு குறைவதனால் குருதிச்சுற்றோட்டம் சீராகின்றது. இதய த்திற்கான வேலைப் பளு குறைகின்றது. இதன் காரணமாக குருதி அழுத்தம் அதிகரிக்காது. சாதாரண ஆரோக்கிய நிலையில் பேணப்படுவதனால் இதய ஆரோக்கியம் அதிகரித்து. ஆயுள் அதிகரிக்கும். நடைப் பயிற்சியின் போது கை வீசி உடல் வியர்க்கும் வேகத்தில் நடத்தல் வேண்டும். கைவீசி நடந்தால் கலோரிகள் எரியும் என்பதையும் நாம் அறிவோம்.

நடைப்பயிற்சியின் நிறைவில் நடைப்பயிற்சியினால் ஏற்பட்டகளைப்பை நீக்குவதற்காக உற்சாகபானம் அருந்துதல்இபுகை கப்பிடித்தல். அதிக சீனி/இனிப்பு சேர்க்கப்பட்ட பானங்களை அருந்துதல். எண்ணெயினுள் அமிழ்த்திப் பொரிக்கப்பட்ட கோதுமை மாவுப் பண்டங்களை உண்ணுதல் போன்றவை எதிர்பார்க்கப்படும் நன்மைகளுக்கு பதிலாக, எதிரான விளைவுகளையேஏற்படுத்திடும் என்பதனை நாம் அறிவோம். இப்பயிற்சியினால், தொற்றா நோய்களின் தாக்கங்களிலி ருந்தும் அவற்றின் பாரதூர மானபின் விளைவுகளிலிருந்தும் மீளும் வழி உண்டு என்பதனைநாம் உணர்ந்தாலும் அதனை செய்வதற்கு நாம் ஒவ் வொருவரும் ஆர்வத்துடனும் இருந்தாலும் அதற்கான நேரத்தை கண்டுபிடிப்பதே முயல் கொம்பாக உள்ளது. இயந்திரத் தன்மையான இலத் திரனியல் வாழ்வியல் நடை முறையில் நடைப் பயிற்சிக் கான நேரம் காணாமலேயே போய் விட்டது.

நடைமுறைப்பயிற்சி செய்வதற் கான நேரமுகாமைத்துவம் செய்ய இயலாதவர்களும். நேரத்தை கண்டு பிடிக்க முடியாதோரும் நடைமுறைப் பயிற்சியினைதம் வாழ்வுடன் இயைந்ததாக மாற்றியமைத்திட்டால், நீண்டு நிலைக்கக் கூடிய நடைமுறைப்பயிற்சியின் நன்மைகள் அனுபவித்திடமுடியும்.

எம் வாழ்வுடன் இணைந்ததாகவும் இயைந்ததாகவும் கீழ்வரும் செயன்முறைகளை இயலுமானவரை நடைமுறைப் படுத்திட முயற்சித்துப் பார்க்கலாமே!

### வேலைத் தளங்களில் செய்யக் கூடிய நடைப்பயிற்சிகளான

- மாடிகளில் ஏறு வதற்கு மின் உயர்த்திகளையோ எஸ்கலேற்றர்களை யோபாவிக்காது மாடிப்படிகளில் நடந்தே சென்றடைவோம்.
- சென்றடையவேண்டிய இடங்களுக்குசற்றுதூ ரவாக வேவாக னங்களை நிறுத்தி இறங்கிக் கொள்வோம்.
- மதிய உணவின் பின்பு 10நிமிடங்கள் வரைமேலதிகமாக இருப்பின் இபடிகளில் ஏறிநடந்திடுவோம்.
- தேனீர் இடைவேளைகளில் இயலுமானவரை நடக்க முற்படுவோம்.
- வேலையிலீடுபட்டிருக்கும் போதுநீர் அருந்த விரும்பும் போதெல்லாம் எழுந்து சிறிதுதூரம் நடந்திடுவோம்.
- சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் ஒரே இடத்தில் இருப்பதற்குபதிலாக எழுந்து நடந்திடலாம்.
- சக உத்தியோகத்தரை அழைப்பதற்கு பதிலாகவோ அல்லது e-mail செய்வதற்கு பதிலா கவோஅவரது மேசை வரை நடந்திடலாம்.
- சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வேகநடை செய்வதை பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.
- தொலைபேசியில் உரையாடிடும் போது எழுந்து நின்று உரையாடலாம்.
- புத்தகம் படிக்கும் போது இஒவ்வொரு ஆறு பக்கங்களுக்கும் ஒருதடவை எழுந்து சிறு தூரம் நடந்திடலாம்.
- கை தொலைபேசி களில் உரையாடும் சந்தர்ப்பங்களில் எழுந்து நின்றோ நடந்து கொண்டோ உரையாட முயற்சிக்கலாம்.
- ஓய்வு அறைக்கு செல்லும் சந்தர்ப்பங்களில் நீண்ட தூரம்நடக்கக்கூடிய பாதையை தெரிவுசெய்திடலாம்.

### வீட்டில் செய்யக்கூடியநடைப்பயிற்சிகள்

- தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும் போது ஒவ்வொருவர்த்தக இடை வேளையின்போது எழுந்து நடந்திடலாம்.
- மனதிற்கு விருப்பமான பாடல்களுக்கு நடனம் ஆடிடலாம்.
- ஒவ்வொருநாளும் 15-30 வரையாவது நிமிடங்கள் உங்கள் பிள்ளைகளுடன் விளையாடிடலாம்.
- விறாந்தையில் வேக நடை செய்திடலாம்.
- அருகிலுள்ளகோயில்களுக்கு நடந்தே சென்று வந்திடலாம்.
- அருகிலுள்ள கடைகளில் பொருட்களைவாங்க நடந்தே சென்று வந்திடலாம்.

இவ்வாறாக கிடைக்கின்ற சிறுசிறு சந்தர்ப்பங்களையும் நடைப் பயிற்சிசெயதிடவா ய்ப்பாக பயன்படுத்திடலாம்.

நடைப்பயிற்சியின் நன்மைகளைஅனுபவரீதிய ில் நம் முன்னோர் நன்குஅறிந்திருந்தனர் போலும். அதனால் தான் அயல் ஆலயங்களுக்கு நடந்து செல்லுதல். தூரத்து கோயில்களுக்குபாத யாத்திரை செய்தல். ஆலய வீதிகளை ஒறறை எண்ணில் சுற்றி வருதல் போன்ற நடை முறைகளை ஏற்படுத்தியிருந்தார்கள் போலும்.

நடைப்பயிற்சியின் மூலம் இதயநோய்கள். மூட்டுநோய்கள். முதுகு நோவுகள் போன்ற தொற்றா நோய்கள் குறைவடைகின்றன என அறிந்தோம். இதன் காரணமாக அரசிற்கு வருடாந்த தேசிய சுகாதார சேவைகளுக்காக ஒதுக்கப்படுகின்ற கோடிக்கண க்கான பணம் மீதப்படுத்தப்படும். ஆரோக்கிய மனிதவளங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். இதன் காரணமாகத்தான் லண்டன் போன்ற வளர்ச்சியுற்ற நாடுகளில் நகரங்களைதிட்டமிடும் போது, வாகனப்போ க்குவரத்துக்களை மட்டுப்படுத்திமக்கள் நடப்பத ற்கும் துவிச்சக்கர வண்டிகளை செலுத்துவதற்குமான பாதை



களை உருவாக்கு கின்றார்கள்.பூங்காக்களை சுற்றியும் இப்பாதைகளை வடிவமைப்பதில்கவனம் செலுத்துகினறனர். இவ்வாறான நகரத்திட்டங்கள் இமக்களுக்கு வாழ்வுடன் இயைந்ததான உடற் பயிற்சியினை அவர்கள் உணராமலேயே தந்து விடுகின்றது.

Dr.P.ஜெசிதரன்
சுகாதாரவைத்திய அதிகாரி
யாழ்.மாநகர சபை

நன்றி :- நீரிழிவுக் கைநூல் யாழ். நீரிழிவுக் கழகம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்